QD / 154 / NEWS / 2017

නවමණි යති අන්ත

NAVAMANI WEEKLY

நவமணி

தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

2017 மார்ச் 31 – ஏப்ரல் 02 விலை: 30/-

ஹிஜ்ரி 1438 ரஜப் பிறை 02 - 04 பக்கங்கள் 16 மணி 10 ஒளி 014

வர்த்தமானி இரத்து; உயர்மட்டக் கூட்டம்

■ சுஜப். எம் காசிம்

விலப்பத்து புதிய வர்த் தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நாளை ஜனாதி பதி உயர்மட்டக் கூட்டமொன்றை ஏற்பாடு

15 >>>>>

பிரகடனத்தை இரத்து செய்யுமாறு

சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

முஸ்லிம்களின் காணிகள் வர்த்தமானியில் உள்வாங்கப்படா

ஜனாதிபதி செயலகம் விளக்கம்

முஸ்லிம்களுக்கு சட்டரீ தியாக உரிமையுள்ள எந்த முஸ்லிம் மத ஸ்தலங்களோ, கிராமங்களோ அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமா னியின் மூலம் அரசுக்கு பெற் றுக்கொள்ளப்பட மாட்டாது என ஜனாதிபதி செயலாளர் கையொப்பமிட் டுள்ள கடிதத்தில்

15 >>>>>

■ சுஜப். எம் காசிம்

முசலிப் பிரதேச மக்களின் வாழ்விடங்களையும் அவர் களுக்கு வாழ்வாதாரங்கள் வழங்கும் நிலங்களையும் கபளீகரம் செய்யும் புதிய வர்த்தமானிப் பிரகடனத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமெனவும் இல்லா விட்டால் நாடளாவிய ரீதியில் பாரிய போராட் டங்களை தொடர்ச்சியாக

15 >>>>>

ஜனாதிபதி அதிகாரங்கள் குறைக்கப்படக் கூடாது

ஹெலஉறுமய வலியுறுத்து

■ அ. அருண் பிரசாந்த்

புதிய அரசமைப்பில் ஜனாதிபதிக்குரிய நிறை வேற்று அதிகா ரங்களை மேலும் குறைப்பதற்கு

15 >>>>>

வசீம் கொலை: அநுரவுக்கு மீண்டும் மறியல்

றக்பி விளை யாட்டு வீரர் வசீம் தாஜு தீன் கொலை சம்பவம் தொடர்பில்

15 >>>>>

நிறைவுக்கு வந்தது விமலின் உண்ணாவிரதம்

■ அ. அருண் பிரசாந்த்

ஒன்பது நாட்களாக தொடர்ச்சியாக உண் ணாவிரதமிருந்துவந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் ஒருங்கி ணைந்த எதிரணியின் பாராளுமன்ற உறுப்பின ருமான விமல்வீரவன்ஸ நேற்றைய தினம் தனது

15 >>>>>

ஐ.தே.க. வின் முக்கிய பதவிகளில் மாற்றம்

ஐக்கிய தேசியக் கட்சியின் செய லாளர் பதவி உட்பட முக்கிய பதவி கள் பல, விசேட சிற்றுரத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு கடந்த 30 வருடங் களின் பின்னர், கட்சியில்

15 >>>>>

MOULANA TRAVELS
[நம்பிக்கையின் நட்சத்திரம்]
IATA
• COLOMBO : 0720 999 555
• BATTICALOA : 0720 999 666
• KANDY : 0720 999 777
[உம்றா குழுக்கள் பயணம்]
April 8th, 9th, 10th, 12th, 15th & 16th
Medina - Ramada Hotel
Makkah - Badr Al Massa Hotel
Sri Lankan Buffet
2016 Luxury buses
No 195, Galle Road, Bambalapitiya | Email: info@moulanatours.com Website: www.moulanatours.com
(சென்றவரை கேளுங்கள் செல்வோம் வாருங்கள்)

புதிய மகளிர் சேமிப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்தி பரிசுகளை பெற்றிடுங்கள்!
இச்சலுகை 2017 ஏப்ரல் 08 வரை அல்லது பரிசுகள் கையிருப்பிலிருக்கும் வரை மாத்திரம்
இச்சலுகை அமானா மகளிர் சேமிப்புக் கணக்குரிமையாளரால் அறிமுகப்படுத்தப்படுபவர்களுக்கு மாத்திரமே.
அறிமுகப்படுத்தும் 2 கணக்குகளுக்கு 6 கோப்பைகள் கொண்ட ஓஸ் கிரிம் கோப்பை தொகுதி
அறிமுகப்படுத்தும் 10 கணக்குகளுக்கு டேபல் டொப் BBQ தொகுதி அல்லது கேக் மிக்சர்
அறிமுகப்படுத்தும் 5 கணக்குகளுக்கு இலத்திரனியல் கேத்தல்
புதிய கணக்குரிமையாளருக்கு 6 கோப்பைகள் கொண்ட கோப்பி கோப்பை தொகுதி
அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk
இது உங்கள் வங்கி
Amãna Bank

- சஞ்சாரி

கும்பலா மீனை உண்ட பூனைபோல் விமல் இன்று அனுபவிக்கிறார்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ரஷ்ய விஜயம், ரஜனிகாந்தின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச வின் உண்ணாவிரதம், மன்னாரில் முஸ்லிம்கள் பாரம்பரியமாக வாழ்ந்த காணிகளை உள்ளடக்கி பாதுகாப்பு வன பிரதேசமாக பிரகடனப்படுத்தல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடக்கூட்டம், பசீர் சேகுதாவூத் குற்றத்தடுப்புப் பிரிவில் வாக்குமூலமளித்தல் மற்றும் மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் பற்றிய அறிவிப்பு காரணமாக அரசியல் களம் இவ்வாரத்தில் சூடாகவே இருந்தது.

ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம் பிராந்திய அடிப்படையில் மிக முக்கியமான ஒரு விஜயம் என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும். 44 வருடங்களுக்குப் பின் இலங்கைத் தலைவர் ஒருவருக்கு ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு கிடைத்த அழைப்பு முக்கியம் வாய்ந்தது. ரஷ்ய - இலங்கை இராஜதந்திர உறவுக்கு 60 வருடங்கள் நிறைவு பெறுவதும் இந்த ஆண்டிலே இடம்பெறுகின்றது. ஜனாதிபதியை உள்ளடக்கிய தூதுக்குழு சாதாரண விமானம் ஒன்றிலே ரஷ்யாவுக்கு பயணமானார்கள். மொஸ்கோவுக்கு நேரடி விமானம் இல்லாமையால் துபாய் சென்று அங்கிருந்தே தூதுக்குழுவினர் பயணித்தனர். ஜனாதிபதிக்கு கிரெம்ளினில் உச்ச வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த விஜயத்தின் போது ரஷ்ய ஜனாதிபதி புடின் ஜனாதிபதிக்கு ஒரு பழைய பெட்டியை கிரெம்ளினில் கையளித்தார். ஜனாதிபதியை இது வியப்பில் ஆழ்த்தியது. பெட்டியைத் திறந்து பார்த்தபோது மாணிக்கக் கல் பதித்த வாள் போன்ற ஒன்று அதிலிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது இலங்கையிலிருந்து லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஏல விற்பனை ஒன்றில் கூடுதல் விலை கொடுத்து ரஷ்யா இதனை வாங்கியிருந்தது. இதனை கொழும்பு தேசிய நூதனசாலையில் வைப்புச் செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். கண்டி யுகத்தைச் சேர்ந்த இந்த வாள் 1906ஆம் ஆண்டளவில் ரஷ்யாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதனைக் கையளிக்கும்போது இது பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதியும் தூதுக்குழுவினரும் பார்க் ஹயட் ஹோட்டலிலேயே தங்கியிருந்தனர். ஊடகவியலாளர்களும் இதிலே தங்கியிருந்தனர். ஜனாதிபதி அடிக்கடி ஊடகவியலாளர்களை புறம்பாக சந்தித்து நாட்டு நடப்புக்கள் பற்றி கலந்துரையாடியுள்ளார். ஊடகவியலாளர் ஒருவர் ஜனாதிபதியிடம் அமைச்சரவை மாற்றம் பற்றிக் கேள்வி எழுப்பினார்.

'ஜனாதிபதி அவர்களே அமைச்சரவை மாற்றம் நடைபெறும் என மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறியபோது. மக்கள் எதிர்பார்ப்பு அதுவாக இருந்தால் அதனை நிறைவேற்றாது இருக்க முடியாதே என ஜனாதிபதி பதிலளித்துள்ளார். விஜயத்தின் ஒரு கட்டத்தில் ஜனாதிபதி ஊடகவியலாளர்களுக்கு விருந்துபசாரம் ஒன்றையும் வழங்கினார்.

விமானத்தில் காணாமல் போன பிரதி அமைச்சரின் பேனா பற்றி ஜனாதிபதி கூறிய கதை

ஜனாதிபதி அங்கு வரும்போது அமைச்சர் தயாசிறி விஜேசேகர மற்றும் பிரதி அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ ஆகியோர் ஊடகவியலாளர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர். பிரதி அமைச்சர் அருந்திக விமானத்தில் தனது பேனா ஒன்று காணாமல் போனது பற்றி கூறிக் கொண்டிருந்தார்.

காணாமல் போன பேனா பெறுமதி மிக்கதா? என ஜனாதிபதி அருந்திகவிடம் கேட்டார்.

ஓரளவு பெறுமதி மிக்கதுதான் என்று அருந்திக தெரிவித்தார்.

அப்படியாயின் அந்த விமானச் சேவைக்கு அறிவியுங்கள். சில நேரம் அவர்கள் தேடித் தருவார்கள் என்று கூறிய ஜனாதிபதி, சுகாதார அமைச்சராக தான் இருக்கும் போது விமானத்தில் காணாமல் போன தனது பேனா ஒன்று பற்றிக் குறிப்பிட்டார். ஆனால், அது கிடைக்கவில்லை. காணாமல் போனது ஸ்ரீலங்கன் விமானத்தில் அல்லதானே அதனால் அறிவித்தால் கிடைக்க இடமுண்டு என்று ஜனாதிபதி கூறியதும் அங்கிருந்த எல்லோரும் சிரித்தனர். இந்த விஜயத்தில் இணைந்து கொண்டிருந்த அமைச்சர் தயாசிறி ஜயசேகர தனது அறைக்கு ஊடகவியலாளர்களை அழைத்து நள்ளிரவு வரை பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்.

ஹபரதுவ கூட்டத்துக்கு எதிர்பார்த்த சனம் வரவில்லையா?

கூட்டு எதிர்க்கட்சியினர் கடந்த ஞாயிறன்று ஹபரதுவையில் கூட்டம் ஒன்றை நடத்தினர். கூட்டத்தின் ஏற்பாட்டாளர்களாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான ரமேஸ் பதிரன, மொஹான் பி சில்வா மற்றும் மாகாண சபை உறுப்பினர் சம்பத் அதுகோரல ஆகியோர் இரவு பகலாக உழைத்தனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்துக்கு வரும்போது இரவு உதயமாகி கொண்டிருந்தது. அவரை வரவேற்பதற்காக ரமேஸ் மொஹான் சம்பத் ஆகியோர் மேடையின் முன் வெற்றிலை வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தார்கள். எனினும் மஹிந்த வந்த கார் மேடைக்கு பின்னாலே நிறுத்தப்பட்டது. மஹிந்த மேடையில் ஏறி மக்களுக்கு கைகூப்பி வணக்கம் செய்யும் போது மேடைக்கு முன்பிருந்த எம்.பிக்கள் அவசர அவசரமாக மேடைக்கு ஏறி மஹிந்தவுடன் மக்களுக்கு வாழ்த்துக் கூறுவதற்கு இணைந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி இங்கு காலியின் புத்திரர்கள் தம்முடன் இருப்பது பற்றிக் குறிப்பிட்டார். ரிச்சட் பதிரன, அமரசிறி தொடங்கொட ஆகியோரின் மகன்மார் என்னுடனே இருக்கிறார்கள். அது மட்டுமன்றி காலியின் சகல புத்திரர்களும் என்னுடனே இருக்கிறார்கள் என சம்பத்தினைக் குறிப்பிட்டுக் கூறினார்.

ஹபராதுவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் எண்ணிக்கை பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சி முக்கியஸ்தர்கள் பங்குபற்றிய கூட்டத்திலும் கருத்துத் தெரிவித்துள்ளார். உளவுப் பிரிவின் தகவல்படி, கூட்டத்திற்கு சுமார் ஏழு அல்லது எட்டாயிரம் பேரளவே கலந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. ஏற்பாட்டளார்கள் சுமார் 40,000 பேர் கலந்து கொண்டதாகக் கூறுகிறார்கள். மாகாணசபை உபதலைவர் சம்பத் அதுகோரள அமைப்பாளராக இருக்கும் ஹினிதும தொகுதியிலிருந்து மட்டும் 3000க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டதாக கூறப்படுகின்றது. 27ஆம் திகதி இரவு நடைபெற்ற முதலமைச்சர்களது கூட்டத்தில் ஹபரதுவ கூட்டம் தோல்வியில் முடிந்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசில் சிலர் விமலை மையவாடிக்கு எடுத்துச் செல்ல காத்திருக்கிறார்கள் என்கிறார் மஹிந்த

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச சிறையில் நடத்திவந்த உண்ணாவிரதம் நாட்டில் கூடுதலான கவனத்தை ஈர்த்த ஒரு செய்தியாகவுள்ளது. விமல் வீரவன்சவுக்கு பிணை பெறுவதற்கு கூட்டு எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் விமல் வீரவன்சவின் மகளது சுகவீனத்தினை காட்டி மேற்கொண்ட முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இது தொடர்பாக தாக்கல் செய்த மனுவின் தீர்ப்பு மூன்றாம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. தனது தந்தை தொடர்பான மனத்தாக்கத்துக்குள்ளாகியுள்ள விமல் வீரவன்சவின் மகள் நோயுற்று ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இத்தகவல் கிடைத்ததும் பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, பிரசன்ன ரணவீர, விமலவீர திசாநாயக்க ஆகியோர் ராகம வைத்தியசாலைக்குச் சென்று மகளின் நிலையைக் கேட்டறிந்தனர். பிரசன்ன ரணவீரவும் உதய கம்மன்பிலவும் வாட்டுக்குள் பிரவேசித்த போது அவர்களுடன் வந்த திகாமடுல்ல மாவட்ட எம்.பி. விமலவீர திசாநாயக்கவை காணவில்லை. விமலவீரவன்சவுக்கு ஏதும் நடந்து விட்டதோ என்று பதற்றத்துடன் இருவரும் மீண்டும் வெளியே வந்து அவரைத் தேடினர். வெளியே வந்தபோது கண்ட காட்சி இருவருக்கும் சிரிப்பினையே ஏற்படுத்தியது. ஆஸ்பத்திரிக்கு வெளியே இருக்கும் சிறிய கடை ஒன்றுக்கருகிலிருந்து அவர் வெற்றிலை சாப்பிடுவதற்கு தயாராகிக் கொண்டிருப்பதனையே அவர்கள் கண்டனர்.

விமல் வீரவன்சவுக்கு விடுதலை பெறுவது தொடர்பாக கூட்டு எதிர்க்கட்சி சார்பில் தினேஸ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, பந்துல குணவர்தன, விமலவீர திசாநாயக்க ஆகியோர் சபாநாயகர் கரு ஜயசூரியவைச் சந்தித்துரையாடினர்.

விமலின் நிலை கவலைக்கிடமானது, ஏதாவது செய்தாக வேண்டும் என சபாநாயகரிடம் தினேஸ் குணவர்தன கூறினார். நீதிமன்றத்திலிருக்கும் ஒரு பிரச்சினையில் நாம் எப்படித் தலையிடுவது என்று சபாநாயகர் கேள்வி எழுப்பினார். விமல் கூறுவது, இது போன்று சமாந்தரமான குற்றச்சாட்டுக்கள் உள்ள ஏனையவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. விமலுக்கு மட்டும் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று தினேஸ் தெரிவித்தார். இங்கு பார்க்க வேண்டியது பிள்ளையின் நிலை. பிள்ளை மானசீகமாக வீழ்ந்துள்ளார் என வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார். தன்னால் ஏதும் செய்ய முடியுமா எனத் தேடிப் பார்ப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் 77ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றபோது அமைச்சர் கபீர் ஹாசிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அமைச்சரும் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகரும் கேக் வெட்டுவதை படத்தில் காணலாம்.

இச்சந்தர்ப்பத்தில் அங்கிருந்த விமலவீர திசாநாயக்கவை விளித்து, சபாநாயகர் உங்களுடன் நான் பேசத்தான் இருந்தேன். பாராளுமன்றத்தில் எப்போதும் பிரதமருக்கு கள்வன் கள்வன் என்று கூறுவது நல்லதல்லவே என்று புத்திமதியாகக் கூறினார். அதற்குப் பதிலளித்த விமலவீர, சபாநாயகர் அவர்களே, கோபப்பட வேண்டாம். அரச தரப்பினர் எங்கள் மஹிந்த சேரிற்கு கள்வன் கள்வன் என்று கூறுகிறார்கள். அவர் களவு செய்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளதா? எனக் கூறிக்கொண்டு போகும்போது அது பற்றி மேலும் பேசுவதனை சபாநாயகர் தவிர்த்துக் கொண்டார்.

இதேநேரம், மஹிந்த ராஜபக்ஷ கூட்டு எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலரை அழைத்து விமல் வீரவன்சவின் நிலைபற்றிக் கலந்துரையாடியுள்ளார். விமலின் உண்ணாவிரதம் பெரும் பிரச்சினையாகவுள்ளது. அரசாங்கத்திலுள்ள சிலர் விமலை மையவாடிக்கு எடுத்துச் செல்லக் காத்திருக்கிறார்கள். இதற்கு இடமளிக்க முடியாது. ஏதாவது செய்தாக வேண்டும் என மஹிந்த கூறினார். விமலுக்காக மைத்திரியையும் ரணிலையும் நான் சந்திப்பதற்கு தயார் என மஹிந்த கூறினார். இதன்படி கூட்டு எதிர்க்கட்சியினர் ஜனாதிபதியையம் பிரதமரையும் சந்தித்துரையாடினர். நீதித்துறை செயற்பாடாக இருப்பதனால் இதில் தலையிடுவதில் பிரச்சினை இருப்பதாகத் தெரிவித்துள்ளார். எப்.சி.ஐ.டி. தான் வீரவன்சவுக்கு பிணை வழங்க எதிர்ப்புத் தெரிவிப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேநேரம், உண்ணாவிரதம் இருப்பதற்காக பிணை வழங்கக் கூடாதென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். சிறையிலுள்ள எல்லோரும் உண்ணாவிரதமிருந்தால் என்ன செய்வது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் பிணையில் விடுதலையாவதற்காக உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டாலும் அதற்கு இசைந்தாலும் அது பிழையான முன்னுதாரணமாக அமையும் என்றும் பத்தரமுல்லையில் நடந்த செய்தியாளர் மகாநாட்டில் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கும்பலா மீனை உண்ட பூனை போல் விமல் இன்று அனுபவிக்கிறார்...

ஜே.வி.பி. செய்தியாளர் மகாநாட்டில் அநுர குமாரவிடம் இது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் இப்படிப் பதிலளித்தார்.

கேள். - இது மனிதாபிமானப் பிரச்சினை. உங்களது கட்சியின் பழைய போராளி இன்று சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்து நிலைமை மோசமாகவுள்ளது. அவரது நிலையை தேடிப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க மாட்டீர்களா?

பதில் - எமது நாட்டில் சட்டம் அமுலாகும் போது வளவ்வையில் உரிமையாளருக்கு ஒரு விதத்திலும் அங்கு வேலை செய்யும் பொடியனுக்கு மற்றொரு விதத்திலுமே நடக்கும். விமல் இதனைப் புரிந்து கொள்ள வேணடும். கள்ளனை கைது செய்தால் அந்தக் கள்ளனுக்கு மற்றைய கள்வர்கள் வெளியிலிருப்பதாக தர்கிக்க முடியாது. கும்பலா மீனை உண்டால் அனுபவி பூனையே என்பதனையே விமலுக்கு கூற வேண்டியுள்ளது. விமல் ராஜபக்ஷக்களை லவ் பண்ணியதற்கு ராஜபக்ஷக்கள் விமலை லவ் பண்ணவில்லை. அவருக்காக வெளியிலுள்ளோர் போராட வேண்டும் ஆனால் இன்று விமலுக்காக அவரே போராட வேண்டிய நிலை.

பரீட்சையில் சித்தியடையாத வயதில் மூத்த பெண்ணின் மனஉறுதி

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இம்முறை 8224 பேர் ஒன்பது ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர். குறுகிய காலத்தில் பரீட்சை முடிவுகளை வெளியிட்டு சாதனை படைத்துள்ள பரீட்சைத் திணைக்களம் கல்வி அமைச்சரதும் பெற்றார் மற்றும் மாணவர்களது பாராட்டுக்குள்ளாகியுள்ளது. வெளிவந்த பரீட்சை முடிவுகளில் மாணவிகளே கூடுதலான திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர். முதல் தரத்துக்கு தெரிவான 10 மாணவர்களில் மூன்று பேர் மட்டுமே ஆண்களாவார்கள். வழமைக்கு மாறாக இம்முறை கூடுதலான மாணவர்கள் கணிதப் பாடத்தில் சித்தி பெற்றுள்ளனர்.

இதேநேரம், கடந்தாண்டு பரீட்சையில் தோற்றிய வயது கூடியவரான என். அத்தபத்து கல்யாணவதி என்ற 74 வயதுடைய பெண் தான் தோற்றிய இரு பாடங்களிலும் சித்தியடையவில்லை. இவர், தமிழ் மற்றும் தகவல் தொடர்பாடல் ஆகிய பாடங்களில் தோற்றியிருந்தார். அது பற்றி கருத்துத் தெரிவித்த கல்யாணவதி, எந்த உபகார வகுப்புகளுக்கும் போகாதே பரீட்சைக்கு தோற்றினேன். கிடைத்த முடிவுக்காக நான் தளர்ந்து விடப் போவதில்லை. இந்த தோல்வி எனது எதிர்கால வெற்றிக்கான வழியாகும். இந்த வருடம் டிசம்பரில் இந்த இரு பாடங்களுடன் ஹிந்தி மொழிப் பாடத்திற்கும் தோற்றவுள்ளேன். இந்தப் பாடங்களுக்கு உபகார வகுப்புகளுக்குச் சென்று எப்படியாவது சித்தி பெறுவேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் தேசிய தின நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ

பாகிஸ்தானின் 77ஆவது தேசிய தினத்தினை கொண்டாடும் முகமாக வர்ணமயமான வரவேற்பு நிகழ்வொன்று பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தினால் கொழும்பில் மார்ச் 23 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் பொதுத் துறை நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இந்நிகழ்வினை சிறப்பித்திருந்தார்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 23 ம் திகதியானது துணைக்கண்டத்தின் முஸ்லிம்கள் தங்களுக்கென ஓர் தேசத்தினை உருவாக்குவதற்கு ஒரணியாக திரண்ட நாள் இதுவென இந்நிகழ்வில் விருந்தினர்களை வரவேற்று உரையாற்றுகையில் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர்.ஜெனரல். (ஓ) ஷையத் ஷகில் ஹிசைன் அவர்கள் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பொருளாதாரமானது வளர்ச்சிப் பாதையில் பிரயாணிப்பதுடன், பிராந்தியத்தின் பொருளாதார சக்தியாக உருவாகிவருகின்றது. சீன-பாகிஸ்தான் பொருளாதார தாழ்வாரத்திட்டம், பாகிஸ்தான்-சீன உறவுகள் என்பன சமூக-பொருளாதார அபிவிருத்தியில் பிராந்தியத்தின் தலைவிதியினை மாற்றும் சக்தியாக அமைந்துள்ளது. அத்துடன் இப்பாரிய திட்டம் நிறைவுபெற்றதும் பாகிஸ்தானிற்கு மட்டுமல்ல இலங்கை உட்பட பிராந்தியத்தின் அனைத்து நாடுகளிற்கும் செழிப்பு மற்றும் முன்னேற்றத்தினை அளிக்கவுள்ளதாக பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் கூறினார்.

இலங்கை-பாகிஸ்தான் இருதரப்பு உறவுகள் குறித்து குறிப்பிடுகையில், இருநாட்டு மக்களிடமும் காணப்படும் ஆழ்ந்த பரஸ்பர அன்பானது இருதரப்பு விஷேட உறவிற்கு மூலப்பொருளாக காணப்படுகின்றது. அத்துடன் இவ்வுறவுகள் பொதுத்தன்மை, உலக சமாதானத்தின் நன்மதிப்புகளுடன், பௌத்தம், இஸ்லாம் மதங்களினால் போதிக்கப்படுகின்ற அன்பினால் மேலும் வலுப்பெற்றுள்ளது என அவர் கூறினார்.

இலங்கை பாகிஸ்தான் ஆகியன எப்பொழுதும் பன்முகத்தன்மை மற்றும் தாரள அடிப்படையிலான பரஸ்பர ஒத்துழைப்புடன் கூடிய நெருக்கமான இருதரப்பு உறவினைக் கொண்டுள்ளன. இலங்கையில் வெசாக் பண்டிகை காலத்தில் தக்ஷிலாவில் காணப்படுகின்ற புனித பௌத்த பண்டங்களை இலங்கைக்கு அளித்தமைக்காக இதன்பொழுது நன்றிகளை இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட அமைச்சர். கபீர் ஹாசிம் தெரிவித்தார். அத்துடன் கடந்த வருடம் பாகிஸ்தானில் இடம் பெற்ற வெசாக் பண்டிகையில் இலங்கையும் கலந்துகொண்டமை நன்மதிப்பளிப்பதாக அவர் கூறினார்.

பாகிஸ்தானிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் மானிய நிதியுதவி மற்றும் இலங்கை இராணுவ படைகளுக்கு அளிக்கப்படுகின்ற பயிற்சிகள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், நிவாரண உதவிகள், கல்வித்துறைக்கான புலமைப் பரிசில்கள், இலங்கையின் விளையாட்டு வீரர்கள், மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல், போன்ற பல்வேறு உதவிகளை வழங்கிவருகின்றமைக்காக அமைச்சர். கபீர் ஹாசிம் பாகிஸ்தானிய அரசிற்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். மஹிந்த வந்ததும் எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவரும் எல்லோருடனும் நெருக்கமாக உறவாடியதனை அவதானிக்க முடிந்தது.

தேர்தல்களை ஒத்திப்போடுவது பற்றிய சந்தேகத்தை களைந்த ஜனாதிபதி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஷ்ய விஜயத்தை முடித்து நாடு திரும்பிய பின் இரு சந்தர்ப்பங்களில் ஸ்ரீ.ல.சு.க கட்டுப்பாட்டிலுள்ள முதலமைச்சர்களைப் புறம்பாகவும் ஸ்ரீ.ல.சு.க. அமைச்சர்களை புறம்பாகவும் இவ்வாரத்தில் சந்தித்தார். திங்களன்று இரவு முதலமைச்சர்கள் மற்றும் மாகாண அமைச்சர்களையும் ஜனாதிபதி சந்தித்தார். முதலமைச்சர்களை விளித்துப் பேசிய ஜனாதிபதி, சில முதலமைச்சர்கள் எனக்கு நம்பிக்கையாக இருக்கிறார்கள். சிலர் அப்படியில்லை மற்றும் சிலர் எவருடனும் இல்லாமலிருக்கிறார்கள். நான் இது பற்றிக் குறிப்பிட்டு கட்சியில் உள்ள நெருக்கடி பற்றிக்கூற விரும்பவில்லை. வடமத்திய சப்ரகமுவ கிழக்கு மாகாண சபைகளின் பதவிக்காலம் செப்டெம்பருடன் முடிகின்றது. மாகாண சபைத் தேர்தல் சட்டப்படி நடத்தப்பட வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி, உள்ளூராட்சித் தேர்தலும் நடத்தப்பட வேண்டும் என்று கூறினார். தேர்தல்கள் ஒத்திப்போடப்படும் என பரவிய வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்து ஜனாதிபதி உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படும் என அறிவித்தார்.

செவ்வாயன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களது கூட்டம் ஜனாதிபதியின் இல்லத்தில் நடைபெற்றது. சுதந்திரக் கட்சி மேதினம் ஏற்பாடு பற்றி கலந்துரையாடப்பட்டது. ஒவ்வொரு அமைப்பாளரும் 500 பேரை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்ய வேணடுமென இக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

நான் ஒரு நல்ல யு.என்.பி. காரன் என கூற வெட்கப்படுகின்றேன்

கடந்த 26ஆம் திகதி ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜித ஹேரத் முள்ளிக்குளம் திரிகூட்டான் மடு பிரதேசங்களுக்குச் சென்றிருந்தார். பிரதேசத்தில் வாழும் தமிழ், சிங்கள மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்தப் பிரச்சினைகள்பற்றி கவனஞ் செலுத்தினார். இப்பிரதேச மக்கள் காணிப் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். 50 வருட காலமாக இங்கு வசித்து வரும் மக்கள் நிரந்தர தொழிலோ, வருமான வசதிகளோ இல்லாததனால் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வாழ்ந்து வருகிறோம் என்று தெரிவித்தனர். பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதேநேரம் விஜித ஹேரத் இப்பகுதிக்கு வந்திருப்பதனைக் கேள்விப் பட்டு பிரதேச வியாபாரி ஒருவர் அங்கு வந்தார். பாராளுமன்ற உறுப்பினரை சிரித்த முகத்துடன் வரவேற்ற அவர், எம்.பி.யிடம் சொல்வதற்கு வெட்கமாக இருக்கின்றது நான் ஒரு நல்ல யு.என்.பிகாரன் என்று கூற முற்பட்ட போது ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள் என விஜித ஹேரத் கேட்டார். யு.என்.பி. காரர்கள் என்ற வகையில் நாம் பெரும் எதிர்பார்ப்பு வைத்திருந்தோம் இப்போதென்றால் எமது அரசு எனக் கூறுவதற்கு வெட்கப்படுகின்றோம் என்றார்.

அநுர குமார குவைத்தில்

(பா.மலரம்பிகை)

ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க 'வெளிநாட்டில் நாம்' என்ற அமைப்பினால் விடுவிக்கப்பட்ட அழைப்பின் பேரில் வியாழனன்று அதிகாலை குவைட் நாட்டிற்கு பயணமானார்.

'வெளிநாட்டில் நாம்' என்ற அமைப்பினால் வெள்ளிக்கிழமை(31) நடைபெறவுள்ள மாநாடொன்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவே அங்கு சென்றார்.

வெளிநாட்டிலுள்ள இலங்கை பிரஜைகளின் வாக்குரிமைகளை பெற்றுகொள்ளல், ஒய்வூதிய சம்பள உரிமையை வெற்றிகொள்ளல், இலங்கைக்கு வருகை தரும் பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளுக்கு அரச பாடசாலையை பெற்றுகொடுத்தல், தாம் பாவித்த வாகனங்களை வரித்தீர்வையுடன் இலங்கைக்கு கொண்டு வரல், குறைந்தளவு கொடுப்பனவுகளை பெறுவோரின் பிரச்சினைகளை இராஜதந்திர முறையில் அணுகுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக மேற்படி மாநாட்டில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதிவரை இத்தாலியில் நடைபெறும் மாநாட்டுக்கு அநுர திஸாநாயக்க மற்றும் நலிந்த ஜயதிஸ்ஸ செல்லவுள்ளனர்.

பாடசாலைகளை நிரல்படுத்த சுயாதீன விசாரணைக் குழு

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்

பீ.எப்.எம் றிஷாட்

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் நிரல்படுத்துவதற்கு சுயாதீன விசாரணைக்குழுவொன்று எதிர்வரும் 3 மாதங்களில் ஸ்தாபிக்கப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். ஒரு சில தனியார் பாடசாலைகள் அரசினால் வழங்கப்படுகின்ற பாட திட்டங்களுக்கு மேலதிகமாக மாணவர்களுக்கு மேலதிகமான பாடத் திட்டங்கள் கட்டாயப்படுத்தப்பட்டு கற்பிக்கப்படுவதாகவும் பெற்றோர்கள் குற்றம்சுமத்தியுள்ளனர். இந்நிலையில் இதுதொடர்பில் கல்வி அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாறான நிலைமைகள் சர்வதேச பாடசாலைகள் மற்றும் அரச உதவி பெறும் தனியார் பாடசாலைகள் ஆகியவற்றில் தற்போது அதிகளவில் காணப்படுகின்றமையால் சுயாதீன விசாரணைக்குழுவொன்றின் கீழ் அவற்றை தரப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அரச, அரச உதவி பெறும் தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகள் அனைத்தும் இப்புதிய திட்டத்தின் கீழ் தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பேண்தகு இலங்கை தேசிய நிகழ்வு ஆரம்பம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எண்ணக்கருவிற்கு அமைய நச்சுத் தன்மையற்ற நாடு மூன்று வருட கால செயற்திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்பட பேண்தகு இலங்கை தேசிய நிகழ்வு இன்று(31) முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று 10 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ள துடன், எதிர்வரும் 4 ஆம் திகதி வரை முற்பகல் 9 மணி முதல் இரவு 10 மணிவரை பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்படும்.

சிறந்த வாழ்க்கை முறை எனும் தொனிப்பொருளில் முதல் நாள் கண்காட்சிகள் நடைபெறவுள்ளதுடன், ஆரோக்கியமான மனிதர்கள், நச்சுத்தன்மையற்ற உணவு மற்றும் சிக்கனமான குடிமக்கள் எனும் ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை பிரதிபலிக்கும் வகையில் அமையவுள்ளன.

அத்தோடு, பேண்தகு வாழ்வாதாரம் எனும் தொனிப்பொருளில் இரண்டாம் நாள் கண்காட்சியும், இயற்கையை பேணுவோம் எனும் தொனிப்பொருளில் மூன்றாம் நாள் கண்காட்சியும், சிறந்த அடிப்படை எனும் தொனிப்பொருளில் நான்காம் நாள் கண்காட்சியும், சிறந்த சமூகம் என்பதே இறுதிநாளுக்கான தொனிப் பொருளாகவும் வைக்கப்படவுள்ளன.

நாட்டின் சகல அச்ச மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பங்களிப்பில் ஊடக வலயமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், அங்கிருந்து பல நேரடி ஒளிப்பரப்புக்களும் நடைபெறவுள்ளன.

கீத் நொயார் வழக்கு ஜூன் மாதம் ஒத்திவைப்பு

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கையெழுத்திடப்பட்ட விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், குறித்த ஆறு பேரும் மற்றொரு வழக்கில் சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதால் அவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த சம்பவத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவ புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் சபை உறுப்பினர் உட்பட ஐந்து இராணுவ வீரர்களுக்கு இவ்வாறு பிணை வழங்கப்பட்டதோடு, ஒருவருக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைப்படி ஆறு பேரையும் விடுவிக்கும் படி கல்கிஸ்ஸ மேலதிக நீதவான் லோசனா அபேவிக்ரம உத்தரவிட்டார். இருப்பினும் ஊடகவியலாளர் உபாலி தென்னகோன் தாக்குதல் சம்பவ வழக்கில் சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் கீத் நொயார் நீதிமன்றத்துக்கு வருகைதராமையால் சந்தேகநபர்களின் அடையாள அணிவகுப்பும் பிற்போடப்பட்டது.

كلية المؤمنات العربية للبنات
அல் மு:மினாத் மகளிர் அறபுக் கல்லூரி
AL-MU'MINATH GIRLS ARABIC COLLEGE
KURUGODA-AKURANA, SRI LANKA. T.P : 081-2301690

புதிய மாணவிகள் அனுமதி - 2017

அக்குறணை குருகொடையில் இயங்கிவரும் அல்-மு:மினாத் மகளிர் அரபுக் கல்லூரிக்கு ஷரீஆ மற்றும் ஹிப்ழ் பிரிவுகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஷரீஆப் பிரிவுக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட மாணவிகள் விண்ணப்பிக்க முடியும்.

01. 2017.01.01 ஆம் திகதிக்கு 17 வயதிற்கு மேற்படாதிருத்தல்.
02. க.பொ.தா. (சா.த) பரீட்சையில் தோற்றி குறைந்தது மூன்று திறமைச்சித்திகளுடன் இஸ்லாம், கணிதம், தமிழ் மொழி உட்பட ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

ஹிப்ழ் பிரிவுக்கு
01. 2017.01.01ம் திகதிக்கு 12 வயது பூர்த்தியாகி இருத்தல் வேண்டும்.
02. 2017ம் வருடம் ஆண்டு 8இக்குச் சித்தியடைந்திருத்தல்.

மேற்குறித்த இரு பிரிவுகளுக்கும் கீழ்வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும்.
03. அல்-குர்ஆனை மிழையின்றி சரளமாக ஓதத் தெரிந்திருத்தல்.
04. நன்நடத்தை, நல்லொழுக்கம், ஆரோக்கியம் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடைய மாணவிகள் கையலிலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய நீண்ட தபாலுறை ஒன்றை அனுப்பி அல்லது கல்லூரிக்கு நேரில் வந்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 2017.04.15

குறிப்பு :- ஷரீஆப் பிரிவில் இஸ்லாமிய ஷரீஆப் பாடத்திட்டத்துடன் க.பொ.தா. உயர்தரம் (கலைப்பிரிவு) பாடங்களும் அத்துடன் கணணித் துறையில் உயர்கல்விகளைத் பெறுவதற்கு உதவக் கூடிய அடிப்படை கணணிப் பாடநெறி, ஆங்கிலம், சிங்கள மொழி விருத்திக்கான கற்கை நெறி, தையல், சமையல் என்பனவும் கற்பிக்கப்படும். அத்தோடு அல்அஸிம் பரீட்சை, இஸ்லாமிய சன்மார்க்க (அஹ்ஸனியா) இறுதிச்சான்றிதழ், இஸ்லாமிய தீனியாத் (தர்மாச்சார) சான்றிதழ் பரீட்சைகள் ஆகியவை கற்பிக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
பனிப்பாளர்,
அல்-மு:மினாத் மகளிர் அறபுக் கல்லூரி, குருகொடை, அக்குறணை
AL-MU'MINATH GIRLS ARABIC COLLEGE
KURUGODA-AKURANA, SRI LANKA. TEL : 0812301690 / 0714471847 / 0777432424

இக்ரஃ தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்
பேருவளை
புதிய மாணவர் அனுமதி – 2017
ஆறு மாதகால தொழிற்பயிற்சியுடன் முழுநேர பயிற்சி நெறிகள்

Two and a Half Years
1.1 Air Conditioning & Refrigeration Mechanic
1.2 Electronic Equipment Repairer (Radio, TV & Allied)
1.3 Automobile Mechanic
1.4 Automobile Electrician
1.5 Electrician

One and a Half Years
2.1 Welder -(Gas, Arc, TIG & MIG)
2.2 Plumber (Domestic & Industrial)

One Year
3.1 Aluminium Fabricator

G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், இஸ்லாம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பின் இரண்டரை வருட பயிற்சி நெறிகளுக்கும், ஏனையோர் ஏனைய பயிற்சி நெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப படிவங்களையும் மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ள...

Rs. 100/= விண்ணப்ப கட்டணம்

1.A . "இலங்கை வங்கி" (BOC) யில் வைப்புச் செய்து ("IQRAA T.T.I TRUST" A/C No: 0072454679) Slip ஐ அல்லது
1.B. .IQRAA T.T.I TRUST என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளையை (Money Order) (Post Office : Beruwala), ரூபா 10.00 முத்திரை ஒட்டப்பட்ட 9 X 4 அங்குல சுய முகவரியிடப்பட்ட கடித உறையுடன் அருகிலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
அல்லது
2. நிறுவனத்திற்கு நேரில் சமூகமளிக்க வேண்டும்

அனுப்ப வேண்டிய முகவரி
The Director,
IQRAA TECHNICAL TRAINING INSTITUTE,
P.O.Box : 12,
Beruwala.

விண்ணப்ப முடிவுத் திகதி 30.04.2017

Phone: Gen: 034-2276271 Director: 034-2276620 E-mail: iqraatti@sltnet.lk
(மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனம்)

முஸ்லிம் கட்சிகளின் கூட்டு மு.கா.வை பின்னடையச் செய்யுமா?

எம்.எம்.நூறுல்ஹக்

தேர்தல்கள் வருமா என்ற கேள்விக்கு உறுதியான விடை தெரியாது பலரும் பலவிதமான அபிப்பிராயங்களை தெரிவித்துவந்த நிலையிலும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சில கட்சிகள் முன்வைத்திருந்த நிலையிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த வருடத்தில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் நடாத்தப்படுமென்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி அதிகாரத்தின் கீழுள்ள ஏழு மாகாண சபைகளின் முதலமைச்சர்களை தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கடந்த 27.03.2017இல் சந்தித்தபோதே வெளிப்படுத்தியுள்ளார்.

தமது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலமிக்கதொரு கட்சியாக இத்தேர்தல்களில் களமிறங்க தயாராக இருக்க வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனால் தேர்தல் வருமா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றார் ஜனாதிபதி என்பதில் மாற்றுக் கருத்துக்கள் எழ முடியாது.

அதேநேரம் எல்லை நிர்ணய முறைப்பாட்டு விசாரணைக்குழுவின் அறிக்கை அரசாங்க அச்சகத்தினால் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழி மூலமான அச்சிடல் பணிகள் நடைபெறுவதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் செய்தியும் ஜனாதிபதியின் அறிவிப்பும் இந்த வருடத்தில் தேர்தல்கள் வரும் என்ற சாத்தியத்தை வலுப்படுத்துகின்றது.

இன்றைய அரசாங்கத்தில் மற்றொரு பிரதானமாக அங்கம் வகிக்கின்ற ஐ.தே.க. கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இப்பத்தி எழுதும் வரை(30) தேர்தல் குறித்து எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை.இதனால் தேர்தல் வருமா என்கின்ற கேள்வியை இன்னொரு சாராரிடம் ஏற்படுத்தியிருக்கின்றது.

இன்று நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டங்களின் அடிப்படையில் உள்ளூராட்சி தேர்தல் வட்டார முறைப்படியும் மாகாண சபைத் தேர்தல்விகிதாசார தேர்தல் முறைமையின் அடிப்படையிலுமே நடைபெற முடியும் என்பதை நாம் அறிவோம். இதில் ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை வட்டார முறையில் வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மனம் விரும்பி ஒப்புக் கொள்ளாத நிலை இருந்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

வட்டார பிரிப்பில் ஐ.தே. கட்சிக்கு பாதகமான எல்லைப்பிரிப்பு செய்யப்பட்டுள்ளது என்கின்ற குற்றசாட்டும் முஸ்லிம்களுக்குரிய விகிதாசாரத்திற்கு ஏற்ற வகையில் அவர்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படும் வகையில் உள்ளூராட்சி வட்டார எல்லை வகுப்பு நடைபெறவில்லை என்கின்ற கருத்தாடலும் இது விடயத்தில் இருந்து வருகின்றது.

தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பதற்கு அப்பால் தேர்தல் ஒன்று வருமானால் அது கிழக்கு மாகாண அரசியல் களத்தில் எவ்வாறான மாற்றங்களை அல்லது தாக்கங்களைச் செலுத்தும் என்பது குறித்து ஆராய்வதும் அதிலும் குறிப்பாக முஸ்லிம்களுடைய அரசியல் நிலவரம் எவ்வாறு அமையக்கூடும் என்பது பற்றியும் அலசுவதே இக்கட்டுரையின் பிரதான இலக்காகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் புதிய முறைப்படி வட்டார அமைப்பில் நடைபெறுமானால், அது ஐ.தே.கட்சி, ஸ்ரீ.ல.சு.கட்சி - ஐ.ம.சு.கூட்டமைப்பு என்ற இரு பிரதான கட்சிகளுக் சிங்கள மக்களைப் பெரும்பான்மையாக கொண்ட பிரதேசங்களில் அதிக உள்ளூராட்சி மன்றங்களை ஐ.தே.கட்சியும் அதனை அடுத்து ஸ்ரீ.ல.சு.கட்சி- ஐ.ம.சு.கூட்டமைப்பும் கைப்பற்றிக்கொள்ளக் கூடிய சாத்தியமே தெரிகின்றது.

தமிழ் மக்களை பெரும்பான்மையாக கொண்ட உள்ளூராட்சி மன்றங்களை த.தே.கூட்டமைப்பு கைப்பற்றும் என எதிர்பார்க்க முடியும். ஆனால் முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்கள் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நழுவி புதிதாக உருவாகும் என நம்பப்படுகின்ற முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பிடம் போய்விடுமா என்கின்ற ஒரு கேள்வி பலராலும் இன்று எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்று உருவாகுவதில் இரண்டுவித மான கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உள்ள டக்கி ஏனைய முஸ்லிம் கட்சிகளும் இணைந்துகொள்ளுதல் என்பதாகும். இதனை அண்மையில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூட ஆதரித்து கருத்து வெளியிட்டிருப்பது மட்டுமன்றி அதன் இயங்குதலுக்கும் தன்னால் பாரிய பங்குகளை ஆற்ற தான் காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இன்னொரு வகையில் தேசிய காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளை பிரதானமாகக் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசினால் எடுத்தெறியப்பட்டிருக்கும் அதன் முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலி, முன்னாள் தவிசாளர் பஷீர் வேதுதூவூத் போன்றோர்களையும் உள்ளடக்கிய ஒரு கூட்டு முன்னணியை உருவாக்குவது என் பதாகும். இதில் ஹிஸ்புல்லாஹ்வையும் இணைத்துக்கொள்வதாக முன்னர் கூறப் பட்டு வந்தாலும் பிந்திய ஹிஸ்புல்லாஹ் வின் கூற்றின் பிரகாரம் அவர் இதற்கு தமது இசைவை தெரிவிக்காமையை நம்மால் உணர முடிகிறது.

மு.காவைப் பொறுத்தவரை முஸ்லிம் கட்சிகளின் கூட்டுக்குள் செல்ல வேண்டிய எந்த தேவையையும் அவசியத்தையும் அது கொண்டிருக்கவில்லை. இதனால் இவ்வாறான கூட்டு ஒன்றுக்கு அவர்கள் வருவதற்கு இலகுவில் சம்மதிக்கப் போவதில்லை.

ஏனென்றால் முஸ்லிம் மக்களிடம் அவர்களுக்கு இருந்து வருகின்ற ஆதரவுத் தளம் என்பது பெரிதாக பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக வெளிப்படையில் சொல்ல முடியாதுள்ளது.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களுக்கான பிரச்சினைகளில் சரியான தீர்வுகளை ஈட்டிக்கொள்வதற்கான உண்மைக்குண்மையான முன்னெடுப்புக்களை எடுக்கவில்லை என்கின்ற ஒரு குற்றச்சாட்டு அக் கட்சிக்கு எதிரான அரசியல் வாதிகளினால், முன்வைக்கப்பட்டு வருவதனால் அந்த உண்மை நிலை மக்கள் மயப்படுவதிலிருந்து தூரமாகிச் செல்கின்றது. மு.காவின் இந்த சமூக விரோதப் போக்கு நிலையதாக்குதலானது என் பதை ஒரு சில முஸ்லிம் புத்திஜீவிகள் முன்வைத்தாலும் அந்தக் கருத்து மு.காவுக்கு பூரண ஆதரவாளர்களின் கருத்துக்களோடு ஒத்துக் காணப்படுவதினால் மு.கா.வின் கட்சி விசுவாசத்தின் அடிப்படையின் முன்னால், இந்த நிஜமான கருத்துக்கள் எடுபடாது போய் விடுகின்றன. சொல்பவர்களுக்கு அப்பால் சொல்லப்படும் செய்தி வலுவிழந்து போய்விடுகின்றது. இந்நிலை மு.காவைப் பொறுத்தவரை அவர்கள் பக்கத்தை வலுப்படுத்துவதில் பெரும்பங்காற்றி வருகின்றது.

மற்றொன்று இந்த முஸ்லிம் கட்சிகளின் கூட்டு என்பது மு.காவை அடியோடு அழித்துவிட்டு வேறு சிலரின் அரசியல் உயர்ச்சியை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கை என்ற மு.காவின் ஆரவார பிரசாரங்கள் முஸ்லிம் மக்களிடையே ஆழமாக பதிவாகிக் கொள்கின்றது. இதனால் உருவாகும் என நம்பப்படுகின்ற முஸ்லிம் கூட்டமைப்பு முஸ்லிம் சமூகத்துக்கு எதிரானது என் கின்ற ஒரு எண்ணப்பாட்டையும் விதைத்துக் கொண்டிருக்கின்றது.

இங்கும் நமது மக்கள் தவறாக புரிவதினால்தான் மு.கா.வின் செயலுக்கும் அல்லது இயங்குதலுக்கும் இயலாமையிலிருந்து பேசுவதை ஒரு கட்சிக்கு எதிரானது என்று நம்புவதை விடுத்து, அது ஒரு கூட்டுமொத்த சமூகத்திற்கும் எதிரானது என்று நம்புகின்ற விவேகத்திற்கு புறம்பான நமது பலவீனம் மு.கா.விற்கு சாதகமாக இருந்து வருகின்றது.

இத்தகைய நிலைகளை வெல்வதற்கு புதிதாக உருவாகும் என நம்பப்படுகின்ற முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு முதலில் இது முஸ்லிம் காங்கிரஸை அடியோடு துடைத்தெறிவதற்காக உருவாக்கப்படுவதல்ல என்பதை நம்பவைக்க வேண்டும். இன்று முஸ்லிம் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளுக்கு சரியான முறையில் தேவையான தீர்வுகளை அடையாளப்படுத்தப்பட்டு அவை வெளிப்படையாக முன்னிறுத்தப்பட்டு அதன் அவசியத்தை நமது மக்களிடையே வேரூன்றச் செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதனை உணர்ந்துகொள்பவர்களாக நமது மக்கள் மாறும்போதுதான் மு.கா.வின் கையறு நிலை நம்மை முன்னேற்றாது என்பது உணரப்பட முடியும்.

இன்று மு.கா முஸ்லிம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் இருந்து எவ்வாறான நழுவல் போக்குகளை கையாள்கின்றது என்பதை ஆதாரபூர்வமாக மக்கள் மயப்படுத்த வேண்டிய பொறுப்பை திறம்பட செய்யக்கூடிய வர்களாக தங்களை அடையாளப்படுத்த வேண்டும். இதற்கு நம் மத்தியில் இன்று இருக்கின்ற மு.காவுக்கு எதிரான அரசியல் வாதிகள், மற்றும் அண்மையில் மு.காவினால் புறந்தள்ளப்பட்ட அரசியல்வாதிகள் எவ்வளவுதான் காரணங்களை அடுக்கிச் சொன்ன போதிலும் அதனை முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானோர் நம் பவில்லை என்ற செய்திதான் நிதர்சனமானது.

இதனால் மு.காவை தவிர்த்த முஸ்லிம் கட்சிகளின் கூட்டு எந்த அளவு முஸ்லிம் களிடம் விசுவாசிக்கப்படப்போகிறது என் பது ஒரு பலத்த கேள்விக்குறியதாகவே இன்று காணப்படுகின்றது. இதனைக் கட்டுடைப்பு செய்கின்ற பலத்த பிரசாரங்களும் நம்பமான முகங்களின் புதிய வருகைகளும் இணைந்து நியாயங்களை உணருகின்றவர்களாக நமது மக்களை மாற்றியமைக்கப்பட வேண்டிய கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டிய தேவை இருப்பதை நாம் மறுக்க முடியாது.

இவ்வாறான நிலைப்பாடுகளின் காரணமான இன்றைய சூழலில் முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த முஸ்லிம் கட்சிகளின் கூட்டுக்கு அதிக செல்வாக்குகளை உள்ளூராட்சி தேர்தல் காலங்களில் அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே அமைய முடியும்

என்றே எம்மை அனுமானிக்க வைக்கின்றது. இதே நிலையைத்தான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது முஸ்லிம் கட்டமைப்பு சந்திக்க வேண்டியிருக்கும்.

குறிப்பாக முஸ்லிம்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களில் புதிய வேட்பாளர்களை கூட்டு முன்னணி அதிகமாக அறிமுகம் செய்யக்கூடும். இவர்களின் குடும்பப் பலம், பண பலம், தனிப்பட்ட ஆளுமை என்பன முஸ்லிம் காங்கிரஸ் நிறுத்துகின்ற வேட்பாளர்களைக் காட்டிலும் பலம் கொண்டதாக இருந்தாலும் அதனூடாக முஸ்லிம் காங்கிரஸின் பலத்தை உடைத்துவிட முடியுமா என்பதும் சிந்தனைக்குரியது.

உதாரணமாக ஒரு வட்டாரத்தில் 1000 முஸ்லிம் வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்றால் அதில் 400 வாக்காளர்கள் மு.கா மீது பிடிப்புள்ளவர்களாகவும், நிரந்தர வாக்காளர்களாகவும் இருப்பர். அவர்கள் வேட்பாளர்களுக்கு அப்பால் கட்சிக்காகவே வாக்களிக்கும் எண்ணம் உடையவர்களாகவே இருப்பர். மிகுதியாக இருக்கின்ற 600 வாக்குகள்தான் மு.கா வேட்பாளர்களுக்கும் அவர்களை எதிர்த்து போட்டியிடுகின்ற எந்தக் கட்சி வேட்பாளர்களானாலும் பலத்த போட்டியை உருவாக்கும். எனவே அடிப்படையில் மு.கா கட்சியிடம் வாக்கு வங்கி இருப்பதனால் அவ்வளவு இலகுவில் மு.கா வட்டாரங்களில் தமது வெற்றியை இழந்துவிடாத ஒரு நிலையே ஏற்படும் என்று நாம் நிர்ணயிக்க வேண்டி உள்ளது.

ஆகவே கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களில் அதிக இடங்களில் மு.கா வெற்றி கொள்ளும் என்பதில் ஐயமில்லை. சில இடங்களில் அது தோல்வியடையுமானால் அது கூட்டு முன்னணியின் உருவாக்கத்தில் ஏற்பட்ட தோல்வியல்ல.ஏலவே அவ்வாறான சூழல் காணப்படுகின்றது. உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தொகுதியில் அமைந்துள்ள அக்கரைப் பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, மட்டக்களப்பில் காத்தான்குடி நகர சபை, திருமலையில் கிண்ணியா பிரதேச சபை போன்ற இடங்களும் முன்னர் மு.காவிடமிருந்து பறிபோயிருந்தன.

இந்நிலை என்பது மு.காவை கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்கள் முழுமையடித்துவிடாது என்பதைத்தான் சுட்டி நிற்கின்றது. இதில் மாற்றம் நிகழ்வதாக இருந்தால் பலத்த பரீட்சைக் களங்களை புதிதாக உருவாகும் முஸ்லிம் கட்சிகளின் கூட்டு முன்னணி தாண்ட வேண்டியிருக்கும். பல தியாகங்களை புரிவதற்கு இவர்கள் தயார் நிலையில் இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளும் மக்களின் தொகையை அதிகமாக பெருக்குவதற்கு கடும் பிரயத்தனங்களை முன்னெடுக்க வேண்டி இருக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

எதிர்பார்க்கப்படுகின்ற கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் ஒன்று வருமானால், மு.காவுக்கு எதிராக அமைகின்ற முஸ்லிம் கட்சிகளின் கூட்டு அதிக ஆதிக்கத்தை செலுத்த முடியுமா என்று நோக்குவதும் இன்றியமையாதது. அத்தேர்தல் விகிதாசார முறைமையின் கீழ் நடைபெறுமானால், கடந்த மாகாண சபையில் மு.கா ஏழு ஆசனங்களையே வைத்திருக்கின்றது. இந்த ஆசனங்களில் குறைவு ஏற்படுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பி விடை தேட வேண்டியும் உள்ளது.

இங்கு இரண்டு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. ஒன்று கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது மு.கா தனித்துப் போட்டியிட்டு ஏழு ஆசனங்களைக் கைப்பற்றி இருக்கின்றது. இவ்வாறு எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் மு.கா தனித்து போட்டியிடுமேயானால் இந்த ஏழு ஆசனங்களைக் கைப்பற்றுவதில் சில இடறல்கள் ஏற்படக்கூடும். அதற்காகவேண்டி மு.கா ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிடுவதில் அதிக முக்கியத்துவத்தை காட்டும் என்று நாம் நம்பலாம். அவ்வாறு ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிட்டால் மு.கா பெரிதாக ஆசன இழப்பை சந்திக்க நேராது.

அதேநேரம் கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது ஐ.ம.சு முன்னணியுடன் தேசிய காங்கிரஸ் இணைந்து போட்டியிட்டதனாலா கவே அக்கட்சி பெற்ற ஆசனங்களில் தேசிய காங்கிரஸ் சார்ந்த மூன்று முஸ்லிம் உறுப்பினர்களை வெல்ல முடிந்தது. உருவாக்கப்படும் என நம்பப்படுகின்ற முஸ்லிம் கட்சிகளின் கூட்டு முன்னணியில் தேசிய காங்கிரஸ் அதே மூன்று உறுப்பினர்களை மீண்டும் பெற முடியுமா என்பது கேள்விக்குறியே.

இக்கூட்டு முன்னணி பெறுகின்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை எத்தனை உறுப்பினர்களுக்குரியதாக இருக்கும் என்று ஓரளவு அனுமானித்தால், மொத்தத்தில் நான்கு முஸ்லிம் பிரதிநிதிகளைப் பெறக் கூடியதாகவே அமையும். இந்நிலையில் இந்த நான்கு மொத்த ஆசனங்களைக் கொண்டு எந்த பெரும் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பது என்பதும் இதிலுள்ள மற்றொரு கேள்வியும் சிக்கலுமாகும்.

ஐ.தே.கட்சியும் மு.காவும் இணைந்து போட்டியிடுகின்ற போது சுமார் 10 ஆசனங்களையாவது கைப்பற்றும் சூழல் காணப்படும். இதற்கப்பால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த மாகண சபை தேர்தலின் போது 11 ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை அது ஒரு போதும் ஐ.ம. சு.கூட்டமைப்பு டனோ அல்லது ஸ்ரீ.ல.சு. கட்சியோடோ இணைந்து கொள்வதை பெரும்பாலும் விரும்பப் போவதில்லை. அதற்கு இசைவான மு.காவும் ஐ.தே.கட்சியோடு இணைந்திருப்பதனால் அவர்கள் பக்கம் சாய்வதற்கே அதிக சாத்தியம் இருக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸை உள்ளடக்கிய ஒரு முஸ்லிம் கூட்டமைப்பு வந்தாலும் சரி முஸ்லிம் காங்கிரஸை உள்ளடக்காத முஸ்லிம் கூட்டமைப்பு வந்தாலும் சரி கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை அது தனித்து கைப்பற்ற முடியாது. உண்மையில் கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரை இங்கு வாழ்கின்ற மக்கள் தொகையின் அடிப்படையில் பார்ப்போமேயானால் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் என்ற எந்தவொரு இனமும் தனித்து நின்று ஆட்சி அமைக்க முடியாது. இது இயல்பாகஇம்மாகாணத்தில் வாழ்கின்றமக்களின் குடிப்பரம்பல் எடுத்துரைக்கின்ற உண்மையாகும்.

ஆயின் ஏதோ ஒரு சமூகம் இன்னொரு சமூகத் தோடு ச தனித்து கைப்பற்றும் சூழல் அறவே தோன்ற முடியாது.

எனினும் முஸ்லிம்களின் ஆசனங்கள் மொத்தமாக ஓரணியில் இருக்குமேயானால் அடுத்தொரு சமூகத்துடன் இணைந்து ஆட்சி அமைத்துக்கொள்வதில் சரிசம பங்கினைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தவொரு சாதகத்தன்மையின் அடிப்படையில் முஸ்லிம் கட்டமுன் னணி ஒன்று உருவாகுமாக இருந்தால் அது மு.காவை வெளியில் வைத்துவிட்டு இணைவதன் மூலம் சாத்தியமாகாது. இந்த யதார்த்தநின் அடிப்படைக்கு மாறாக முஸ்லிம் கட்சிகள் கூட்டிணைவதன் மூலம் சாதிக்கப்போவது என்ன என்று நோக்க வேண்டியும் உள்ள து.முஸ்லிம் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் சரியான தீர்வுகளை பெறும் வகையில் பங்காற்றவில்லை என்ற ஒரே நோக்கத்துக்காக அக்கட்சியை மக்கள் மத்தியில் இருந்து சற்று தூரப்படுத்தி, அக்கட்சி மக்களுக்குள் பெற்றிருக்கின்ற செல்வாக்கு நிலைக்கு இவர்கள் தங்களைக் கொண்டு வருவதற்காக முனைகின்ற ஒரு முனைப்பாகவே அன்றி வேறில்லை என்பது சாதாரணமாகச் சிந்திக்கின்ற எவரும் புரிந்துகொள்ளக் கூடியதாகும். இந்த நிலைதான் முஸ்லிம் காங்கிரஸுக்கு பாடம் கற்பித்தல் என்ற தளத்தை நோக்கிய தகர்வின் அடித்தளமாகும். இது தேவையான பக்கம் என்பது எவ்வளவு தூரம் உண்மையாக இருந்தாலும் அது பற்றி நமது மக்கள் உணர்ந்துகொள்ள முனையாத ஒரு கடும்போக்கில் குவிந்துள்ளமை நமது துரதிர்ஷ்டம்தான்.

உண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் நமக்கு பிரயோசனமில்லை என்றால் அதனை கூட்டுமொத்தமான கிழக்கு முஸ்லிம்கள் உணர்ந்து புதிதாக உருவாக்கப்படும் என நம்பப்படுகின்ற முஸ்லிம் கட்டமைப்பின் பக்கம் முழுமையாக சார்ந்து நின்று வாக்களிக்க வேண்டும். இது சாத்தியமாகுமா? முப்பது வருடங்களாக முஸ்லிம் மக்களிடம் வேரூன்றி காணப்படுகின்ற முஸ்லிம் காங்கிரஸை முற்றாக நிராகரித்து விடுவதென்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. அது மாத்திரமன்றி இந்த வருடம் தேர்தல் வருமென அறிவிக்கப்பட்டிருப்பதால் உச்ச பட்சமாக ஒன்பது(09)மாதங்களுக்குள் வரக்கூடிய இரு வகை தேர்தல்களிலும் முஸ்லிம் காங்கிரஸை முற்றாக நிராகரித்துவிடும் மக்களாக எமது முஸ்லிம் மக்களை மாற்றிவிடுவது அசாத்தியமானது என்பதில் சந்தேகம் இல்லை. மாற்றி வைக்கும் சூழல் தோற்றுவிக்கப்படுமாக இருந்தால் அது எமது பாசையில் அற்புதமாகவே நிகழ முடியும். இந்நிலைக்கு எமது எதிர்வுகூறல் கணக்குகள் அல்லது மட்டில்கள் ஒருபோதும் விஞ்சாது.

ஆக மொத்தத்தில் புதிதாக உருவாக்கப்படும் என நம்பப்படும் முஸ்லிம் காங்கிரஸை உள்ளடக்காத முஸ்லிம் கட்சிகளின் கூட்டமை முற்றாக தோற்கடித்து முன்னேறும் வாய்ப்பு பெரிதாக இல்லையென்றே குறிப்பிட வேண்டும். மாறாக மு.கா.வின் பலத்தில் சற்று வீழ்ச்சியை கொண்டுவருவதில் பங்காற்றும் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

முஸ்லிம்களுடைய போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு

ரெலோ கொள்கைபரப்பு செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம்

(குருநாகல் இக்பால் அலி)

வில்பத்து வடக்கில் முஸ்லிம்களது பாரம்பரியக் காணியை உள்ளடக்கி புதிதாக பிரகடனப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட வனம் என்கின்ற வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக இரத்துச் செய்யக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்களுடைய நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

தமது வாழ்விடங்களையும் வயல் நிலங்களையும் மேய்ச்சல் தரைகளையும் வன இலாகாவுக்கு வழங்கிய வர்த்தமானியை இரத்துச் செய்யக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அங்கு விஜயம் செய்த ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போது அவர் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் யுத்தம் காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து சென்று அகதி வாழ்க்கை நடத்தி நொந்து போன மக்களுடைய பாரம்பரியக் காணிகளை வர்த்தமானி அறிவித்தலின்படி வன இலாகாவுக்கு உரிமையாக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு நல்லாட்சி அரசாங்கத்தினுடைய ஆரோக்கியமான செயற்பாடாகக் கருத முடியாது. நல்லாட்சிக்கு அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்த மக்களை நம்பிக்கைகொள்ளச் செய்யவில்லை. மாறாக நம்பிக்கை இழக்கும்படியான செயற்பாடாகவே அந்த வர்த்தமானி விடயம் அமைந்துள்ளது.

கால் நூற்றாண்டு கால அகதி வாழ்வில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து விட்டு மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு அவர்களுடைய பூர்வீக நிலங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். இதற்காகவே தொடர்ந்து தமிழ் மக்களும் தங்களுடைய சொந்தப் பூர்வீக இடங்களில் குடியேறுவதற்காக நிலம் மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

2012 ஆம் ஆண்டு அப்போதைய அரசு இந்தப் பிரதேசத்திலுள்ள ஆயிரக்கணக்கான காணிகளை வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. இந்தச் செயற்பாட்டுக்கு நல்லாட்சி அரசாங்கம் ஆதரவளிக்க முடியாது. முஸ்லிம்களுடைய பூர்வீக நிலங்களை பெற்றுக் கொள்வதற்காக நியாயம் வேண்டிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு தாமும் ஆதரவு தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

பேருவளை அப்rார் பவுண்டேஷனின் கௌரவிப்பு விழாக்கள்

(அஷ்ரப் ஏ சமத்)

பேருவளை அப்rார் கல்வி பவுண்டேசனினால் மௌலவி பட்டம் வழங்குதல்,புலமைப்பரிசில் வழங்குதல் மற்றும் பேருவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இருவர் அரச உயர்பதவி பெற்றமையிட்டு அவர்களை கௌரவிப்பது போன்ற நிகழ்வுகள் ஏப்rல் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு பேருவளை மருதானை அல் பாசியத்துல் நஸ்rியா முஸ்லிம் பாலிகா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பேருவளையைச் சேர்ந்த முன்னாள் தென்கிழக்கு உபவேந்தர் பேராசிரியர் ஹுசைன் இஸ்மாயில் இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராக அரசினால் நியமனம் பெற்றுள்ளார். அத்துடன் அஷ்ரபான் றிபாய் கௌரவ கவுன்சிலராக மொரோக்கோ நாட்டுக்கு அரசினால் நியமிக்கப்பட்டுள்ளதையிட்டு இருவருக்குமான கௌரவிப்பும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக ஜக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் அப்துல் ஹமீட் எ.கே முல்லா அப்துல்லாவும் பலஸ்தீன் நாட்டின் தூதுவர் மொஹமட் ஹம்துல்லா செயித் கலந்து கொள்வார்கள். மேலும் இந் நிகழ்வில் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சேப்வே ட்ரவல்ஸ்
2017 புனித உம்ரா

28 வருட ஹஜ் உம்ரா சேவையில் சேப்வே ட்ரவல்ஸ் மூலம் பயணித்த ஹாஜிகளைக்கேட்டால் புரியும் சேப்வே ட்ரவல்ஸின் சேவைகள்...

இன்ஷா அல்லாஹ் எமது உம்ரா குழு மார்ச், ஏப்ரலில் பயணிக்க அனைத்து ஏற்பாடுகளையும் மிகச்சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது.

எமது உம்ரா குழு: March. 14ம், 29ம் திகதி புறப்படும்.

ஏப்ரல் விடுமுறையில் ஏப்ரல் 06ம், 11ம், 12ம், 13ம் 14ம், 15ம், 16ம் திகதிகளிலும் பயணம்

மக்கா, மதீனாவில் நட்சத்திர ஹோட்டல்கள் தங்குமிடவசதி, வீடியோ உணவு, சொகுசு போக்குவரத்து, அனுபவமுள்ள வழிகாட்டி உடபட அனேக வசதிகள். சேப்வே ட்ரவல்ஸ் மூலம் உம்ரா பயணிக்க விரும்புவோர் இறுதி நேர சிரமத்திலிருந்து விடுபட இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்:

Alhaj M.R.M. Farook J.P. - 0777660637
Alhaj Fazrin Farook - 0777444333
IATA ACCREDITED AGENT
அல்ஹாஜ் மவ்லவி தல்ஹா (பாரி) - 0777516786
கொழும்பு பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம்
அல்ஹாஜ் மவ்லவி சலாஹுதீன் (பாரி) - பலாங்கொடை - 0776165768
அல்ஹாஜ் மவ்லவி அப்துல் அலீஸ் (பலாஹி) வாழச்சேனை - 0777922831

SAFEWAY TRAVELS & TOURS (PVT) LTD.
No:8A, Vajira Road, Bambalapitiya, Colombo - 04. Tel:0115 238528 -32
E mail : info@safewaytt.com WEB :www.safewaytravelsandtours.com

SAFEWAY TRAVELS காரியாலயம் # 228, Grandpass, Colombo - 14 இலிருந்து No:8A, Vajira Road, Bambalapitiya, Colombo - 04. இடம்மாற்றப்பட்டுள்ளது

அக்கரைப்பற்று முனவ்வராவில் 4 மாணவர்களுக்கு 9 ஏ சித்தி

(நிகமதுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று கோட்டத்தில் உள்ள அக்கரைப்பற்று முனவ்வரா கனிஷ்ட கல்லூரியில் இருந்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 04 மாணவர்கள் 9 ஏ சித்திகளையும், 07 மாணவர்கள் 8 ஏ, பி சித்திகளையும், 02 மாணவர்கள் 7 ஏ, பி.சி சித்திகளையும், 01 மாணவி 6ஏ, 3 பி சித்திகளையும் பெற்றுள்ளார்கள்.

2016 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் ஆர்.எஸ்.எச். ஹக்கம் ஹமீட், ஆர்.மஹ்மூத், எஸ்.ஏ.பாத்திமா அப்றா, ஆர்.பாத்திமா சிப்றா ஆகிய மாணவர்கள் 09 பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். அத்தோடு ஏ.எம்.ஜூஸ்லி அய்யாஸ்,எஸ். ஜாசிம் அத்னஸ், ஏ.எம்.பாத்திமா அப்றோஸ், எம்.எம்.தஸ்றுன் பரீஹா, எம்.எச்.பாத்திமா அஸ்கியா, எம்.ஜ.செய்னப், ரீ.சபாக் ஆகிய மாணவர்கள் 8ஏ,பி சித்திகளையும்,ஏ.ஜே.சதாத் அஹமட், எஸ்.பாத்திமா சறபா ஆகியோர் 7ஏ,பி,சி சித்திகளையும், எஸ்.பாத்திமா சுல்பா 6ஏ, 3பி சித்திகளையும் பெற்று பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

மூதூர் தளவைத்தியசாலையினை ஏதுதத்திற்கு தரம் உயர்த்தக் கோரி கவன ஈர்ப்புப் போராட்டம் நிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம்.லாஹிர் தலைமையில் வியாழனன்று(30) வைத்தியசாலை முன்பாக இடம் பெற்றது (மூதூர் பறாஸ்)

பட்டமளிப்பு விழா

கொட்டாமுல்லை அல் மூமினாத் மகளிர் அரபுக்கல்லூரியின் 3 ஆவது அல்ஆலிமா பட்டமளிப்பு விழாவும் புதியகட்டட திறப்பு விழாவும் (1) எனிக்கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஊருமலை மஸ்ஜிதுல் ஹைறாதுக்கு அருகாமையிலுள்ள புதிய மூமினாத் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் தலைவர் எம்.எச்.எம். பஸ்லி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சிறப்பு சொற்பொழிவாளராக உடதலவின்ன அல்ஹகிமிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் மௌலவி அல்ஹாபில் எம் ஹிதாயதுல்லாஹ் ரஸீன் (ரஷ்மானி) கௌரவ அதிதியாக மனாருல் ஹகதாஅதிபர் அஷ்மத் ஹவாலுத்தீன் (மிஸ்பாஹி) அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தகவல் : மௌலவி ஏ.எஸ்.எம். ஷாம் மௌலானா.

புனித ஹஜ் 2017
நியாஸி ட்ரவல்ஸ் பிரைவட் லிமிட்ட



32 வருட ஹஜ் உம்ரா சேவையின் முன்னோடியான அல்ஹாஜ் மவ்லவி எம்.நியாஸ் பழீல் பஸ்ஜி நத்வி அவர்களின் நியாஸி ட்ரவல்ஸ் முஸ்லீம் சமய கலாசார தினைக்களத்தின் அங்கீகாரம்பெற்று இன்ஷா அல்லாஹ் இவ்வருடமும் ஹாஜிகளுக்கு சிறந்த சேவை வழங்க ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன.

Package - A:
சுமார் 625,000/- பெறுமதிமான ஹஜ் பெகேஜ் குறைந்த கட்டணத்தில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல வேண்டும் என்ற நன்னோக்கத்தில் குர்பான் தவிர்த்து 525,000/- வுக்கு குறைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம்.
தங்குமிடம் - மக்காவில் -Hilton Hotel (0M தூரம்)
மதீனாவில் ஹயாத் ஹோட்டல் (75M தூரம்)

Package - B:
சுமார் 550,000/- பெறுமதிமான ஹஜ் பெகேஜ் குறைந்த கட்டணத்தில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல வேண்டும் என்ற நன்னோக்கத்தில் குர்பான் தவிர்த்து 475,000/- வுக்கு குறைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம்.
தங்குமிடம் - மக்காவில் -தாலுத்தக்வா மதீனாவில் -தியாறுஸ்ஸலாம்
50 பேர் மட்டுமே அழைத்துச்செல்வதால் முஸ்லிம் சமய கலாசார தினைக்களத்தில் பதிவுசெய்த ஹாஜிகள் உடன் தொடர்புகொள்ளவும்:
மேலதிக விபரங்களுக்கு :-
அல்ஹாஜ் மௌலவி M. நியாஸ் பழீல் (பஹ்ஜி–நத்வி) J.P.
Tel.0779682512, 0717351447
பேருவளையில் - அல்ஹாஜ் A.C.M. முபாறக் - 0772342847
(அல் முஅல்லா ட்ரவல்ஸ்)
பாணந்துறையில் - அல்ஹாஜ் M.W.M. றிபாஸ் JP - 0779628964
அல்ஹாஜ் பவஸ்தீன் - 0757001965
NIYAZY TRAVELS (PVT) LTD
Airline Ticketing, Hajj & Umrah Operators
22, DAULAGALA ROAD, GELIOYA, SRI-LANKA
e.mail niyazytravels@yahoo.com

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

National Water Supply & Drainage Board

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனான பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சி - செயற்றிட்டம் 2

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இல: 3029

தெலவலயில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையம், விடுதி கட்டிடம் மற்றும் உணவகத்தை அமைத்தல்

ஒப்பந்த இல: GCWWMIIP/ADB/BUILD/TRAINING CENTRE/NCB/08

கேள்விமனுக்களுக்கான அழைப்பிதழ் (IFB)

கேள்விமனு சமர்ப்பிப்பதை நீடித்தல் - பின்னிணைப்பு 2

இந்தப் பின்னிணைப்பானது ''தெலவலயில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையம், விடுதி கட்டிடம் மற்றும் உணவகத்தை அமைத்தல்'' என்ற திட்டத்துக்கான சிவில் வேலைகளைப் பெறுகைக்கான கேள்விமனு கோரலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இந்த கேள்விமனு ஆனது டெய்லி நியுஸ், தினமின, நவமணி ஆகிய பத்திரிகைகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை இணையத்தளம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணையத்தளம் ஆகியவற்றில் 2017 பெப்ரவரி 15ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. பின்னிணைப்பு 02 இன் அனைத்து தேவைகளும், கேள்விமனு ஆவணம் மற்றும் அதன் விளைவான எந்தவொரு ஒப்பந்த ஆவணங்களினதும் பகுதியாகும்.

கேள்விமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2017 ஏப்ரல் 25, முற்பகல் 10 மணிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

கேள்விமனு ஆவணங்கள் சாதாரண வேலை நாட்களில் 2017 ஏப்ரல் 24 வரை, முற்பகல் 09 மணி முதல் பிற்பகல் 03 மணி வரை விநியோகிக்கப்படும்.

கேள்விமனுவுக்கு முந்திய கூட்டத்தின் அறிக்கைகளை உள்ளடக்கியுள்ள பின்னிணைப்பு 1 ஆனது, அனைத்து மனுதாரருக்கும் விநியோகிக்கப்படும். அத்தோடு, அது கேள்விமனு ஆவணத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கும்.

மூல கேள்விமனு ஆவணத்தின் விதிமுறைகளிலும், நிபந்தனைகளிலும் எந்தவித மாற்றங்களும் இல்லை.

தலைவர்,

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழு
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு

நவமணி NAVAMANI WEEKLY
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
02ND APRIL 2017 - SUNDAY

வில்பத்து பிரகடனத்தை இரத்துச் செய்வதற்கு 22 முஸ்லிம் எம்.பி.க்களும் அழுத்தம் கொடுப்பார்களா?

வடமாகாணத்தில் முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட ஒரே பிரதேச சபை முசலிப் பிரதேசமாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ரஷ்யாவில் கையொப்பமிட்டு வெளியிடப்பட்ட வில்பத்து வனசரணாலயத்துக்கு வடக்கில் உள்ள நாலு பிரதேசங்களை வனப்பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் முஸ்லிம்க ளுக்குரிய பிரதேச சபையான முசலி பிரதேச சபையின் எதிர்காலத்தையும் கேள்விக் குள்ளாக்கியுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் காவீகரம் செய்யப்பட்ட மறிச்சுக்கட்டி, கரடிக்குளி போன்ற ஊர்கள் பல நூறு வருடங்களாக முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்த பூர்வீகப் பிரதேசங்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

மண்ணார் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களைப் பெறாமல் பாரம்பரியமாக மண்ணார் பிரதேச மக்கள் வாழ்ந்த இடங்கள், பயிர் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களையும் உள்ளடக்கியே வனப் பாதுகாப்பு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கையொப்பமிட்டு கடந்த 24ஆம் திகதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்யக் கோரி மறிச்சுக்கட்டி, பாலைகுளி மற்றும் கரடிக்குளி மக்கள் ஆரம்பித்த மக்கள் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினால் 1990 இல் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடபகுதி முஸ்லிம்கள் யுத்தம் முடிந்து ஏழு வருடங்கள் கழிந்தும் துன்பவாழ்வே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் இந்தப் பிரகடனம் அவர்களை மரத்தால் வீழ்ந்தவனை மாடு மிதித்த நிலைக்குத் தள்ளியுள்ளது.

காணி உறுதியுள்ள இந்தகுமுண் போர்மிட்டுடன் தமது காணிகளை மீட்பதற்காக முசலி மக்கள் ஆரம்பத்திலுள்ள சாத்வீக ரீதியிலான போராட்டத்துக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி ஆதரவு வழங்க முன்வரவேண்டும்.

ஜக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் இது தொடர்பாக ஜனாதிபதியின் தீர்மானத்தைக் கண்டித்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். பாராளுமன்றத்திலிருக்கும் ஏனைய முஸ்லிம் தலைவர்கள் இப்படியொன்று நடந்துள்ளதா என்று ஒன்றுமே தெரியாதவர்கள் போல் இருந்து வருகிறார்கள்.

முஸ்லிம்களின் 97 சதவீதமான ஆதரவுடன் பதவிக்கு வந்த ஜனாதிபதி, இவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுக்கும் போது முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேசி இருக்க வேண்டும். தாம் பதவியிலமர்த்திய அரசு தம் கண்ணில் குத்திவிட்டதாக முஸ்லிம்கள் கருதுகின்றார்கள்.

அரசு 2012இலும் 2017இலும் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களை இரத்துச் செய்து பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி புதிதாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இப்பிரச்சினை மன்னார் முஸ்லிம்களது பிரச்சினை. அமைச்சர் றிஷாத் பதியுதீனின் பிரச்சினை என்று கூறி பாமுகமாக இருந்து விடாது பாராளுமன்றத்தி லுள்ள 22 முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

முசலி மக்களது போராட்டம் வெற்றி பெறுவதற்கு நாட்டில் நீதி, நேர்மையை விரும்பும் சகலரும் தமது ஆதரவை வழங்க முன்வரவேண்டும்.

யார் இந்த இலங்கை முஸ்லிம்கள்?

முஸ்லிம்களை முடக்கிய போர்த்துக்கேயர்கள்

லண்டனிலிருந்து
இர்பான் இக்பால்

1505 ல் பள்ளிவாசல் தகர்க்கப்பட்டதும், போர்த்துக்கியரின் கிறிஸ்தவ அடிப்படைகளின் விஸ்தரிப்பும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தாலும் உள் நாட்டில் தம் வர்த்தக நிலையில் பெரும் மாற்றங்கள் இல்லாததால் ஓரளவுக்கு அமைதியாகவே இலங்கை முஸ்லிம்கள் இருந்திருந்தாலும் சக்தி மிக்க எதிரியாக இருந்த போர்த்துக்கியரை எதிர்கொள்ள சோனகர்களும் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

அதன் ஒரு கட்டமாக தமக்குக் கிடைக்கப்பெற்றிருந்த தகவல்களைக் கொண்டு போர்த்துக்கியரின் இந்திய நடவடிக்கைகள், பெரும் பாலும் கைப்பற்றல்கள் மற்றும் கரண்டல்கள் பற்றிய விடயங்களை இலங்கை யின் ஆட்சியாளர்களுக்குக் கொண்டு சென்றார்கள், அதற்காக சிங்கள மக்களுடன் பல உடன்படிக்கைகளையும் மேற்கொண்டதுடன் இதன் அவசியத்தை ஆட்சியாளர்களுக்கு உணரச் செய்வதற்குப் பெரிதும் முயன்றார்கள்.

இக்கால கட்டத்தில் (1517) போர்த்துக்கியக் கடற் தளபதி Lopez Suarea Albegaria கமார் 12 வருட கால இடைவெளியின் பின்னர், ஏறத்தாழ 17 அல்லது 18 கப்பல்களில் இலங்கையின் கரையோரத்தை நோக்கி வந்து கொண்டிருந்த செய்தி சோனகர்களை வந்தடைந்திருந்தது.

போர்த்துக்கியரை எதிர்க்க முழு மூச்சுடன் பேராடத் துணிந்திருந்த சோனகர்கள், கொழும்புத் துறையை அண்டிய பகுதியில் ஒரு கோட்டையையும் அமைத்துத் முழுப் பலத்துடன் போராடினார்கள். எனினும், நவீன ஆயுதங்களுடனான ஒரு கடற்படையுடன் போராடும் வலுவும் திறனும் சாதாரண வர்த்தகக் குடிகளாக இருந்த சோனகர்களுக்கு இருக்க வில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டின் மன்னன் இவ்விடயத்தில் முன் நின்று ஒத்துழைக்காததால் தனியாகவே போராடிய சோனகர்கள் இறுதியில் உக்கிரமான போராட்டத்தின் பின்னர் தோல்வியைத் தழுவினார்கள்.

முஸ்லிம்களின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்த கொழும்பின் வீழ்ச்சியைத் தொடர்ந்து போர்த்துக்கியரின் வேதம் பரப்பும் வேட்கையும் தீவிரமடைந்த தனால் முஸ்லிம்கள் பெரும் துன்பத்துக்குள்ளாக்கப் பட்டார்கள். இச் சந்தர்ப்பத்தில் சோனகர்களுடன் போர் புரிந்து, வெற்றிக்களிப்பிலும் அதிகாரத்திலும் இருந்த போர்த்துக்கியர் சோனக மக்களின் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் சமூகக் கட்டமைப்பையும் முழுமையாக நிர்மூலமாக்க முனைந்தார்கள்.

இக்கால கட்டத்தில் சோனக சமூகத்தின் மத்தியில் 'அர்வி' எனும் மொழி பிரபலமாக இருந்தது.

அர்வியை அரபுத் தமிழ் எனவும் விளக்கமளிக்கின்றனர். எவ்வாறாயினும் அக்கால கட்டத்தில் அர்வி அல்லது அரபுத் தமிழ் ஒரு மொழியாகத் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்ததோடு இல்லாமிய இலக்கியங்களின் பதிவுகளுக்கான மொழியாகவும் உருவாகியிருந்தது.

எனவே இம்மொழி அழிப்பு போர்த்துக்கியரின் பிரதான இலக்காக இருந்தது.

சோனகர்களைப் பொறுத்தவரை அன்றைய அளவில் அவர்கள் 'முஸ்லிம்கள்' அதாவது முழுமுதல் நபியவர்களைப் பின்பற்றி இஸ்லாத்தைத் தழுவியவர்கள், அன்றைய அளவில் தென்னிந்தியப் பிரதேசங்களுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த அரேபியர்களும் இதை வகைக்குள் அடங்குகிறார்கள், அது மாத்திரமன்றி இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த பெரும்பான்மையான கடல் வர்த்தகர்களும் முஸ்லிம்களாகவே இருந்தார்கள்.

எனவே, இவர்களுக்கிடையிலான தொடர்பாடல் முறையில் ஒரு இணக்கப்பாடும் பொது மொழித் தேவையும் காலத்தின் கட்டாயமாக இருந்திருக்கும். தம் எல்லோருக்கும் பொது மறையான 'அல்-குர் ஆனை' க் கற்றுக்கொள்வதினும் அதனை விளங்கிக்கொள்வதினும் தமக்குள் அறிவினை வளர்த்துக் கொள்வதற்கும் சமூக நல்லுறவைப் பேணுவதற்கும் அத்துடன் வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் என்று பல்வேறு காரணங்க ளுக்காக இவர்களி டையே ஒரு பொது மொழிப் பயன்பாடு இருந்து வந்திருக்கும் என்பது ஐயந்திரிபற ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும்.

இலங்கையுடனான அரேபியரின் தொடர்பு என்பது போர்த்துக்கியர் வருகைக்கும் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம், அதற்கான ஆதாரங்கள் முன்னைய பதிவுகளில் காணப்படுகின்றன. அத்துடன், தென்னிந்தியக் கரையோர மக்களின் இலங்கை மக்களுடனான கலப்பு, அதிலும் குறிப்பாக கடல் வர்த்தகம் மற்றும் பொதுவாகவே வர்த்தக ஆளுமையுடன் திகழ்ந்த சமூகமான சோனகருடனான கலப்பு எப்போதுமே மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒன்றாகும்.

எனவே இக்குறிப்பிட்ட சமூகங்களின் தொடர்பாடல் என்பது நிச்சயமாக முன்னிலைப்படுத்தி ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

அரேபிய மக்கள் பேசும் அரபு மொழியையும் தாம் பேசிய ஏதோ ஒரு மொழியையும் இணைக்கும் ஒரு தொனியு முற்காலத்தில் அவசியமாக இருந்தது அதே போன்று, தம் வர்த்தக சகாக்களுடனான இந்திய மக்கள், நிரவாகிகள் என்று பல்வேறு தரப்பினருடனான தொடர்பாடலுக்கான மொழித் தெரிவொன்று எப்போதுமே வரலாற்றில் சோனகர்களுக்கு அவசியமாக இருந்திருக்கும்.

இலங்கையின் ஆதி குடிகள் என அறியப்படும் வேடர்கள் பேசும் மொழியையும் அவர்கள் பேசவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக இருக்க, சிங்கள மொழியை நிச்சயமாக அவர்கள் பேசினார்கள் அதுவும் காலத்துக்குக் காலம் நவீனம் பெற்ற சிங்களத்தை அவர்கள் பாவித்தார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். தமிழின் வருகை (13ம் நூற்றாண்டு) யின் பின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த, குறிப்பாக வடக்குப் பகுதிகளில் வாழ்ந்த சோனகர்கள் தம் மொழியோடு தமிழையும் கலந்தார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும்.

காலக்கிரமத்தில் சோனகர்கள் தாம் பேசிக்கொண்ட அந்த மொழியில் நிச்சயமாக நிராவிடத் தாக்கம் இருந்திருக்க வேண்டும் என்பது பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த அவர்களது இந்தியத் தொடர்புகளுடன் சேர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட நாம் நிர்ப்பந்திக்கப்படும் அதே வேளை சோனகர்கள் தம் மொழியினை, எவ்வாறு எளு - சிங்றலவாக வளர்ச்சி பெற்றதோ அதே வகையில் தம் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப மாற்றியிருக்கிறார்கள் என்பதும் இங்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ் மொழி இலங்கையில் வளர்ச்சி பெறுவதற்கு முன்பாகவே மலையாளத்தின் (திராவிட) தாக்கம் இந்நாட்டில் இருந்து வந்திருப்பதையும், சோனகர்களின் பெரும்பான்மை வெளி நாட்டுத் தொடர்புகள் குறிப்பாக அரேபியர்களுடனும், தென்னிந்திய (கேரள) மக்களுடனும் இருந்திருப்பதையும் அனுமானித்து இவர்கள் பேசிக்கொண்ட மொழியின் சொற்கள் சொற்களுடன் ஒற்றுமை யுள்ளனவையாகவும் அதே நேரம் சம அளவில் அரேபிய, பாரசீகக் கலப்பு கொண்டதாகவும் அமைந்திருக்கலாம் என்று நாம் ஒரு முடிவுக்கு வரலாம்.

இவ்வாறு நாளடைவில் வளர்ச்சி பெற்றிருந்த மொழி போர்த்துக்கியரின் வருகைக்கு முன்பு தாகவே இலங்கைச் சோனகர்களின் மொழியாக இருந்திருக்கின்றது, அதுவும் பெரும் பாலும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த மக்களிடையே புழக்கத்தில் இருந்திருக்கின்றது. ஏனெனில் போர்த்துக்கியரின் இனச்சுத்திகரிப்பின் போது அவர்கள 'அர்வி' மொழியினையும் அது கொண்டிருந்த இலக்கியங்களையும் முற்று முழுதாக அழித்தொழித்தார்கள்.

அவர்கள் அழிப்பதற்கு ஏற்கனவே இங்கு வளர்ச்சியடைந்த மொழிப்பாவனை இருந்திருக்க வேண்டும் எனும் அடிப்படையில் இது மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

அர்வி மொழி பற்றிய மேலதிக ஆய்வின் போது ஆதாரங்களின் பற்றாக்குறை காரணமாக அர்வியில் காணப்பட்ட தமிழ் மொழித் தாக்கம் பற்றிப் பேசக்கூடிய அளவிற்கு அதில் கலக்கப்பட்ட அரபு தவிர்ந்த வேறு மொழிகள் குறித்து வாதிட முடியாது. எனினும், எழுத்துருவுடனும் பேச்சு முறையுடனும் பாவனையில் இருந்த அர்வியினைத் தவி மொழியாக ஏற்றுக்கொள்வதினும் எந்தத் தடையுமில்லை.

இதன் போது இரண்டு விடயங்கள் இங்கு கவனித்தக்கன :

1. அர்வி மொழியின் வளர்ச்சியின் போது இலங்கையில் தமிழ் மொழியின் வளர்ச்சி தொடர்பான பெருமளவு ஆதாரங்கள இல்லாததனால் இலங்கையில் தமிழ் வளர்ந்த காலமும் அர்வி புழக்கத்திலிருந்த காலமும் ஒன்றுடன் ஒன்று முரண்படும்.

2. அர்வியின் தோற்றம் குறித்த பல்வேறு கருத்துகள் இருக்கின்றன, அதில் பிரதானமானது, மரிக்கார்கள் தம் குழந்தைகளுக்கு அரபு மொழியைக் கற்றுக்கொடுப்பதற்காகப் பயன்படுத்திய வழிமுறை அர்வியென்பதாகும். இதன் அடிப்படையை ஏற்றுக்கொள்வினும் கூட அர்வியின் நிராவிடக் கலப்பின் ஆழம் மரிக்கார்களினது அல்லது தென்னிந்திய முஸ்லிம்களது இலங்கைச் சோனகர்களுடனான கலப்புதான் என்று நிறுவ முடியும். அவ்வாரெனின், அர்விக்கும் தமிழுக்குமான தொடர்பினையும் கருத்திற்கொண்டு பார்க்கையில் அர்வி மொழி பெரும் பான்மைக் கரையோர (இலங்கை) மக்களின் பேச்சு மொழியாக மாறியிருக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

தென்னிந்தியாவிலிருந்து அர்வி இறக்குமதியானது என்று தான் வாதிடுவதனால் அது சோனகரை மாத்திரம் வந்தடைந்தது, அவர்கள் மத்தியில் மாத்திரமே வாழ்ந்தது, வளர்ந்தது (சைவர்களிடம் சென்றடையவில்லை) எனும் அடிப்படையை வைத்துப் பார்த்தாலும் அர்வியென்பது சோனகரின் மொழியாக இருந்தது எனும் நீர்க்கமான முடிவுக்கு வரலாம்.

எனினும், அர்வி அல்லது அதற்கு முந்திய சோனகர்கள் அக்கால கட்டத்தின் போது கூட (1411) தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கவில்லை என்பது நிரூபணமாவதுடன் சிங்களம், அது சார்ந்த வேறு மொழி அல்லது எளு, அரபு, பாரசீகம் என்று வேறு ஏதோ கலப்பினான அதே நேரம் 'அர்வியின்' வடிவத்தை மிக இலகுவாகத் தன்னுள் வாங்கிய ஒரு மொழியினைத் தம் மொழியாகக் கொண்டிருந்திருக்கிறார்கள் எனும் முடிவுக்குள் நாம் வரலாம்.

பொதுவாகவே இன்றைய இலங்கை முஸ்லிம் தலைமுறையினர் தம் பாட்டன்,பூட்டன் தொடர்புகளில் எப்படியாவது தென்னிந்தியத் தொடர்புகள் இருப்பதைக் காண்கிறார்கள். அதிலும் குறிப்பாக, வர்த்தக நோக்கில் இலங்கையின் (கடல் போக்குவரத்துக்கு இலகுவான) கரையோரங்களில் குடியேறிய சோனக முன்னோர்களின் தென்னிந்தியாவின் கீழ்க்கரை பிரதேசத்தோடு மேலும் நெருங்கிய தொடர்புகளையும், கேரளாவை அண்டிய பிரதேசங்கள் மற்றும் கேரளத் தொடர்பினையும் கொண்ட மக்களை பெருவாரியாக கிழக்கு மாகாணத்திலும், மன்னார் போன்ற வடக்குப் பிரதேசங்களிலும் காணலாம்.

அதே வேளை, யெமெனிய வர்த்தகர்கள் மற்றும் நிலைகள் தொடர்பான முஸ்லிம் சமூக வரலாற்றுத் தொடர்புகளை புத்தளம் பகுதியிலும், காலத்தால் முந்திய பாரசீக் தொடர்புகள் தென்னிலங்கையின் கரையோரப் பிரதேசங்களான வெலிகம, காலி போன்ற பகுதிகளிலும் காணலாம்.

இதிலிருந்து வேறு பட்டு, அதாவது தம் மொழித் தேர்வை சிங்களத்தை ஏற்றுக்கொண்ட சோனக சமூகத்தின் தொடர்புகள் கண்டி,மாத்தளை,நாவலப்பிட்டி,கம்பளை,பதுளை போன்ற மலை நாடுகளிலும் வர்த்தகத்தை முதல் நோக்கமாகக் கொண்டு பிரதான மையத்தில் குடியேறிய சோனக வர்த்தக சமூகத்தின் அடிப்படையை கொழும்பிலும் காணலாம்.

அதேபோன்று, அர்வி மொழியின் பாவனையின் தாக்கத்தினை இன்றைய அளவும் இலங்கை முஸ்லிம்களிடம் (எப்பிரதேசத்திலும்) காணலாம். அதற்கான அடிப்படை, இம்மொழியின் அடிப்படை அரபாக இருந்ததாகும்.

அர்வி எழுத்துக்கள் அரபியிலேயே எழுதப்பட்டிருந்தன. எனினும், தமிழ் மற்றும் சிங்கள மொழியின் உச்சரிப்புக்களுக்கு ஏதுவாக அதில் கூடுதலான எழுத்துக்களும் உச்சரிப்பு முறைகளும் காணப்பட்டன.

இன்றைய நாளில் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை அர்வி எனும் பெயர் அவர்களுக்கு மறந்து போனதே தவிர, இன்றளவும் கூடப் பெரும் பாலும் அர்வியின் அடிப்படை உதவியில் தான் சிறார்களுக்கு குர்-ஆன் கற்றுக்கொடுக்கப்படுகிறது, எனவே அது இப்போதும் அவர்களுடன் கலந்தேயிருக்கிறது.

அர்வி மொழிபற்றிய ஆய்வுகளுக்கு (இதுவரை) சென்றோர் பெரும்பாலும் தென்னிந்தியாவில் இதன் புழக்கத்தில் இருந்து ஆரம்பிப்பதாலும், இலங்கை மண்ணில் போர்த்துக்கியரினால் ம்மொழியும், அது சார்ந்த இலக்கியங்களும் முற்று மொழிதாகத் திட்டமிட்டு அழிக்கப்பட்ட காரணத்தினாலும், பின் வந்த காலங்களில் அச்சுத் தொழிநுட்பத்தை உபயோகித்துப் பாதுகாக்கப்படாமையினாலும் இதனைத் தமிழ் - அரேபியக் கலப்பு மொழியெனும் வரையறைக்குள் நிறுத்திக் கொள்கின்றனர்.

அத்தோடு வரலாற்று ஆதாரங்களைத் திரட்டி இதன் பூர்விகத்தினையும் அதன் வளர்ச்சி, வடிவ மாற்றம் தொடர்பான விடயங்களையும் ஆராய்க்கூடிய தகவல்களின்மையும் இதன் வரையறையை அந்த அளவோடு நிறுத்தச் செய்கிறது.

ஆயினும், மேலும் சில வரலாற்று விடயங்களைக் கொண்டு 'அர்வி' என்று இறுதியாகக் கண்டறியப்பட்ட வடிவம் பெறப்படும் வரையிலும் இதன் வளர்ச்சி எவ்வாறு இருந்திருக்கும் என்று எம்மால் ஆராய முடியும் என்பதனால் அது குறித்து மேலதிக கவனம் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொடரும்...

Dialog
புத்தாண்டு

வெற்றிகளோ ஏராளம்
பொங்கட்டும் சந்தோஷம்

புத்தாண்டு பற்றி உங்களுக்கு தெரிந்தவற்றுக்கு பதில் வழங்குங்கள்
Smartphone அல்லது ரூ.5,000/-
பெறுமதியான பரிசு வவுச்சர்கள் வெல்லுங்கள்
புத்தாண்டு GAME இனை PLAY செய்ய 353க்கு அழையுங்கள்
நிமிடத்திற்கு ரூ.5 மற்றும் வரிகள் அறவிடப்படும்

நட்சத்திரங்களுடன் இணைந்து புத்தாண்டை கொண்டாடுங்கள்
ரூ.20,000/- வெல்லும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்
FOLLO என டைப் செய்து 55558க்கு SMS செய்யுங்கள்
நாளாந்தம் ரூ.2 மற்றும் வரிகள் அறவிடப்படும்

உங்கள் இராசிக்கு அமைய புத்தாண்டு பலன்களை தெரிந்துக்கொள்ளுங்கள்
LED TV வெல்லும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்
HC என டைப் செய்து 4477க்கு SMS செய்யுங்கள்
நாளாந்தம் ரூ.2.50 மற்றும் வரிகள் அறவிடப்படும்

புத்தாண்டு வந்துவிட்டது
RingIN Tones
Smartphone வெல்லுங்கள்
புது வருடம் வந்ததே பாடலை RingIN Tone ஆக செயற்படுத்திக்கொள்ளுங்கள். 871001 க்கு அழையுங்கள்
மாதத்திற்கு ரூ.30 மற்றும் வரிகள்

இந்த கொடுப்பனவு 2017 ஏப்ரல் 30ம் திகதி வரை மட்டுமே.
twitter.com/dialoglk facebook.com/dialog.lk

உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான
தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2017

Dialog
an axiata company www.dialog.lk எதிர்காலம் இன்றே.

HAJJ 2017

2000 - 2017 / 33,000 Satisfied Pilgrims

Package-A 390,000/-
Package-B 490,000/-

No.1 Hajj & Umrah Operator in sri Lanka

- 30 days/15 days Package.
- Luxury Hotels close to Haram.
- Muallim/Inside Mina.
- Sri Lankan Food - (Buffet).
- Luxury Transportation.
- Experienced Ulamas/Guides.

Al Haj Dr. M.S.H. Mohamed 071 279 9648
Al Haj Farzan 077 277 1277

20 Years' Experience

N.M. TRAVELS
Saudi Hajj Ministry Approved Organization

N.M. Travels & Tours (Pvt) Ltd.
569, Galle Road, Colombo 06. (Opp Roxy Cinema)
P - 2361254 / 2361255 / 2508438 F - 2587927
E - nm.umrah@gmail.com

104, Main Street, Akkaraipattu. (Opp. Base Hospital) | Tel: 067 2057648
F25, 2nd Floor, Bus Stand Complex, Kurunegala. | Tel: 037 3124570
33/2, Main Street, Kattanakudy. (Opp. Gadafi Hotel) | Tel: 065 2057500
50, Yatinuwara Patu Mawatha, Kandy (Behind Muslim Hotel) | Tel: 081 2202007

சிறந்த வாழ்க்கைக்கு
சிறந்த ஆரம்பம்

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த ஆரம்பம். இயற்கையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிப்பதற்கும், நலமான வாழ்விற்கும் அவசியமான விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புறோபயோட்டிக்ஸ் மற்றும் போஷாக்கு நிறைந்தது.

ரூ.950/-

Nestlé NANGROW
2-5 வயதிற்கிடைப்பட்ட குழந்தைகளுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.

Nestlé
Good Food, Good Life

முஸ்லிம்களை முடக்கும் ரஷ்ய பிரகடனம்

■ சுஐப் எம். காசிம்

சுமார் 26 ஆண்டுகளுக்கு மேலாக தென்னிலங்கையில் புத்தளம் உட்பட பெரும்பாலான பிரதேசங்களில் அகதிகளாக அவல வாழ்வு வாழ்ந்து மீண்டும் தமது பிரதேசத்தில் அமைதி ஏற்பட்டதனால் சுதந்திரக்காற்றை சுவாசிக்க வந்த முசலி மக்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய வர்த்தமானி பிரகடனம் அவர்களின் சுயாதீன நடவடிக்கைகளை வில்பத்தை முஸ்லிம்கள் அழிக்கின்றார்கள், இயற்கை வளங்களை நாசமாக்குகின்றார்கள் என்ற இனவாதிகளினதும் இனவாதச் சூழலியலாளர்களினதும் இனவாத ஊடகங்களினதும் காட்டுக் கூச்சல்களையும் பொய்யான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும் கருத்திற்கெடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரஷ்யாவில் வைத்து இந்த கறுப்புப் பிரகடனத்தை மேற்கொண்டுள்ளமை ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

ஒரு தலைப்பட்சமான குறிப்பிட்ட ஒரு சாராரின் கருத்துக்களையும் வான்பரப்பிலிருந்து எடுக்கப்பட்டு புனையப்பட்ட ஒளி நாடாக்களையும் பெற்றுக்கொண்டு, நல்லாட்சி அரசாங்கம் இந்தப் பொல்லாத அநீதியை முஸ்லிம்களுக்கு இழைத்துள்ளது. விடுதலைப்புலிகள் முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக கருவறுத்த போதும் இறை நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் கொண்ட முஸ்லிம் சமூகம் இத்தனை ஆண்டு காலம் அகதியாக வாழ்ந்து அமைதி ஏற்பட்டதனாலேயே மீண்டும் தமது பூர்வீக நிலங்களில் குடியேறுவதற்கு முனைந்தனர். முஸ்லிம்களின் சொத்துக்களையும் அவர்களின் வளங்களையும் 26 ஆண்டுகளுக்கு முன்னர் புலிகள் அழித்த போதும் அவர்களின் அசையாச் சொத்துக்களான நில புலங்களை எவராலும் அழிக்க முடியவில்லை எனினும் முஸ்லிம்கள் வாழ்ந்த பல கிராமங்களில் அவர்களின் காணகள் அபகரிக்கப்பட்டு சிற்சில குடியேற்றங்களையும் மேற்கொண்டனர். ஆனால் நல்லாட்சியின் இந்த பொல்லாத வர்த்தமானி பிரகடனம் முஸ்லிம்களை நாடோடிகளாக அலைந்து திரியும் ஒரு நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் வில்பத்து தொடர்பான சர்ச்சை எழுந்த போது பொதுபல சேனாவும், ராவண பலயக்களும் இனவாதச்சூழலியலாளர்களும் இனவாத இலத்திரனியல் ஊடகங்களை தமது கைக்குள் போட்டுக்கொண்டு ஆகாயப் பரப்பில் பறந்து திரிந்தும் தரைவழியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டும் முஸ்லிம்கள் தொடர்பில் பல்வேறு அபாண்டங்களை நாடு பூராகவும் பரப்பினர். இவர்கள் மீளக்குடியேறிய முஸ்லிம்கள் தமது பரம்பரைக் காணிகளில் கட்டியிருந்த கொட்டில்களை பிடுங்கி வீசி அட்டகாசம் செய்தனர்.

முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு முழுமூச்சாக உதவிய தொடர்ந்தும் உதவி வருகின்ற வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிஷாட் பதியுதீன் மீது இனவாதிகள் தமது சுட்டுவிரலை நீட்டினர். ஊடகங்களிலும் முகநூல்களிலும் அமைச்சரைத் திட்டித்தீர்த்து கேலிச் சித்திரங்களை வரைந்து சிங்கள சமூகத்துக்கு அவர் தொடர்பான பிழையான எண்ணங்களை வளரப்பதில் பிரயத்தனப்பட்டனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது அமைச்சு அலுவலகத்துக்குள் புகுந்த இனவாதக்கூட்டம் அங்கும் காட்டுத் தர்பாரை மேற்கொண்டது. இத்தனைக்கும் மேலாக முஸ்லிம் சமூகத்தின் கோடரிக்காம்புகள் அமைச்சர் தொடர்பான பொய்யான தகவல்களை வழங்கி இனவாதிகளுக்கு தீனி போட்டனர்.

முஸ்லிம் சமூகம் நாட்டுப்பற்றுள்ள சமூகமென காட்டுவதற்கும் வில்பத்துக் காட்டில் ஓர் அங்குலமேனும் பிடிக்கப்படவில்லையென தெளிவுபடுத்துவதற்கும் அமைச்சர் பட்ட கஸ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல தலைநகரில் ஊடகவிலாளர் மாநாடுகளை நடத்தியதோடு மாத்திரமல்ல பல தடவைகள் வில்பத்து பிரதேசத்துக்கு ஊடகவியலாளர்களை அழைத்துச் சென்று உண்மை நிலவரங்களை விளக்கி இந்த அவச்சொல்லை நீக்குவதற்கு அமைச்சர் மேற்கொண்ட முயற்சிகளை நாடே அறியும். எனினும் இனவாதிகளும் இனவாதச் சூழலியலாளர்களும் தமது நிலைப்பாட்டில் இருந்து விடுபடாமல் பிரச்சாரத்தை முன்னெடுத்து முசலி சமூகத்தை அங்கிருந்து விரட்டியடிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளின் வெளிப்பாடே இந்த நவீன ரஷ்யப் பிரகடனம்.

முஸ்லிம்கள் ஓரங்குல காணியையேனும் வில்பத்துவில் பிடிக்கவில்லை. இந்த சமூகத்தின் மீதும் என் மீதும் வீண்பழிகளையே சுமத்துகின்றார்கள் முடிந்தால் நிரூபித்துக் காட்டுமாறு சவால் விடுக்கின்றேன். இவ்வாறு அமைச்சர் பாராளுமன்றத்திலும் ஊடகமாநாடுகளிலும் தொலைக்காட்சி விவாதங்களிலும் பகிரங்க அறை கூவல் விடுத்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழுவொன்றை நிறுவி இதன் உண்மை நிலையை வெளிக்கொணர உதவ வேண்டுமெனவும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். எனினும் அமைச்சர்களான ராஜித, சம்பிக்க ரணவக்க மற்றும் சூழலியலாளர்களான திலக் காரியவசம், சமன் ரத்னப்பிரிய போன்றவர்கள் மனச்சாட்சியுடன் கதைத்தனர்.

மன்னார் முஸ்லிம்களின் இந்த ஜீவ மரணப் போராட்டத்துக்கு முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலர் மற்றும் சமூக நல இயக்கங்கள் அரசியல்வாதிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கிய போதும் அமைச்சர் றிஷாட் மீது அரசியல் ரீதியில் காழ்ப்புணர்வு கொண்ட அரசியல் சக்திகளும் அவரது எழுச்சியை பொறுக்கமாட்டாத சிலரும் அமைச்சர் றிஷாட் தனது அரசியல் வளர்ச்சிக்காக வில்பத்து விடயத்தை பூதாகரமாக்குகின்றார் என கதையளந்தனர். அமைச்சர் வில்பத்துவில் வாழைத்தோட்டம் வைத்திருக்கின்றார் என கூறியவர்களும் வில்பத்துவில் எந்தப் பிரச்சினையுமில்லையென கூறியவர்களும் அமைச்சரே இதனைப் பெரிதுபடுத்துகின்றார் என நாக்கூசாமல் தெரிவித்தனர்.

வில்பத்து தொடர்பில் தற்போதுதான் படிக்க ஆரம்பித்துள்ளதாக வன்னி அரசியல்வாதிகள் சிலர் கூறியதுடன் முழுமையான தகவல்கள் கிடைத்த பின்னர் ஜனாதிபதியுடன் பேசலாம் என்று கூறியவர்களும் உள்ளனர்.

இத்தனைக்கும் மத்தியிலேதான் இந்தப்பிரகடனம் ரஷ்யாவில் இருந்து வெளிவந்துள்ளது. அமைச்சரைப் பற்றி இட்டுக்கட்டப்பட்ட கதைகளை கூறியோர் இப்போது வில்பத்துக்காக போராட வேண்டுமெனவும் முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைய வேண்டுமெனவும் கூப்பாடு போடுவதும் தற்போது சப்புக்கட்டப்பட்ட அறிக்கைகளை விடுவதும் வேதனையானது.

புதிய பிரகடனத்தால் முசலி மக்களின் சுயாதீனமான வாழ்க்கை முடக்கப்பட்டு காட்டுவிலங்குகளுக்கு மேலும் சுதந்திரமாக நடமாட வழிசெய்யப்பட்டுள்ளது.

மிருகங்களில் இரக்கம் காட்டும் நல்லாட்சி மனிதர்கள் மீது கருணை காட்டுவதில் ஏன் தயங்குகின்றதோ தெரியவில்லை.

திறந்த பள்ளிவாசல் தினம்!
திறந்தே இருக்கட்டும்!
திரைகள் விலகட்டும்!

■ ஜெம்ஸித் அஸீஸ்

கடந்த ஞாயிற்றுக்கிழமை. இனங்களுக்கிடையிலான தப்பெண்ணங்களைக் களைந்து பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும் நோக்கில் ஒரு நிகழ்வு. கொழும்பு கொம்பனித் தெரு அக்பர் பள்ளிவாசலில் நடந்தது. கொழும்பு இஸ்லாமிய கல்வி மையம் மற்றும் அக்பர் பள்ளிவாசல் நிர்வாக சபையின் ஏற்பாடு அது.

திறந்த பள்ளிவாசல் தினம் இதுதான் தலைப்பு.

பள்ளிவாசல்களுக்குள் நடப்பது என்ன? என்பதை முஸ்லிம் அல்லாதவர்கள் நேரடியாகப் பார்ப்பதற்கான முயற்சி. கொம்பனித் தெரு பௌத்த விகாரை விகாராதிபதி, பொறுப்பதிகாரி, இந்து மத மதகுருமார், பொலிஸ் பௌத்த, இந்து மத சகோதர்கள், இலங்கைக்குச் சுற்றுலா வந்திருக்கும் வெளிநாட்டவர்கள் என சமார் 80 பேர் பங்குபற்றியுள்ளனர்.

முன்னுதாரண முயற்சி எழுந்து நின்று பாராட்ட வேண்டிய பணி

மூடி வைத்திருப்பதற்கல்ல பள்ளிவாசல்கள்.மறைத்து வைக்க அங்கு என்னதான் இருக்கிறது? இறைவனை நினைவுகூரப்படுகின்ற இறையில்லம் அது.

அனைவரையும் அரவணைக்கும் ஆன்மிக இல்லம் அது.மனிதர்களை வாழ வைக்க வழி சொல்லும் இல்லம் அது. யாராக இருந்தாலென்ன. வரட்டும் பள்ளிவாசலுக்குள் நடப்பதை பார்க்கட்டும்

தோளோடு தோளாய் நின்று சிரம் தாழ்த்துவதை அவதானிக்கட்டும்

இடைத் தரகர் யாருமில்லை. இறைவனோடு நேரடியாக தொடர்பு கொள்வதே தொழுகை என்பதை கவனிக்கட்டும்அல்குர்ஆனை புரட்டிப் பார்க்கட்டும்

அதன் மொழிபெயர்ப்புகளை படிக்கட்டும்

பள்ளிவாசலுக்கு உள்ளே வந்து போகட்டும்

பள்ளிவாசலின் புனிதம் கெட்டு விடாது.

சிலபோது அது அந்த உள்ளங்களைத் தொட்டு விடும்!

உள்ளங்களை பார்ப்பவன் இறைவன். அவற்றைப் புரட்டுபவனும் அவனே!

அதற்கு ஒரு சந்தர்ப்பமாய் இது அமையலாமே!

அவர்களுக்கென்று பள்ளிவாசல்களில் ஓர் ஒழுங்கை உருவாக்குவோம்!

வரவேற்று உபசரிப்போம்!

அதற்கு முன்னர் மஸ்ஜிதுந் நபவியின் பணி பற்றி கற்றுத் தேறுவோம்!

அகிலத்துக்கே வழிகாட்ட வந்ததுதான் வான்மறை.

அகிலத்தாருக்கு அருளாக வந்தவர்தான் முஹம்மத் நபிகளார். மனித குலத்திற்கு இரட்சகனே அல்லாஹ்.

எத்தனை நாட்களுக்குத் தான் நாங்கள் மாத்திரம் சொந்தம் கொண்டாடுவது?

எல்லோருக்கும் சொந்தமான இறைவனை

சகலருக்குமாக வந்த தூதரை அனைவருக்குமாக இறங்கிய வேதத்தை

அவர்களுக்கு கொடுப்பதற்கான வழிகளை உருவாக்க வேண்டும். முள் வேலிகளை தகர்க்க வேண்டும்.அப்படியொரு வழிதான் திறந்த பள்ளிவாசல் தினம்.

அந்த வாசல் ஒரு நாளைக்கு மாத்திரம் திறந்து மூடலாகது. திறந்தே இருக்கட்டும்! திரைகள் விலகட்டும்!

தணிந்தது பதற்றம்

நாச்சியாதீவு விவகாரம்:

■ நாச்சியாதீவு பர்வீன்

கடந்த சில நாட்களாக நாச்சியாதீவில் முஸ்லிம்கள் வாழுகின்ற பிரதேசத்தில் இடம்பெற்ற இனவாத செயற்பாட்டினைத் தொடர்ந்து கடந்த புதன் கிழமை (29) அன்று பிரஸ்தாப பிரதேசத்தில் புத்தர் சிலை வைக்கப்போவதாக குறிப்பிட்ட பிக்கு பகிரங்க அறிவித்தல் விடுத்திருந்தார்.அதற்காக சிங்கள இளைஞர்களிடம் முகநூல் மூலம் ஆதரவையும் கேட்டிருந்தார்.

முஸ்லிம்கள் பூர்வீகமாக வாழ்கின்ற இந்தப்பிரதேசத்தில் முன்னர் எந்த இனவாத செயற்பாடுகளும் நடந்ததில்லை, அதற்கு காரணம் நாச்சியாதீவை சூழவுள்ள பெரும்பான்மையினர் வசிக்கின்ற சிங்கள கிராமங்களில் உள்ள பௌத்த பிக்குகளோடும் சிங்கள மக்களோடும் நாச்சியாதீவு மக்கள் மிகவும் புரிந்துணர்வோடும்,அன்னியோன்யமாகவும் வாழ்ந்து வந்தமையே. வருடந்தோறும் சிங்கள பௌத்தர்களால் நடத்தப்படுகின்ற அவர்களது மத ஊர்வலமானது நாச்சியாதீவு முஸ்லிம் மக்களின் அனுசரணையுடன் நடத்தப்படுவதும், முஸ்லிம்களின் பிரதேசத்திலிருந்தே இவை ஆரம்பிக்கப்படுவதும் கடந்த பலவருடங்களாக நடைபெற்று வருகின்ற விடயமாகும். இந்த ஒற்றுமைப் பாலத்திற்கு வழிகோலியவர் ஹிதோகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சி என்பதே உண்மை. கடந்த காலங்களில் பொதுபல சேனா வின் இனவாத போக்கின் போது கூட ஹிதோகம பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் அத்துருவெல்ல சத்தாதிஸ்ஸ ஹிமி ஆகியோரின் நேர்மையான நடவடிக்கைகளால் நாச்சியாதீவு முஸ்லிம் கிராமங்களுக்குள் பொதுபல சேனாவினால் ஊடுருவ முடியவில்லை.

இவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்து வந்த இரண்டு சமூகத்திற்குள்ளும் மனக்கசப்பை உண்டு பண்ணும் நோக்கில் நாச்சியாதீவில் சிலைவைக்க முனைகின்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது. இது தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வடமத்திய,வடமேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நிலவரத்தை விளக்கி நாச்சியாதீவில் நடைபெறவிருக்கும் இந்த அசம்பாவிதத்தை தடுத்து அங்கு வாழுகின்ற முஸ்லிம்களின் அச்சத்தை போக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதனடிப்படையில் இந்த இனவாத செயற்பாட்டை கட்டுப்படுத்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவி பீரிஸ் தலைமையில் விசேட குழு அமைக்கப்பட்டதோடு, உடனடியாக செயலாற்றுமாறும் அவருக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரினால் கட்டளை இடப்பட்டது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவி பீரிஸ் அவர்களின் தொடர்பு இலக்கமும் நாச்சியாதீவு முஸ்லிம் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையை சேர்ந்த உபதலைவர்களான

(15 ஆம் பக்கம் பார்க்க)

தொண்டைக்கழலை ஆபத்தானதா?

வாரம் ஒரு நோய்

தைரொயிட் சுரப்பியின் அசாதாரணமான வீக்கமே தொண்டைக்கழலை என அழைக்கப்படுகிறது. இது கண்டமாலை, முன்கழுத்து கழலை, என்றும் கூறுவார்கள். தைரொயிட் சுரப்பியின் வீக்கத்தால் கழுத்தும் குரல்வளையும் வீக்கம் அடைகின்றன. இந்த வீக்கம் தைரொயிட் சுரப்பி சரிவர செயல்படுகிறதா இல்லையா என்பதோடு தொடர்புடையது. தைரொயிட் சுரப்பி ஒரு சிறு வண்ணத்துப்பூச்சியின் வடிவில் மூச்சுக் குழாயின் முன்புறம் கழுத்துப் பகுதியில் அமைந்துள்ளது. உடலின் வளர்சிதை மாற்றத்தை (உணவை ஆற்றலாக மாற்றும் முறை) சீர்ப்படுத்தும் தைரொயிட் இயக்குநீரை இது சுரக்கிறது.

இந்நோய் பரவலாகக் காணப்படுவதற்குக் காரணம் அயடின் குறைபாடே. இதனால் இது அயடின் குறைபாட்டுக் கோளாறு என்றும் அழைக்கப்படுகிறது. உலக அளவில் 150 கோடி மக்கள் அயடின் குறைபாட்டு கோளாறுகளால் பாதிக்கப்படும் அபாயத்தில் இருக்கிறார்கள்.

இரு வகையான கண்டமாலைகள் உள்ளன:மென்சிறு கண்டமாலை: முழு தைரொயிட் சுரப்பியும் வீங்கி தொடுவதற்கு மென்மையாக இருக்கும்.

திரளைக் கண்டமாலை: தைரொயிட் சுரப்பியின் சில பகுதிகள் வீங்கித், தொடுவதற்கு முடிச்சுகள் போல இருக்கும்.

நோய் அறிகுறிகள்

தைரொயிட் சுரப்பியின் வீக்கமே கண்டமாலையின் முக்கிய அறிகுறி. இதனால் தொண்டையில் முடிச்சு உருவாகிறது. கீழ்க் காணும் அறிகுறிகள் இதனுடன் தொடர்புடையன:

மிகைச்சுரப்பு, எடை குறைவு, பசி கூடுதல், வெப்பம் பொறுக்க இயலாமை, குறைச்சுரப்பு, எடை கூடுதல்,மலச்சிக்கல், குளிர் தாங்கமுடியாமை, களைப்பு, உலர்ந்த செதில் போன்ற தோல்.

காரணங்கள்-

அயடின் குறைபாடு: இதுவே கண்டமாலையின் முக்கிய காரணம். இது ஹஷிமோட்டோவின் நோய் எனப்படும். கிரேவின் நோய் போலவே ஹஷிமோட்டோவின் கண்டமாலை நோயும் ஒரு தன்தடுப்பாற்றல் நோயாகும். சுரப்பியை மிகையாகத் தூண்டுவதற்குப் பதில் ஹஷிமோட்டோவின் நோய் சுரப்பியின் இயக்கு நீர் உற்பத்தித் திறனில் குறுக்கிடுகிறது. இதை ஈடுகட்ட உடல் சுரப்பியை வீங்கச் செய்வதால் கண்டமாலை உருவாகிறது.

நோய்கண்டறிதல்

உடல் பரிசோதனை: வீக்கத்தைப் பரிசோதிப்பதின் மூலம் மருத்துவர் கண்டமாலையைக் கண்டறிகிறார். மென்சிறு கண்டமாலை: முழு தைரொயிட் சுரப்பியும் வீங்கி இருக்கும்.

திரளைக் கண்டமாலை: தைரொயிட் சுரப்பியின் சில பகுதிகள் வீங்கி முடிச்சுகள் போல இருக்கும்.தைரொயிட் என்பது எமது தொண்டைப் பகுதியில் உள்ள ஒரு சுரப்பி. இதனால் தைரொயிட் நோய் என்றாலே தொண்டைப் பகுதியில் கட்டி அல்லது கழலை இருக்கும் என்பதுதான் பெரும்பாலானவர்களின் எண்ணமாயிருக்கிறது.

தொண்டையில் உள்ள தைரொயிட் சுரப்பியில் வீக்கம் (கழலை)இருந்தால் அது முன்பு குறிப்பிட்ட அயடின் குறைபாட்டால் ஏற்படும் கட்டியாகவோ, அல்லது நீர்க் கட்டியாகவோ (Cyst) இருக்கலாம். புற்று நோயாலும் அவ்விடத்தில் கட்டி தோன்றலாம். எனவே தைரொயிட் சுரப்பியில் பல்வேறு விதமான நோய்கள் ஏற்படலாம் என்பதை நாம் உணர வேண்டும். அவற்றிற்கு வெவ்வேறு விதமான சிகிச்சை முறைகள் இருக்கின்றன.

எத்தகைய சிகிச்சை தேவையென வைத்தியர்தான் தீர்மானிக்க முடியும். இத்தகைய கட்டி பொதுவாக பெண்களில் அதிகமாக இருக்கும் பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களில் அதிகம்ஒரே குடும்பத்தில் பலருக்கு வருவதற்கு வாய்ப்பு அதிகம் அயோடின் சத்து: மருத்துவப் பரிந்துரை இல்லாமலேயே அயடின் துணை உணவுகள் கடைகளில் கிடைக்கின்றன.அறுவை மருத்துவம்: கண்டமாலை மூச்சுவிடுவதிலும், விழுங்குவதிலும் குறுக்கிட்டாலோ, சிகிச்சையில் பலன் கிடைக்காவிட்டாலோ தைரொயிட் சுரப்பியின் பகுதியோ அல்லது முழுமையுமோ அகற்றப்படும்.

ஆதில் அலி சப்ரி

ஏமாற்றும் நல்லாட்சி

காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்றவகையில் விஷேட அரசாங்க அறிவித்தல் ஒன்றில் கடந்த 21ஆம் திகதி ரஷ்யாவில் கையெழுத்திட்டமை, நல்லாட்சி அரசாங்கத்திலாவது வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், வில்பத்து பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என்று எதிர்பார்த்திருந்தவர்களை பெரும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியது.

மார்ச் மாதம் 24ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பத்திரிகையில் அதி விஷேட அரசாங்க அறிவித்தலொன்று வெளியாக நாட்டின் ஒரு சாராரை பெரும் வெற்றிக் களிப்பிலும், 30 வருட யுத்தத்தால் அனைத்தையும் இழந்த இன்னோர் சாராரை மீண்டுமொருமுறை 1990ஐ நினைவூட்டுவதாகவும் அமைந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவில் மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தில் கையெழுத்திட்ட அரசாங்க அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

''1966ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தினாலும் 1979ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சட்டத்தினாலும் 1982ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தினாலும் 1988ஆம் ஆண்டின் 84ஆம் இலக்க சட்டத்தினாலும் 1995ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினாலும் 2009ஆம் ஆண்டின் 65ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3அ. ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், கீழ் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் வரையப்பட்டுள்ள எல்லைகளுக்கு உட்பட்ட 40030,525 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட மாவில்லு, வெப்பல், கரடிக்குழி, மறிச்சுக்கட்டி, விளாத்திக்குளம் மற்றும் பெரியமுறிப்பு ஆகிய ஒதுக்குக் காடுகளுக்கு உரியதான காட்டுப் பிரதேசத்துக்கு 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதியிலிருந்து மாவில்லு பேணற் காடு என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்'' என்பதாகும்.

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட வடபுல முஸ்லிம்கள் 25 வருட காலமாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் புத்தளத்தில் எவ்வித பயனுமின்றி, புற்பூண்டுகூட முளைக்காத கைவிடப்பட்ட உப்பளங்களிலும், மேலும் நான்கு மாவட்டங்களிலும் வாழ்க்கையை ஓட்டினர்.

30 வருட கொடிய போர் தமிழ் மக்களை மாத்திரமன்றி முழு நாட்டையும் பின்னடைவுக்குட்படுத்தியிருந்தது. அரசாங்கமும் சர்வதேச அழுத்த சக்திகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதிலும், மீள்குடியேற்றத்திலும், உண்மைகள் கண்டறியப்படுவதிலும் காட்டும் அக்கறை நாட்டின் சம பிரஜைகளான முஸ்லிம்கள் விடயத்தில் காட்டுவதில்லை என்ற என்பது மாவில்லு பேணற் காடு விடயத்தில் மீண்டும் உறுதியாகியுள்ளது.

யுத்த முடிவைத் தொடர்ந்து வடபுல முஸ்லிம்களும் பூர்வீகம் நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பூரணப்படுத்த முஸ்லிம்களின் மீள்குடியேற்றமும் தேவைப்பட்டது. முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை முன்னெடுக்க 2012.10.10 திகதி வர்த்தமானி அறிவிக்கப்பட்டு விஷேட ஜனாதிபதி செயலணியும் தாபிக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் பணிப்பின் பேரில் முஸ்லிம்களை மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு புத்தளம்- சிலாவத்துறை வீதியின் இருபுறமும் 250மீற்றர்கள் வரை ஒதுக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். பூர்வீக காணிகள் 25 வருடங்களில் காடுகளால் அடர்ந்திருந்ததை துப்புறவு செய்து குடியேறிய பின்னர் மீள்குடியேற்றத்தையும், நல்லிணக்கத்தையும் விரும்பாக இனவாத சுற்றாடலியலாளர்களும் ஊடகங்களும் வில்பத்து காடழிப்பு புரளியை ஏற்படுத்தி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு தொடர்ந்தும் தடைகளை ஏற்படுத்த ஆரம்பித்தனர்.

நல்லாட்சியில் வில்பத்து பிரச்சினை மற்றும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு சமுகமான தீர்வு கிட்டும் என்று எதிர்பார்த்திருக்கும்போதே, வடமாகாணம் மன்னார் மாவட்டத்தின் முசலி மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 40030,525 ஹெக்டெயார் பிரதேசத்தை அரசாங்க காட்டுப் பகுதியாக விஸ்தரிக்கும் பிரகடனத்துக்கு ஜனாதிபதி ஒப்பமிட்டு மாவில்லு பிரகடனத்தை வெளியிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் 2015ஆம் 2016ஆம் ஆண்டுகளில் வில்பத்து சரணாலயத்தில் சட்டலைட் உதவியுடன் ஜீ.பி.எஸ் தொழில்நுட்பம் மூலம் எல்லைகளை வகுக்கும் பணி ஆரம்பமானது. ஜீ.பி.எஸ் குறிப்பு முடிவுகளின்படி வடக்கு ஒருங்கிணைப்பு கிழக்கு 115967 தொடக்கம் வடக்கு 396424 வரையும், கிழக்கு ஒருங்கிணைப்பு கிழக்கு 1298677 தொடக்கம் அருவியாறு ஊடாக வடக்கு 384991 வரையும், தெற்கு ஒருங்கிணைப்பு கிழக்கு 119828 முனையிலிருந்து வில்பத்து தேசிய வனப்பூங்கா எல்லையூடாக கம்ஆறு வரையும் அதிலிருந்து வீதியின் முனை வரையும், மேற்காக ஒருங்கிணைப்பு 109972 ஒருங்கிணைப்பு 376004 முனை வரையும் வன எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மாவில்லு பேணற் காடு காணி சுவீகரிப்பின் சாதக பாதங்கள் குறித்து கலாநிதி ஏ.எஸ்.எம்.நௌபல் தெரிவித்ததாவது,

கலாநிதி ஏ.எஸ்.எம்.நௌபல்

இதுவரையிலும் வில்பத்து காட்டை முஸ்லிம்கள் அழித்தார்கள் என்ற குற்றச்சாட்டிலிருந்து முஸ்லிம்கள் விடுதலை பெறுகின்றனர். காடு வெட்டப்பட்டுள்ள பகுதிகள் சட்டரீதியாக முஸ்லிம்களின் பகுதி என்பது ஜனாதிபதியின் பிரகடனத்தால் உறுதியாகியுள்ளது. சுற்றாடல் அறிக்கைகள், சூழல் பாதிப்பு, சட்ட விரோத குடியிருப்பு போன்ற பேச்சுக்களுக்கு இனியும் இடமில்லை. ஏனெனில் சிலாவத்துறை- புத்தளம் வீதியின் இரு மருங்கிலும் உள்ள 250 மீற்றர் பகுதிகள் சட்டரீதியான குடியேற்றமாகியுள்ளது. எனவே இனிமேலும் அந்த குடியேற்றங்கள் அகற்றப்படும் நிலைமை வராது. முரிச்சுகட்டி பகுதியில் ஒரு கிலோ மீற்றர் வரையில் எல்லை கொடுக்கப்பட்டாலும் அதைத் தாண்டிய பகுதிகளில் ஏலவே காடு வெட்டப்பட்ட பகுதிகளையும் சேர்த்து உள்வாங்கியுள்ளனர். 250 மீற்றர் பாதைக்கு இருபுறமும் விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சில நன்மைகள் இருந்தாலும் இவர்களின் வாழ்வாதாரத்தையே பாதிக்கும் பாதக விடயங்கள் பலதும் இல்லாமல் இல்லை.

முஸ்லிம்கள் காலா காலமாக முன்னெடுத்து வந்த விவசாயம், சேனைப் பயிர்ச் செய்கை, மீன்பிடி, கால் நடை வளர்ப்பு போன்ற விடயங்களை இனிமேலும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமை உருவாகும். 25 வருடங்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தவர்கள் மீள் குடியேற்றப்பட்டு பூர்வீக இடங்களில் குடியேறியமைக்கும் காரணமே அவர்களின் வாழ்வாதாரம் இங்குள்ளமையினாலாகும். இப்போது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் பிரகடனத்தை ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

புத்தளத்தில் இவர்கள் வாழும்போது ஏனையோரைவிட அரைவாசி ஊதியத்துக்கே கூலி வேலைகளில் ஈடுபட்டனர். கைவிடப்பட்ட உப்பளங்களில் வசித்தவர்களுக்கு விவசாயமோ, எவ்வித வாழ்வாதார வசதியோ காணப்படவில்லை. இதுவே அவர்களை பூர்வீக காணிகளுக்கு மீள்குடியேறி வாழ்க்கையை புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்ற தேவையை உக்கிரப்படுத்தியது. இங்கும் இவர்களின் வாழ்வாதாரம் கெடும் நிலை உருவாகினால் இவர்கள் எவ்வாறு சீவிப்பார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது. ஜனாதிபதியின் செயற்பாடு வெறும் இனவெறுப்பு செயற்பாடா? என்று எண்ணத் தோன்றுகின்றது- என்றார்.

காடு என்கின்றபோது அதற்கு நான்கு பகுதிகள் உள்ளன. இனவாத சுற்றாடலியலாளர்கள், ஊடகங்கள் காட்டின் ஒரு பகுதி, அதுவும் காடுகளால் அடர்ந்த தமது பூர்வீகத்தைத் துப்புரவு செய்ததைக் காடழிப்பாக கருதுகின்றனர். முஸ்லிம்கள் 1080 ஏக்கர் வரையிலான பகுதிகளிலே வசிக்கின்றனர். காட்டின் ஏனைய பகுதிகளில் 35,000 தொடக்கம் 60,000 ஏக்கர்கள் வரை காடழிப்பு இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் தலைவர்களும் 1080 ஏக்கரில் காடழிப்பு இடம்பெறவில்லை என்று கூறுவதில் உறுதியாக உள்ளார்களே தவிர காட்டின் நாலா புறங்களிலும் 35,000 ஏக்கருக்கு மேற்பட்ட காடழிப்பும் 43க்கு மேற்பட்ட யானைகள் கொல்லப்பட்டுள்ளது குறித்து பேச மறந்து விடுகின்றனர். இனவாதிகளின் கண்களையும் ட்ரோன் கெமராக்களுக்கும் இவ்விடயம் இதுவரையில் தென்படவில்லை.

முஸ்லிம்களிடம் காடழிப்பு குற்றச்சாட்டை முன்வைக்கும்போது இல்லை என்று மறுக்கிறார்களே தவிர ஏனைய பகுதிகளில் உள்ள சிங்கள குடியேற்றங்களால் நிகழ்ந்துள்ள காடழிப்பை சுட்டிக்காட்ட தெரியாதவர்களாக இருக்கின்றனர். அனைவரும் காட்டின் ஒருபக்கம் பற்றி கதைக்கிறார்கள். பிரதான வில்பத்தில் நடந்துள்ள காடழிப்பை இனவாதிகள் மறைக்கிறார்கள். இது தொடர்பாக வெளிச்சம் போட்டுக்காட்ட இது வரையில் முஸ்லிம்கள் தவறிவிட்டனர்.

இதனை ஜனாதிபதியின் இனவெறுப்பு செயற்பாடு என்று மாத்திரம் கூறி, தப்பித்துவிடவும் முடியாது. முஸ்லிம்களின் விடயங்கள் பெரும்பான்மை மக்களையும் ஜனாதிபதியையும் சென்றடையாத குறையும் தொடர்கின்றது. வில்பத்து குறித்து பல விவாதங்கள் நடந்தாலும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், காணி பிரச்சினை, வாழ்வாதார பிரச்சினை, பூர்வீகம் குறித்து தெளிவான கருத்தோ, விபரமோ, எல்லைகள் பற்றி ஜனாதிபதிக்கு பலமான அறிக்கை சமர்ப்பிப்பதில் முஸ்லிம்கள் தோல்வியுற்றுள்ளனரா? என்ற கேள்வியும் எழுகின்றது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் சமூக விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படும் நிலைமை இதுவரையிலும் சாத்தியப்படில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போன்றே இடம்பெயர்ந்த, மீள்குடியேற்றப்பட்டுள்ளவர்களுக்குள்ளும் பிரிவினைகளும் காணப்படுகின்றன. அரசியல் ரீதியாக, இயக்க ரீதியாக பல பிரிவினைகளும் முஸ்லிம்களை பலவீனப்படுத்தியுள்ளன. வில்பத்து விடயத்தில் போராடும் கல்விமான்களுக்கிடையேயும் கருத்து வேறுபாடுகள் தொடர்கின்றன. முஸ்லிம் அமைச்சர்கள், அமைப்புகள், தலைமைகள் ஒன்றிணைந்த கருத்தை முன்வைக்க முன்வராததும் தோல்வியே.

முஸ்லிம் கல்விமான்கள் ஒன்றிணைந்து வில்பத்து பிரச்சினை தொடர்பாக நூலொன்றை வெளியிட்டிருந்தனர். Denying the Right to Return எனும் மீள்குடியேரும் உரிமையை மறுத்தல் என்ற தலைப்பில் வெளியான புத்தகமே அது. வில்பத்து பிரச்சினையின் ஆழ, அகலங்களை தெளிவாக எடுத்துக் காட்டும் நூல். முஸ்லிம்களின் துரதிஷ்டம். இன்றுவரையில் அந்த நூல் ஜனாதிபதியின் கரங்களுக்கு சென்றடையவில்லை. முஸ்லிம்களில் புத்தகத்தை ஜனாதிபதிக்கு யார் கொடுப்பது என்பதில் ஏற்பட்டுள்ள முரண்பாடு ஜனாதிபதியின் கரங்களுக்கு கிட்டாமைக்கு காரணமாகும். தூய நோக்கத்துடன் மீள்குடியேற்றத்துக்காக போராடும் முஸ்லிம் புத்திஜீவிகள் இவ்விடயத்தில் ஒன்றுபட்டு, புத்தகம் ஜனாதிபதியின் கரம் கிட்ட வழிசெய்யவேண்டும். அரசியல், கட்சி, அமைப்பு முரண்பாடுகளை மறந்து ஓர் சமூகத்தின் மீள்குடியேற்றத்தை உறுதி செய்யவேண்டும்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மாத்திரமா இந்த வன பாதுகாப்பு அம்சங்களும் சட்ட திட்டங்களும் என்ற கேள்வி முஸ்லிம்களிடம் எழுந்துள்ளது. வில்பத்து காட்டை சூழவுள்ள ஏனைய பிரதேச செயலகங்களுக்கு வேறு சட்டமா? காட்டைச் சூழ பிரதான காடழிப்பு நடைபெறும் பகுதிகள் ஏனைய பிரிவுகளில் உள்ளது. வன விலங்கு தாக்கம் கூடுதலாக உள்ள பகுதிகளும் அவையே. 1080 ஏக்கரில் 30 வருடம் துன்புற்ற மக்களுக்கு சட்டத்தின் கெடுபிடிகள் தொடரும்போதும், 35ஆயிரம் ஏக்கர் காடழிப்பு, 43 யானைகள் கொலை போன்றவற்றில் அரசும் இனவாத சுற்றாடலியலாளர்கள், ஊடகங்கள் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

இனவாத ஊடகங்களுக்கு கருவலங்காலிகுளம், போகஸ்வெவ, நந்திமித்திரகம, நாமல்கம, செலலிஹினிகம, உமா ஓயா, சிங்கராஜவனம் போன்றவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் சுற்றாடலியலாளர்களும், இனவாத ஊடகங்களும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அப்பாவி மக்களின் மீள்குடியேற்றம் வாழ்வாதாரத்தை பாதிக்கும் தீர்மானங்களை மேற்கொள்வதை ஜனாதிபதி, அரசாங்கம் மீள்பரிசிலனை செய்ய வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றோம்.



UMRAH
89,000/= Upwards

April | May குழு புறப்படுகின்றது
33,000 திருப்திகரமான யாத்திரைகள் (2000 - 2017)
April 05,09,11,13,15,20,27
ஆம் திகதிகளிலும் 100 பேர் கொண்ட விசேட குழுக்கள் செல்லவுள்ளன.

ரமழான் பக்கேஜ்கள்
முதல் 10 நாட்கள் - ரூபா 135000/-
கடைசி 15 நாட்கள் பக்கேஜ் A - ரூபா 195000/-
கடைசி 15 நாட்கள் பக்கேஜ் B - ரூபா 165000/-

வாடிக்கையாளர் வசதிக்காக எங்களுடைய கிளைகள் நாடு முழுவதும் வியாபிக்கப்படவுள்ளது.

மேலதிக பக்கேஜ்கள்
Standard Package - Rs. 89,000/-
Moderate Package - Rs. 115,000/-
Luxury Package - Rs. 145,000/-
VVIP Package - Rs. 175,000/-

ஏப்ரல் 10 நாட்களுக்கு 99,000/- மட்டுமே

தேவை
காத்தான்குடி, குருநாகல், வல்லம்பிட்டி கிளைகளுக்கு உடனடி வேலையாட்கள் தேவை உடன் விண்ணப்பிக்கவும்

10 நாட்களுக்கான பக்கேஜ்
Haramக்கு அண்மையான ஹொட்டல்கள்
பிரத்தியேக சேவைகள்
No.1 Umrah Operator in Sri Lanka
SriLankan SAUDIA KUWAIT AIRWAYS flydubai

வல்லம்பிட்டி, திருகோணமலை அனுராதபுரம், புத்தளம், காலி, களுத்துறை ஆகிய நகரங்களில் எமது கிளைகளை
மிக விரைவில் திறந்துவைக்கவுள்ளோம்

தலைமைக்காரியாலயம்
N.M. TRAVELS
Saudi Hajj Ministry Approved Organization
N.M. Travels & Tours (Pvt) Ltd.
569, Galle Road, Colombo 06. (Opp Roxy Cinema)
Phone - 2361254 / 2361255 / 2508438 Fax - 2587927
Email - nm.umrah@gmail.com

மேலதிக விபரங்களுக்கு
Haji M.S.H.Mohammed 071 2799648

எமது கிளைகள்
104, Main Street, Akkaraipattu. (Opp. Base Hospital) | Tel: 067 2057648
F25, 2nd Floor, Bus Stand Complex, Kurunegala. | Tel: 037 3124570
33/2, Main Street, Kattanakudy. (Opp. Gadafi Hotel) | Tel: 065 2057500
50, Yatinuwara Patu Mawatha, Kandy (Behind Muslim Hotel) | Tel: 081 2202007

MÖVENPICK SHAZA Rotana Marriott Hilton CROWNE PLAZA RAFFLES swissôtel pullman
RAMADA Radisson Mercure INTERCONTINENTAL Le MERIDIEN Fairmont HYATT HOTELS & RESORTS

மலரும் மொட்டு

ராட்ட , பா , 14,
ரா ச் ர் , ர –
ர ம்ப பு ராஜித்
அகமட் ர ட ர
11. 3.2 17
ர ர
ட ரர். ர ம் ர, ரப்பா
ற் ம் ற் ரர் ர்
ம் பற் ர
ர ர்.
- தகவல் இமாயா

விமானங்களில் பைலட்டுகளுக்கான ரகசிய படுக்கை அறை!

நீண்ட தூரம் செல்லும் பஸ்களில் இரண்டு ஓட்டுநர்கள் இருப்பது போன்று விமானங்களிலும் இரண்டு பைலட்டுகள் இருப்பார்கள். அவர்கள் மாறி மாறியே விமானங்களை செலுத்துவார்கள். ஒருவர் செலுத்தும்போது மற்றவர் ஓய்வெடுப்பதற்கு விமானத்தில் ரகசிய படுக்கை அறைகள் உள்ளன.

விமானத்தின் முதல் வகுப்பு இருக்கைகளுக்கு மேல்புறத்தில் இந்த ரகசிய படுக்கை அறைகள் இருக்கின்றன. இந்த படுக்கை அறையில் இரண்டு சாய்மான நாற்காலிகள், இரண்டு படுக்கைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. டிவி மற்றும் ரெஸ்ட் ரூம் வசதியும் இருக்கும். இந்த படுக்கை அறைக்கு சிறிய படிக்கட்டுகள் மூலமாக சுரங்கப்பாதையில் செல்வது போன்று மேலே ஏறி செல்ல வேண்டி இருக்கும். எனவே, இது பயணிகளுக்கு தெரிய வாய்ப்பில்லை.

வாழ்க்கையில் நாம் சில எதிர்பாராத பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். பிரச்சினைகள் நம்மை மேலாதிக்கம் செய்ய அனுமதிக்கக் கூடாது. நாம்தான் பிரச்சினைகளை மேலாதிக்கம் செய்ய வேண்டும். பிரச்சினைகளை தோல்வியுறச்செய்து, வெற்றி காண வேண்டும்.

கனவு நிறைவேறும்வரை முயற்சியை கலைத்து விடாதே ஏனெனில்.. முயற்சி மட்டுமே முன்னேற்ற மாளிகைக்கு முதலீடாகும் வெற்றிப்பாதை!!

'கொறித்துண்ணும் பாலூட்டி' இனத்தைச் சேர்ந்த எலிக்கு, மேல் தாடையில் உள்ள வெட்டுப் பற்கள் [இவற்றை உளிப் பற்கள் என்றும் சொல்வார்கள்] தொடர்ந்து வளர்ந்துகொண்டிருப்பதுதான் இவற்றின் முக்கியமான சிறப்பம்சம். இந்தப் பற்கள் தாமாகவே கூர்மையடையும். வெட்டுப் பற்களின் முன் பகுதியில் மட்டுமே எனாமல் இருக்கும். அதனால் தொடர்ந்து பயன்படுத்தும்போது, அந்தப் பற்களின் பின்புறம் தேய்ந்துகொண்டிருக்கும். அப்படித்தான் பற்கள் உளிபோன்று கூர்மையாகின்றன. நமது முன் பற்களையும் வெட்டுப் பற்கள் என்று சொல்லலாம். என்றாலும் அவை எலிகளின் வெட்டுப் பற்களைப்போன்றவை அல்ல.

கொறித்துண்ணும் இனத்தைச் சேர்ந்தவற்றின் முன் பற்கள் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்கும். எனவே அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும். இல்லையென்றால் அந்த முன் பற்கள் மிகவும் நீளமாக வளர்ந்துவிடும். பிறகு எதையும் கடிப்பதற்கு இயலாமல் போய்விடும்.

எப்போதாவது, மேல் வரிசை வெட்டுப் பற்கள் வளர்ந்து வாயைத் துளைத்துக்கொண்டு கீழே வந்துவிடுவதும் உண்டு. எனவே, எதையாவது கடித்துக்கொண்டிருப்பதைத் தவிர எலிகளுக்கு வேறு வழி இல்லை. முக்கியமாக, எலிகள் மென்மையான உணவுகளையே அதிகம் தின்றுகொண்டிருக்கும்போது பற்களின் நீளம் அதிகமாகும். அதுபோன்ற சூழ்நிலைகளில் மரம், பிளாஸ்டிக், கம்பி ஆகியவற்றைக் கடித்துக் கடித்து பற்களின் நீளம் அதிகரிக்காமல் எலிகள் பார்த்துக்கொள்ளும்.

எனவேதான் எந்தப் பொருளையும் எலிகள் விட்டுவைப்பதில்லை.

பசி தணிக்கும் பழம்

ஒரு குறிப்பிட்ட ஊரில் பல சிறப்புகளை கொண்ட சுவையான பழம் ஒன்று கிடைக்கும் என்றும் அதைப் புசித்தால் நெடுநாளைக்கு பசியே எடுக்காது என்றும் மற்றொரு ஊரிலிருந்த சூஃபி ஞானிக்கு தகவல் கொடுத்திருந்தார்கள்.

ஆனால், அந்த ஊருக்குப் போன அவருக்கு காய்கவி சந்தையில் அந்தப் பழம் கண்களில் படவில்லை. தயங்கியபடியே பார்த்துக்கொண்டு வந்தார்.

அவருடைய தயக்கத்தை பார்த்த ஓர் இளைஞன், அவரிடம் வந்தான். 'நீங்கள் எதையோ தேடுவதுபோல தெரிகிறது. நான் உங்களுக்கு உதவலாமா?' என்று கேட்டான்.

அவனிடம் 'இந்த ஊரில் அபூர்வமான பழம் ஒன்று கிடைக்கும் என்றும், அதை உட்கொண்டால் சில நாட்கள் வரை பசியே எடுக்காது என்றும் சொன்னார்கள். அந்தப் பழம் கிடைத்தால் அல்லது அதன் விதை கிடைத்தால் அதை எடுத்துப் போய் பட்டினியால் வாடும் மக்கள் உள்ள பகுதியில் பயிரிட முயன்று அந்தப் பகுதி மக்களின் பசியைப் போக்க முடியுமா என்று பார்க்கிறேன்' என்று பதில் சொன்னார் ஞானி.

இளைஞன் உடனே பரபரத்தான். 'சற்று இருங்கள், வருகிறேன்' என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போனான். சிறிது நேரம் கழித்து வந்தான். அவன் கையில் ஒரு பழம். 'நீங்கள் கேட்ட பழம் இதுதான், இந்தாருங்கள்' என்று சொல்லி அதை ஞானியிடம் கொடுத்தான்.

'இந்த ஊரில் இந்தப் பழம் நிறையவே கிடைக்கும் என்று சொன்னார்களே' என்று கேட்டார் ஞானி.

'உண்மைதான். இந்த ஊரில் இந்த பழம் நிறையத்தான் கிடைத்துக்கொண்டு வந்தது. ஆனால், மக்கள் சுயநலமிக்கள் ஆகிவிட்டார்கள். தாம் அனுபவிக்கும் பலனை பிறர் யாரும் அனுபவிக்கக் கூடாது என்ற சுயநல நோக்கில் இந்தப் பழத்தை பதுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதைப் பயிரிடும் முறையையும் மிக ரகசியமாக வைத்துக் கொண்டார்கள். என் வீட்டில் இருந்த ஒரு பழத்தை உங்களுக்காக நான் கொண்டு வந்திருக்கிறேன். பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவுவதற்காக இந்தப் பழத்தை நீங்கள் பயன்படுத்த போவதாக சொன்னதைக் கேட்டதும் உங்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்று எனக்கு தோன்றியது' என்று சொன்னான் அந்த இளைஞன்.

அவனுடைய செயலாலும் சொற்களாலும் நெகிழ்ந்த ஞானி, அவனை வாழ்த்தினார்: 'உன்னைப் போல பிறருக்காக உதவ முன்வரும் இளைஞர்கள் பெருகினார்களானால்' அவர்கள் வாழும் பகுதியில் யாருக்கும் எந்தக் குறையும் இருக்காது' என்றார்.

சங்கிலித் தொடர் .. பெண்கள் நூல்கள்...

ஏப்ரல் மாதம் சங்கிலித் தொடர் போல் நூல் வெளியீட்டு விழாக்கள்தான். அதுவும் பெண் எழுத்தாளர்களின் நூல்கள்.

ஏப்ரல் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நீர்கொழும்பு அல் - ஹிலால் கல்லூரி மண்டபத்தில் **வஸீலா** வின் சிறுகதைத் தொகுதி யொன்று அறிமுகம் செய்யப்படுகிறது. 'மொழியின் மரணம்" என்ற இத்தொகுதி ஏற்கனவே தமிழகத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டதுதான். இத்தொகுதியை அச்சிட்டு வெளியிட்டவர்கள் சென்னை பூவரசு பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தினர்.

மனித உணர்வுகளை உணர்ச்சிகரமாக வடிப்பதில் வல்லவரான கல்லொலுவை வளீலாவுக்கு, இந்த சிறுகதைத் தொகுதிக்காக அண்மையில் உலக பல்கலைக்கழகம் (அமெரிக்கா) பரிசு வழங்கிக் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

மன்னார் பெரியமடு கிராமத்தைப் பூர்வீகமாகவும் மினுவாங்கொடை கல்லொலுவையை வாழ்விடமாகவும் கொண்ட ஆசிரியை **றுவைதா மதீனா** கவிதைத் தொகுதி ஏப்ரல் 6ஆம் திகதி கல்லொலுவை அல் - அமான் மகாவித்தியாலயத்தில் வைத்து வெளியிடப்படவிருக்கிறது. 'குடிபெயரும் கனவுகள்" என்ற மகுடத்தில் வெளியாகும் இந்நூலின் வெள்ளோட்ட விழாவுக்கு, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் மன்னார் மைந்தன், றிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டுள்ளார்.

மூன்றாவது வெளியீடு கொழும்பு - 10 அல் - ஹிதாயா மகாவித்தியாலய எம். ஏ. பஹார்தீன் கேட்போர் கூடத்தில் ஏப்ரல் 22ஆம் திகதி பி.ப. 03.00 மணிக்கு நடைபெறுகிறது. பிரபல நாவலாசிரியர் **ஜரீனா முஸ்தபா** எழுதிய இரண்டு நூல்கள் ஒரே சமயத்தில் வெளியிடப்படவுள்ளன. ஒன்று 'இரு தீபங்கள்' என்ற சிறுகதைத் தொகுதி. மற்றையது 'சமூகமே பதில் சொல்' என்ற மனோதத்துவ கட்டுரைத் தொகுப்பாகும்.

இவ்விழாவின் பிரதம அதிதி அமைச்சர் றிஷாத் பதியுதீன்.

'கம்பெரலிய' வுக்கு தமிழ் வடிவம் தந்தவர் உவைஸ்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கொழும்பு - கல்கிஸ்ஸையிலுள்ள தென். கி. பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமான கல்வி செயல்திட்ட மையம்(ம்) மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்ற, பேராசிரியர் அல்லாமா மு.மு. உவைஸின் நினைவுச்சலிக் கருத்தரங்கின் போது பல முன்னைநாள் பேராசிரியர்களும் துறைத் தலைவர்களும், பேராசிரியர் உவைஸ் மற்றும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆழமான கட்டுரைகளைச் சமர்ப்பித்து உரையாற்றினர்.

காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்று முடிந்த அவ்விழாவில், பேராசிரியர் உவைஸின் ஆற்றல் அபூதம் பற்றி வெகு சிறப்பாக எடுத்தாளப்பட்டாலும் கூட, ஆக்க இலக்கியத்துறையில் அவர் ஆற்றியுள்ள பங்குகள் சரியாக வித்தூரைக்கப்படவில்லை.

முதலாவதாக உவைஸ் நல்லதொரு மரபுவழிக் கவிஞர். 'முல்லைப்பாணன்' என்ற புனைப் பெயரில் வீரகேசரி வார மலரில் கவிதைத் தொடரொன்றையே எழுதியிருக்கிறார்.

அத்தோடு, ஆக்க இலக்கியத்துறைக்கு மிகச் சிறந்த தொண்டொன்றை நல்கியிருக்கிறார். அதாவது எழுத்துலக மேதை, **மார்ட்டின் விக்கிரமசிங்க** வின் **'கம்பெரலிய'** என்ற சர்வதேசத் தரம் வாய்ந்த சிங்கள நாவலை 'கிராமப்பிறழ்வு' என்ற மகுடத்துடன் மொழி பெயர்த்தவர்தான் பேராசிரியர் உவைஸ். வேறு எந்த எழுத்தாளனும் தமிழில் மொழிபெயர்க்கவில்லை. எம். ஏ. குணசேன நிறுவனம் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டது.

'கம்பெரலிய' திரைப்படமாக வெளிவந்து இந்தியாவில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்படவிழாவில் சிறந்த படத்திற்கான 'தங்கமயில்' விருதைப் பெற்றமை வரலாற்றுப் பதிவாகும். திரைப்பட மேதை லெஸ்டர் ஜேம்ஸ் பிரிலின் நெறியாள்கையில் வெளியான இப்படத்தில் நடிப்புலகமேதை, காமினி பொன்சேகா நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Lost Paradise

காடழித்து வீடுகட்டிய
காலம் மாறிப் போய் - இப்போ
வீடழித்து காடு கட்டும்
வித்தை தொடர்கிறது!

மனிதர்கள் வாழ்ந்து வந்த
மண் வீட்டைத் தகர்த்து
மிருகங்கள் நடமாட
பெரு விருட்சம் வளர்க்கிறார்!

பல்லீஸ்ராணி - பவிசாய் ஆண்ட
குதிரை மலைத் துறையருகில்
குடியிருந்த **மறிச்சுக்கட்டி**
மிருகங்கள் உறைவிடமாம்
மாற்றுதற்கு
எத்தனம் கொண்ட
இன வெறிக் கூத்தர்கள்

வெற்றி பெற்றதாய்
வீணி வடிக்கின்றார்...

பொல்லாத ஆட்சி கூட
புரியாத கொடுமைகளை
நல்லாட்சியே - நீ எதற்கோ
நாடினாய்... கேடுதான்!

நான் வரைந்த பள்ளியுள்
புலிகள் புகுந்ததால் - பள்ளி
நாறிப் போய்க் கிடந்தது
இன்று
புலிகள்... புறமுதுகிட
சிங்கங்கள் புகுந்து
சீழ் வடிக்கின்றன



எங்கள் மீது எல்லோருக்கும்
என்னதான் கோபம்
ஓ... நாங்கள் முஸ்லிம்களல்லவா...?

ஓ...
என்னருமை மறிச்சுக்கட்டியே!
என் மண்ணே!
நான் புரண்ட புழுதியே!
நான் தொழுத பள்ளியே!
உன்னைப் பிரிகிறோம்
சிங்கங்களிடமும், சிறுத்தைகளிடமும்
பன்றிகளிடமும் பறி கொடுத்துவிட்டு
நரிக்குறவர்போல் - நாடோடிகள் போல்
நாடற்ற பிரஜைகளா விம்பத்து
முஸ்லிம்கள்

- கலைவாதி கலீல்

கழுவின மீன்களில் நழுவின மீன்கள்

பட்டுக் கோட்டையாரின் உணர்ச்சிமயமான பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

திட்டம் போட்டு திருடுற கூட்டம்
திருடிக் கொண்டே இருக்குது - அதை
சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்குது
திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது
திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது!

புரட்சிகர சிந்தனையும் முற்போக்குப் பார்வையும் கொண்ட சமவுடமைவாதியான கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் உதிர்த்த அமுதமொழி இது.

நூற்றுக்கு நூறு உண்மை!

திருடனுடைய மனச்சாட்சி உறுத்த வேண்டும். அந்த மனச் சாட்சிக்குக் கட்டுப்பட்டுத்தான் திருடன் திருந்த வேண்டும்.

பாப்பா பாட்டுப் பாணியில் அமைந்துள்ள இப்பாடல் மூலம் பட்டுக்கோட்டையார் எவ்வளவு பெரும் தத்துவத்தை விதைத்துச் சென்றுள்ளார். அது மட்டுமல்லாது, பாமரன் முதல் படித்தவன் வரை அனைவர் மனங்களையும் கொள்ளை கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி. ஆரின் வாய்வழியே இப்பாடல் ஒலிக்கும் போது அது எவ்வளவு மின்னல் வேகத்தில் மக்களைச் சென்றடைந்திருக்கும் என்று கூறி வைக்க வேண்டியதில்லை.

'பேசும் பேனா' வின் இந்தப் பீடிகையெல்லாம் எதற்கென்று யோசிக்கிறீர்களா? எல்லாம் காரணமாகத்தான்.

முஸ்லிம்களின் மதச் சடங்குகளில் ஒன்றான நோன்பைப்பற்றி ஒரு கருத்து உண்டு. ஒருவர் நோன்பு நோற்கிறாரா என்று அவருக்கு மட்டும்தான் தெரியும்(ஆனால் இனைவனுக்கும் தெரியும்). எனவே நோன்பு நோற்பவர் அல்லது நோற்றவர் போல் நடிக்க முற்படுபவர் அவரது மனச்சாட்சியின்படி நடந்து கொள்ள வேண்டும். இந்த நோன்புப் பிடிகை எதற்காம் என்று யோசிக்கிறீர்களா?

அழகிய மாங்காய்த்தீவான, வற்றாத நதியும் வளமான நீருற்றும் நிறைந்த பொன்கொழிக்கும் பூமியான, இந்த இலங்கைத் தீவில் தற்போது பஞ்சமா பாதகம் பேய்போல் தலைவிரித்தாடுகிறது. பிஞ்சுப்பாலகி முதல் பேரிளம் பெண்வரை கற்பழிக்கப்படுகிறார்கள். பின்னர் கொல்லப்படுகிறார்கள். மித்திரத் துரோகங்களும், காட்டிக் கொடுப்புகளும், கழுத்தறுப்புகளும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து கொண்டே இருக்கின்றன. சட்டம் என்ன செய்து கொண்டிருக்கிறது. சட்டத்திலுள்ள சிறிய ஓட்டைகளைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கிறார்கள். சட்டத்தின் அழுங்குப்பிடியிருந்தும் கூட குற்றவாளிகள் தப்பிக்கும் விகிதாசாரம் கூடிக் கொண்டே செல்கிறது. அதனால்தான் பட்டுக் கோட்டையாரின் பாட்டொன்றை நினைவூட்டினேன்.

- கலை

சர்வதேச பிடியிலிருந்து மீளும் இலங்கையின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு அளப்பரியது

யொவுன்புற நிகழ்வில் இரா. சம்பந்தன்

(இருமலை எம். ரீ. எம். பாரிஸ், இண்ணியா சஹ்ரின் எம். இல்மத், யூ.கே.காலித்தின்)

நமது நாடு சர்வதேச சமூகத்திற்கு கீழ் அடிபணிந்து வாழ வேண்டிய சூழலில் இருந்து தற்போது அவை மெது மெதுவாக மீட்கப்பட்டு வருவதற்கு அரசாங்க அர்ப்பணிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் இளைஞர் சமூகத்தில் பங்களிப்பு மிகவும் உன்னதமானதும், முக்கியத்துவமானதுமாகும். என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமாகிய இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலவல்கள் அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான எட்டாவது யொவுன்புற நிகழ்சி நிடட்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இரா.சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 2017ம் ஆண்டு இருகோணமலை மண்ணில் நடைபெறுகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த யொவுன்புற நிகழ்ச்சி நிட்டத்தின் ஆரம்ப வைபவத்திற்கு எள்னை முதன்மை விருந்தினராக அழைத்தமைமிட்டு நான் மிகவும் சந்தோசம டைகின்றேன். இது ஒரு நல்ல எதிர்காலத்திற்கான ஆரம்பமாகவே கருதுகின்றேன். என்னையும் என்னைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இம்மாவட்டத்தினையும் கௌரவப்படுத்தி இந்நிகழ்வை ஏற்பாடு செய்தமையானது ஒற்றுமையையும், சகோதரத்துவத்தினையும் கட்டியெழுப்பும் நல்ல ஆரம்பமாகவே நான் பார்கின்றேன்.

ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டு சிந்தனையையும் வளர்ப்பதன் மூலமே நாட்டின் நிலையான சமாதானம் உருவாகும்.

இதனை இளைஞர் சமூகத்திடமிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம். இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள். இன்றைய இளைஞர்களையே இந்த நாடு நம்பியுள்ளது. ஆகவே இளைஞர்களாகிய நீங்கள் ஒற்றுமையையும் சமூக ஒருமைப்பாட்டையும் நிலை நாட்டுவதற்கு முன்வர வேண்டும்.

நம் நாட்டினுடைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவில் உருவான இந்த யொவுன்புறத் திட்டம் மிகவும் வரவாஙது. நாட்டிற்கு நன்மையளிக்கூடியது. நாட்டினுடைய பொருளாதர அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை ஆற்றக்கூடியது. இதனால்தான் பிரதமர் இளைஞர் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி தன்னுடைய தேசிய கொள்கைகளை மற்றும் பொருளாதார விவகாரங்களை தனது அமைச்சினுள் வைத்திருக்கின்றார். இதிலிருந்து இளைஞர்களுக்கும் நாட்டினுடைய பொருளாதர முன்னேற்றத் திற்கும் பாரிய தொடர்பு இருக்கின்றது என்பது புலனாகின்றது.

இந்த நிகழ்வுக்கு வந்திருக்கும் இளைஞர்களிடம் இறுதியாக கூறிக் கொள்வது, நீங்கள் தொழில்நுட்பம், கல்வியறிவு, திறன் விருத்தி போன்றவை மூலம் ஆளுமைமிக்க இளைஞர்களாக உருவாகி ஒற்றுமையுடனும், சமூக ஒருமைப்பாட்டுடனும் செயல்பட வேண்டும் என இந் நேரத்தில் கேட்டு வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என இரா. சம்பந்தன் தனது உரையில் கூறினார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான சட்டத்தரணி ஏரந்த வெலியகே தலைமையில் நடைபெற்ற எட்டாவது யொவுன்புற நிகழ்ச்சித் திட்டம் திருகோணமலை மெக்கேசர் மைதானத்தில் புதனன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஏறத்தாழ 6000 இளைஞர் யுவதிகள் பங்குபற்றும் இந்த நிகழ்வில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்களுக்கான இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா, அமைச்சின் செயலாளர் எம்.ஐ.எம். ரபீக், மெக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னான்டோ, முதலமைச்சர் நளீன் அகமட் மற்றும் மாகாண அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட பிரதேச செயலாளர்கள், முப்படை உயர் அதிகாரிகள், வெளிநாட்டு இளைஞர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொடகே தேசிய சாகித்திய விருது

கடந்த 16 வருடங்கள் இலங்கை இலக்கியத்தை வளர்த்தெடுக்கும் முகமாகவும், முன்னெடுத்துச் செல்லும் வகையிலும், வழங்கப்பட்டு வரும் கொடகே தேசிய சாகித்திய விருது இலங்கை தமிழ் இலக்கியத்திற்கும் கடந்த 07 வருடங்களாக வழங்கப்பட்டு வருகிறது.

இவ்விருது, 2016 ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை நூல்களில் இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களின் சிறந்தவை தெரிவு செய்யப்பட்டு கொடகே தேசிய சாகித்திய விருது வழங்கப்படவுள்ளது.

சிறந்த நாவலுக்கு ரூபா. 100000 ரூபாவும் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கு ரூபா. 25000 ரூபாவும், சிறந்த கவிதைத் தொகுதிக்கு ரூபா. 25000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

சிங்கள - தமிழ் மொழிகளில் இனஐக்கியத்தையும், இனங்களிடையே நல்லுறவைக் கௌரவிக்கும் முகமாகச் சிங்களத்தில் விருது தமிழுக்கும், தமிழிலிருந்து சிங்களத்திற்கும் மொழி பெயர்க்கப்பட்ட நூல் ஒவ்வொன்றுக்கும் இன ஐக்கியத்திற்கான மொழிபெயர்ப்பு நூலுக்கான கொடகே தேசிய சாகித்திய விருது வழங்கப்படும். மூலநூல் இலங்கையில் வெளியிடப்பட்டு இருத்தல் வேண்டும். பரிசிலனைக்கு அனுப்பப்படும் நூல்கள் முதல் பதிப்பாக இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN பெற்றுக் கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும்.

பரிசிலனைக்கு நூல்கள் முன்று பிரதிகள் 2017 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக தேரடியாகவோ, தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். 661,651, 675, பி. ஏ.எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு-10. 0112683322,04614904.

திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு தடை உத்தரவு

(திருகோணமலை அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலையில் எதிர்வரும் நாட்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திருகோணமலை தலைமையக பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.தயந்தவினால் (29) புதன்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்ட்டது.

கடந்த பெப்ரவரி 28ம் திகதி தொடக்கம் இற்றைக்கு வரைக்கும் கிழக்கு ஆளுனர் அலுவலகத்திற்கு முன்னால் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் சமாதானமான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் இம்மாதம் 04ம் திகதி முதல் தொடர்ச்சியாக உணவு தவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் யொவுன்புற என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்திச்செல்வதோடு இந்த வேலைத்திட்டம் ஏப்ரல் மாதம் 2ம்திகதி வரை நடாத்துவதற்கு தயார் படுத்தப்பட்டு இருப்பதாகவும் இந்நிகழ்ச்சிக்காக பொது மக்களும் அரச உத்தியோகத்தர்களும் மேன்மை தாங்கிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேவும் பிரதமர் ரணில் விக்ரம சிங்கவும் உள்நாட்டு,வெளிநாட்டு அதிகாரிகளும் வருகை தரவுள்ளனர்.

இதனால் இந்த ஆர்ப்பாட்டக்காரர்களால் அவர்களுடைய எதிர்பார்ப்பு அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக தற்போது அமைதியாக நடாத்திசெல்லும் ஆர்ப்பாட்டத்தை மக்களுக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் பிரதான வீதிகளுக்கு தெறிசலை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவியாக காணாமல் போன அங்கத்தவர்களையும் இணைத்துக்கொண்டு இதற்கு முன்வரும் நாட்களில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக பொலிஸ் புலனாய்வு பிரிவிற்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் பொலிஸார் நீதிமன்றிற்கு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எந்த ஆர்ப்பாட்டங்களுக்கும் கவனயிர்ப்பு போராட்டங்களுக்கும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிப்பதுடன் தங்களுடைய ஏனைய சங்க உறுப்பினர்களை அமைதியான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பூகொட பெல்பிட கனிஷ்ட வித்தியாலத்தின் நீர் விநியோகத்திட்டத்தை தொழிலதிபர் எல்.ஐ.ஏ.எம். ஸ்பான் 9இலட்சம் ரூபா செலவில் நிர்மாணித்தார். இந்த நீர் விநியோகத்திட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் தொழிலதிபர் எல்.ஐ.ஏ.எம். ஸ்பான் நீர் விநியோகத்திட்டத்தை திறந்து வைப்பதையும் மேல் மாகாண சபை உறுப்பினர் உபாலி குணரத்ன நிற்பதனை படங்களில் காணலாம்.

(படங்கள் பூகொட ஏ.எச்.எம். இர்பான்)

ஜப்பானிய குண்டு வீச்சின் போது தீரம் காட்டிய மர்ஹூம் சி.எம். எஸ். ஹமீத்

நம் நாட்டு தேசிய வீரர்களில் முக்கிய பற்கேற்று தன் உயிரையும் துச்சமாக மதித்து இற்றைக்கு 74 ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானியரின் விச்சிலிருந்து நம் நாட்டைக்காப் பாற்றப் போராடிய அமரர் வாட்டன் சி.எம். சாஹூல் ஹமீத் மறைந்து 42 ஆண்டுகளாகின்றன.

1942 ஆம் ஆண்டு செத்திரை மாதம் 5 ஆம் திகதி காலை 7.42 மணியளவில் ஜப்பானியர் இலங்கை தலைநகர் கொழும்பின் மீது விமானத்திலிருந்தவாறு குண்டுகளைப்போட்டு சேதப்படுத்தினர்.தலைநகர் வெறிச்சோடியிருந்தது. இப்பயங்கர வேளையில் வாட்டன் ஹமீத் நாட்டைக்காப்பாற்ற பல வழிகளிலும் நிவிரமாக செயலில் ஈடுபட்டிருந்தார்.

விமானம் மூலம் வெடிகுண்டுகள் வீசப்பட்டபடி பாரிய சேதம் ஏற்பட்டது. வாட்டன் சாஹூல் காயப்பட்ட மக்களை வைத்திய நிலையங்களுக்கு சிகிச்சை பெற ஒழுங்கு செய்ததுடன் இலங்கை பாதுகாப்பு படை தீயணைக்கும் படைகளின் துறைமுக தீயணைக்கும் படைகளின் ஒத்துழைப்புடன் பலவிதமான ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றினார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச எனது தந்தைக்கு நினைவு முத்திரை வெளியிட ஏற்பாடு செய்தார். ஆனால் அன்றைய தபால் அமைச்ச உத்தரவிடவில்லை. இவரது முத்த மகன் அகில இலங்கை எம்.ஜீ.ஆர். மன்றத்தின் தலைவராவார். நம் நாயகத்தைக் காப்பாற்றிய இத்தேசிய வீரருக்காக பிரார்த்திப்போம்.

நூருல் ஹுதா மக்தின் இரண்டு ஆண்டு பூர்த்தி விழா

(பேருவளை நிருபர்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைமையில் மக்கொனை அலவியா தக்கியா பள்ளி வாசலில் இயங்கிக் கொண்டிருக்கும் நூறுல் ஹுதா மக்தபின் முதலாம், இரண்டாம் வருட பூர்த்தி விழாவும் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழாவும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. 1.30 மணியளவில் மக்கொனை அலவியா தக்கியா பள்ளி வாசலில் நூறுல் ஹுதா மக்தபின் அதிபர் மௌலவி எம்.எம்.எம். முஸ்மி இல்ஹாரி தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக அஷ்ஷெய்க் ஏ.எஸ்.எம்.ஜிப்ரி(இல்ஹாரு இல்லாம் அரபுக் கல்லூரி அதிபர்)பங்கு பற்றுவார். அத்துடன் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மக்தப் பிரிவினர் களுத்துறை வலய மேற்பார்வையாளர் றிழ்பு பேச்சாளராக அஷ்ஷெய்க் எம்.எம். எம். வியாஉத்தின் முப்தி ,(விரிவுரையாளர் குல்லியாத்துல் அல்ஹக்காஸியா அரபுக்கல்லூரி) கலந்துகொள்வார்.

மாவனெல்லை வை.எம்.எம்.ஏ இளைஞர்மன்றம் அண்மையில் டாக்டர் ரியாம் பாரூக்கினால் மனஅழுத்தமும் அதற்கான பரிகாரமும் என்ற தலைப்பில் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மர்ஹூமா ஹாஜியாவி ஆயிஷா ஹாசிமின் நினைவாக ''அல்அவ்ன்'' எனும் சஞ்சிகை கையளிக்கப்பட்டது.

'மொழியின் மரணம்' நூல் வெளியீடு

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

கல்லொலுவை, மினுவாங்கொடை வலயக் கல்வி அலுவலகம் எழுதிய 'மொழியின் மரணம்' நூலுக்கான தொகுதியின் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்கொழும்பு அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

முகர்ரமா சர்வதேச பாடசாலை மற்றும் அல் - ஹிலால் மத்திய கல்லூரி மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மேல் மாகாண சபை உறுப்பினர் ஷாமி ரஹீம், கௌரவ அதிதியாக இந்திய பூவரசி பதிப்பகத்தின் பணிப்பாளர், எழுத்தாளர் சமுவாணி, விசேட அதிதிகளாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் நவமணிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான எஸ். எம். அமீன், இலங்கை சூபவாஹினிக் கூட்டுதாபன தமிழ் செய்திப்பிரிவு பணிப்பாளர் யூ.எல் யாகூப், கலாபூஷண முபஷீர், லேக் ஹவுஸ் தமிழ் பிரசுரங்களின் ஆலோசகர் எம். ஏ. எம். நிலாம், நவமணிப் பத்திரிகையின் ஆசிரியர் பிட உறுப்பினர் காவ்யாமினி கலைவாதி கலீல் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

அல் -ஹிலால் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எம்.எம். இர்ஷாத் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில், முதற் பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வதோடு, விழாவை வசந்தம் எப்.எம். அறிவிப்பாளர் ஏ. எம். அஸ்கர் தொகுத்து வழங்குகிறார்.

ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்
முஸ்லிம் பெண்களுக்கான உயர் இஸ்லாமிய கலாபீடம்
குறீகொடுவ பஹமுன
ISO 9001:2008

1) புதியமாணவியர் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை - 2017

■ எமது கலைத்திட்டத்தில்
* ஆழமான இஸ்லாமியக் கலைகளோடு பல்கலைக்கழக நுழைவுக்கான வழிகாட்டல்கள்.
* தகவல் தொழிநுட்பத்தில் Diploma (NVQ 3)
* அறபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ்மொழிகளில் தேர்ச்சி.
* தையல், மனையியல் மற்றும் இஸ்லாமிய முன்பள்ளி நவீன அணுகுமுறைகளூடன் குர்ஆன் மத்ரஸா நடாத்தும் பயிற்சிகள்.
* குடும்ப வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு பற்றிய வழிகாட்டல்கள், விஷேட பயிற்சிகள்.
* பயிற்சியின் இடையில் / முடிவில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புக்கான வாய்ப்புக்கள்.
* விஞ்ஞானப் பிரிவில் சுற்கவிரும்பும் மாணவிகளுக்கு விசேட ஏற்பாடுகள்.

■ தகைமைகள்
* 17 வயதிற்கு உட்பட்டிருத்தல்.
* 2016ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல்.
* அல் குர்ஆனை சரளமாக ஓதும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.
* தேசாரோக்கியமுடையவராக இருத்தல்;.

■ நேர்முகப்பரீட்சை
காலம் : வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய மாகாணங்கள் 09.04.2017 (ஞாயிற்றுக்கிழமை)
: வடமேல், மேல், தென், ஊவா, சப்ரகமுவ மாகாணங்கள் 10.04.2017 (திங்கட் கிழமை)
நேரம் : மு.ப.9.00 மணிமுதல்
இடம் : ஹாதியா வளாகம்

■ பரீட்சிக்கப்படும் ஆவணங்கள்
1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2. பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த) பெறுபேற்றுச் சான்றிதழ்
3. தேசிய அடையாள அட்டை

மேலதிக தகவல்களுக்கு : 0724189712, 0767328233, 0715561317

2) ஆசிரியர் வெற்றிடங்கள்

2.1. அரபுமொழி, இஸ்லாமிய பாட ஆசிரியர்கள் (ஆண் / பெண்)
தேவையான தகைமைகள்
* மௌலவி தராதரத்துடன் பல்கலைக்கழகப் பட்டம் (Degree with Moulavi) அல்லது
* அல்ஆலிம் பகுதி I, II உடன் மௌலவிப்பட்டம்

2.2. ஆசிரியர் (ஆங்கிலம்)
தேவையான தகைமைகள்
* பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றபட்டம் அல்லது
* HNDE சான்றிதழ் அல்லது
* க.பொ.த உயர்தரம் வரை ஆங்கில மொழியில் சுற்றிருத்தல்

2.3. ஆசிரியர் (சிங்களம்)
தேவையான தகைமைகள்
* பல்கழைக்கழகத்தில் சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு பெற்ற பட்டம் அல்லது
* க.பொ.த உயர்தரம் வரை சிங்கள மொழியில் சுற்றிருத்தல்

குறிப்பு: ஆண்கள் திருமணம் முடித்தவர்களாக இருத்தல் வேண்டும். ஹாதியாவில் சேவையில் இணைந்து கொள்பவர்களுக்கு அதன் சம்பளத் திட்டத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ஊழியர் சேமலாபநிதி (EPF) ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஆகியவற்றுக்கு அரசாங்க விதிகளுக்கமைவாக பங்களிப்பு செய்யப்படும். தகுதியும் ஆர்வமுள்ளவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் எதிர்வரும் 10.04.2017 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

The Secretary,
Hadhiya Islamic Institute, Kureekotuwa, Pahamune (60112)

சிரேஷ்ட மனநல ஆலோசகர்
துணைத்தலைவர், இலங்கை உளவள ஆலோசக நிபுணர்கள் சங்கம், இலங்கை மன்றம்
பிரதித் தலைவர் போதைப்பழக் கத்துக்குட்பட்டோருக்கான தேசிய மனவள ஆலோசனை சபை
அஸ்ஹர் அன்ஸார்
M.S Psych (Ind), A.D.Psycho.C (SL), D.Psy.C (SL), D.Y.T (Ind), FRSPH (UK)

கருகவைக்கும் கவலை

தொடர் 177

★ நாம் ஒவ்வொருவரும் மனநிம் மதியோடு வாழவே ஆசைப்படுகிறோம்

★ சந்தோசம் மனதில் இருக்க வேண்டும் என்று எப்பபோதும் எதிர் பார்க்கிறோம்.

★ எமது நோக்கங்கள் நம்பிக்கை கள் நிறைவேற வேண்டும் என்று காத்தி ருக்கிறோம்.

★ எமது உடல் நோயின்றி ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்

ஆனால் இப்போது நம்மில் பலர் மனஅமைதி இல்லாதவர்களாகவும் சந்தோசத்தை அனுபவிக்க இயலாதவர் களாகவும் பல உடல் நோய்களின் பிடி யில் சிக்குண்டவர்களாக இருக்கிறார்கள் என்று அடிக்கடி நாமே சொல்லிக்கொள் கிறோம். அல்லது பலர் சொல்லக்கேட் கிறோம்.

அப்படியானால் எங்கள்

★ மனஅமைதியை வேட்டையா டிச்செல்வது எது?

★ எங்கள் சந்தோசத்தை திருடிச் செல்வது எது?

★ எங்கள் எதிர்பார்ப்புகளை, நம்பிக்கைளை பலவீனப்படுத்துவது எது?

★ எங்கள் உடல் சுகத்தை ஆபத் தாக்குவது எது?

★ குறிப்பாகச்சொன்னால் எமது அன்றாட வாழ்வுச்செயற்பாடுகளை கட் டுப்படுத்துவது எது?

நாம் ஆழமாக சிந்தித்து இந்த வினாக் களுக்கான பதிலை தேடிப்பார்க்க கட மைப்பட்டிருக்கிறோம்.

எங்கள் உள்ளத்தோடு உடலோடு அல்லது நாம் அனுபவிக்கும் வாழ்க் கையோடு தொடர்பான கேள்விகள் இருந்தால் எங்களுக்குள்ளேயே அவற் றுக்கான பதில்களும் இருக்கவேண்டும்.

எமது அன்றாட வாழ்க்கையில் நாம் செய்யும் அனைத்துக் கருமங்களையும் மனஅமைதியோடும் சரியான எதிர் பார்ப்போடும் செய்யமுடியாமல் போவ தற்கு மிகமுக்கிய காரணியாக இருப்பது நம்மில் அனேகர் அனுபவிக்கும் கவ லையாகும். ஏதோ ஒரு விடயத்திற்காக அல்லது பல விடயங்களுக்காக நம்மில் பலர் கவலைப்பட்டுக்கொள்கிறார்கள். கவலை இன்றைய சமூகத்தில் வாழும் மக்களின் அன்றாட வாழ்வை அச்சு ருத்தும் ஒரு விடயமாக மாறிவருகிறது.

★ பொருளாதாரம் பற்றி கவலைப் படுகிறார்கள்

★ உடல் ஆரோக்கியம் பற்றி கவலைப்படுகிறார்கள்

★ நோய்களுக்கு அதிக செலவு செய்ய நேரிடுகிறதே என்று கவலைப்ப டுகிறார்கள்

★ அப்படி ஆகிவிட்டதே என்று கவலைப்படுகிறார்கள்

★ பிள்ளைகளால் ஏற்படும் தொல் லைகள் பற்றி கவலைப்படுகிறார்கள்

★ சரியான தொழில் இல்லையே என்று கவலைப்படுகிறார்கள்

★ இயற்கை அனர்த்தங்கள் ஏற் பட்டு உடமைகள் அழிந்துபோய்வி டுமோ என்று கவலைப்படுகிறார்கள்

★ அன்பு ஆதரவு இல்லையே என்று கவலைப்படுகிறார்கள்

★ வயதாகிப்போகிறோமே என்று கவலைப்படுகிறார்கள்

★ அநியாயங்கள் அக்கிரமங்கள் நடந்துவிட்டதே என்று கவலைப்படு கிறார்கள்

★ யாரும் எங்களை புரிந்துகொள் கிறார்கள் இல்லையே என்று கவலைப் படுகிறார்கள்

★ இறைவன் இப்படி எங்களை சோதனை செய்துகொண்டிருக்கிறானே என்று கவலைப்படுகிறார்கள்

இப்படி எத்தனையோ விடயங்க ளுக்காக எம்மில் பலர் கவலைப்பட்டு வாழ்ந்துகொண்டிருப்பதை காண் கிறோம்.

கவலையோடு வாழ்ந்துகொண்டி ருக்கின்ற மக்களின் கவலை இன்னும் அதிகரித்து அவதிப்பட பலவிடயங்கள் காரணமாக அமைவதை காணலாம்.

தொலைக்காட்சி, கைத்தொலைபேசி போன்ற நவீன சாதனங்கள் மூலம் எமக்கு கிடைக்கும் பல பிழையான அல்லது மோசமான தகவல்களாலும் பலர் கவலைப்படுவதுண்டு. அவை எம்மோடு எந்த விதத்தில் தொடர்பு படாவிட்டாலும் அவை மீது நாங்கள் அளவுக்கதிகம் அவதானம் செலுத்துவ தால் கவலை உணர்வு மேலும் அதிகரித் துச் செல்கின்றது. ஆனால் தொடர்ந்து கவலைப்பட மனதிற்கு இடம் கொடுத் தால் அது எங்களுக்கு எதிரியாக மாறி எங்கள் செயற்பாடுகளை தடைபடுத்தி ஆற்றல்கள் வெளிவராமல் வேலி போட்டு நாம் இறக்கமுன்னரே எங் களை மண்ணில் மண்டியிடச்செய்து விடும்.

கவலைபற்றி ஆயிரக்கணக்கான மக்க ளோடு கதைத்து உரையாடியதிலிருந்து அவர்கள் கவலை கொள்ளும் விதமும் கவலைப்படும் விடயங்கள் பற்றியும் வோல்டர் கால்வட் எனும் மருத்துவர் ஓர் அழகான ஆய்வு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். அவரின் ஆய் வில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

★ 30 வீதமானோர் இறந்த காலத் தில் நடந்த நிகழ்வுகள் பற்றி கவலை கொள்கிறார்கள்.

★ 40 வீதமானோர் ஒரு போதும் நடக்காத விடயங்கள் பற்றி கவலைப்ப டுகின்றனர்.

★ 12 வீதமானோர் உடல் ஆரோக்கியம் பற்றி தேவைக்கில்லாமல் கவலைப்படுகிறார்கள்.

★ 10 வீதமானோர் முக்கியத் துவமே இல்லாத மிகச்சாதாரண விட யங்கள் பற்றி கவலைப்படுகின்றனர்.

★ 8 வீதமானோர் மட்டுமே தகுந்த விடயங்களுக்காக கவலைப்படு கிறார்கள்.

இந்த ஆய்வு ஒரு பெரிய தகவலை எங்களுக்குத் தருகிறது. மக்கள் கவ லைப்படுவதில் 92 வீதம் நடைபெ றாததும் அவர்களால் மாற்றமுடியா ததுமான விடயங்கள் பற்றியதாக இருப்பதாகும். அதனால் அவர்கள் தொடர்ந்து கவலைப்படுபவர்களாகவும் அன்றாட வாழ்வை மகிழ்ச்சியுடன் கழிக்க முடியாதவர்களாகவும் ஆகியி ருக்கிறார்கள்.

இறந்தகால அல்லது எதிர்கால நிகழ் வுகள் பற்றிய எதிர்மறையான எண்ணங் களில் அச்ச உணர்வுகளே கவலையாக வெளிப்படுகிறது என உளவியல் விஞ் ஞானம் குறிப்பிடுகிறது. சில பாதக மான நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்து தன்னைத் தயார்படுத்திக்கொள்ள சில சமயம் கவலை துணையாக இருக்க லாம். ஆனால் பெரும்பாலான சந்தர்ப் பங்களில் கவலை எதிர்மறை உளச் செயற்பாடுகளாக இருப்பதுடன் அது எமக்கு எந்த பயனையும் தருவதில்லை. மாறாக தீவிரமான மனக்கிளர்ச்சி மற் றும் மன அச்ச நோயின் அகோரப்பி டிக்கு எம்மை இட்டுச்செல்ல கவலை காரணமாகிறது. மனஅச்சம் அல்லது மனப்பதகளிப்பு நோயின் ஒரு முக்கிய காரணியாக இருப்பது அளவுக்கதிகம் தேவையின்றி கவலைப்படுவதாகும் என மனநல மருத்துவர்கள் கூறுகின்ற னர்.

கவலைப்படுவதற்கு சரியான காரணம் வேண்டும். அப்படியே ஏதேனும் மிகமுக்கியமானதொரு விடயத்திற்கு கவலைப்பட்டால் அந்தக்கவலைக் கான சரியான தீர்வு கட்டாயமாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே அது பயனுள்ள கவலையாக இருக்கும். மாற்றமாக எதற்கும் கவ லைப்படக்கூடியவர்களாக நாம் இருந் தால் அல்லது ஒரு சிறிய விடயம் பெரிய கவலையை ஏற்படுத் துமானால் அது அந்த விடயத்தின் குற்றமல்ல. அந்த விடயத்தை சரியாக புரியாத எமது குற்றமாகும்.

பல வகையிலான எண்ணங்கள் எம் மனதில் அன்றாடம் வந்து போகின் றன. அந்த எண்ணங்களைக் கையாளும் ஆற்றல் உள்ளவர்களாக நாம் இருந்தால் கவலை, சந்தே கம், அச்சம் போன்ற எதிர் மறையான எண்ணங்களை மிக இலகுவாக கட்டுப்படுத் தக்கூடியவர்களாக ஆகலாம். ஒரு நாளில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணங்கள் எம்மில் தோன்றுவதாக சில விஞ்ஞானிகள் குறிப்பிடு கிறார்கள். அப்படியானால் ஒரு செக்கனில் ஒரு எண் ணம் உருவாகிறது. இந்த எண்ணங்க ளில் 95 வீதமானவை நேற்று அல்லது முன்தினம் அல்லது அதற்கு முன்பு உருவான எண்ணங்களோடு ஒத்தவை யாக இருக்கும் என்றும் கூறுகின்றனர். ஆனால் இந்த வழமையான எண்ணங்க ளில் 80 வீதமானவை எதிர்மறையான வையாகவும் கவலை, பயம், சந்தேகம் போன்ற உணர்வுகளை கொண்டன வாகவும் வெளிப்படுகின்றன என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த எதிர்மறையான எண்ணங்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணம் அவற்றை திரும்பத்திரும்ப ஞாபகப் படுத்திக்கொள்வதாகும். அல்லது ஞாபகம்வர இடம் கொடுப்பதாகும். அப்படி ஞாபகப்படுத்தினால், ஞாபகம் வர இடம் கொடுத்தால் அதன் விளைவு கவலையாகும். கவலை அதிகரிக்குமா னால் அதன் முடிவு அச்சம் நிறைந்த மனப்பாதிப்புகளாக வெளிவந்துவிடும். கடைசியில் மருந்து மாத்திரைகளோடு வாழ்க்கையை கழிக்க வேண்டிய துர்ப் பாக்கிய நிலை ஏற்படும்.

இதற்கெல்லாம் காரணம் கவலையா? அல்லது கவலை எங்களை ஆக்கிரமிக்க நாம் அனுமதிப்பதா?

இறந்தகாலத்தில் நாம் வாழத்தேவை யில்லை. இறந்தகால எண்ணங் கள் எங்களுக்குள் ஊடுறுவ அனுமதி கொடுக்கத்தே வையும் இல்லை. அது முடிந்துவிட்டது. எதிர்காலத்தை பற்றி கவலைப்பட்டு கருகிப்போக நிகழ் காலத்தை இறை யாக்கத்தேவை யில்லை. அப்படியா னால் என்ன செய்வது? எங்களது பலன், திறன், முயற்சி, அறிவு போன்ற அற்பு தமான ஆற்றல்கள் மீது அவதானம் செலுத்தி இந்த நிகழ்காலத்தில் வாழ் வது கவலை நீங்கவும் கவலைப்படா திருக்கவும் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. அதைப்புரிந்த பல அறிஞர் கள், ஆய்வாளர்கள், தத்துவஞானிகள் மனதை ஒருமுகப்படுத்தி தியானத்தில் ஈடுபடுவதை ஒரு சிகிச்சையாக செய்து வர முனைப்புடன் முயற்சிப்பதையும் அதில் ஈடுபடுமாறு மக்களை கேட்ப தையும் காணலாம்.

கவலைகளை நீக்குவதற்கு ஒருவன் அவ்வளவு சங்கடப்படத்தேவை யில்லை. அவனுக்கு ஏற்படும் கவலை யிலிருந்தும் துன்பத்திலிருந்தும் இலகு வாக விலகிவிட முடியும். அப்படியே அவன் கவலைப்பட்டால் அதிலிருந்து வெளிவருவதற்கான அழகான முறை களை இஸ்லாமிய உளவியல் கற்றுத்த ருகிறது. அது பற்றி அடுத்த வாரங்களில் பார்க்கலாம்.

முசலி குறித்து சரியான தீர்மானம் எடுக்கத்தவறின் பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்படும்

கலாநிதி ஏ.எம்.ஜெமீல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

முஸ்லிம்களின் பூர்வீகமான முசலிப் பிரதேசம் தொடர்பில் ஜனாதிபதி சரியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கத் தவறி னால் இப்பிரச்சினையை அரபு, முஸ்லிம் நாடுகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல நேரிடும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதி தலைவரும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவருமான கலா நிதி ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி யின்போது சிங்கள பேரின சக்திகளினால் முன்னெடுக்கப்பட்ட முஸ்லிம் விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு தவறியதன் காரணமாகவே அவரை ஆட் சியில் இருந்து வீழ்த்துவதற்கு முஸ்லிம் சமூகம் ஒட்டுமொத்தமாக அணி திரண்டி ருந்தது.

அதேவேளை கடந்த ஜானாதிபதித் தேர் தலில், பொது வேட்பாளராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன மீது முஸ்லிம் மக்கள் அபரிதமான நம்பிக்கை வைத்து, எவ்வித நிபந்தனையுமின்றி அவரை ஆட்சி க்கு கொண்டு வருவதற்கு முழுமையான ஆதரவை வழங்கியிருந்தனர்.

ஆனால் அந்த நம்பிக்கை அனைத்தையும் வீணடிக்கும் வகையில் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் மைத்திரி ஆட்சியிலும் தொடர்வதானது எம்மை கவலையடையச் செய்கிறது.

முசலி என்பது முஸ்லிம்களின் பூர்வீகப் பிரதேசம் என்பதை மறுதலித்து, அதனை வில்பத்து வனப் பகுதியுடன் இணைக்கும் வர்த்தமானி பிரகடனத்தை ஜனாதிபதி வெளியிட்டிருப்பதானது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றதொரு நடவ டிக்கையாகும். பேரின சக்திகளை திருப் திப்படுத்துவதற்காக ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொடுத்த ஒரு சமூகத்தை காலில் போட்டு மிதிப்பதற்கு மைத்திரி துணிந்தி ருப்பதானது எமக்கு அதிர்ச்சியளிக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் வடக்கில் இருந்து ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் நீண்ட காலக் கனவுடன் தமது சொந்த மண்ணில் மீள்குடியேறுவதற்காக அங்கலாய்க்கின்ற தருணத்தில் இப்படியொரு அநியாயம் முசலிப் பகுதி மக்களுக்கு இழைக்கப்பட்டி ருப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.ஆகையினால் வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்படும் வரை இந்நாட்டு முஸ்லிம்கள் அனைவரும் முச லிப் பகுதி மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்க தயாராக வேண்டும். சில இடங்களில் வெள்ளிக்கிழமை ஜூம்ஆத் தொழுகைக்குப் பின்னர் ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அறிகி றோம். இது வரவேற்கப்பட வேண்டிய செயற்பாடாகும். அதில் நமது மக்கள் உணர்வுபூர்வமாக பங்கேற்று, எமது ஒற்று மையையும் சக்தியையும் வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

தமது காணி உரிமைக்காக கேப்பாப்பி லவு மக்கள் 29 நாட்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டமும் அதற்கு ஆதரவாக வடக்கு- கிழக்கில் அனைத்து தமிழ் பகுதிகளிலும் மக்கள் ஒன்றிணைந்து ஆதரவுப் பேரணிகளை நடத்தியதையும் முஸ்லிம்கள் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

இது தவிர முஸ்லிம் அரசியல் தலை மைகள், சிவில் சமூக அமைப்புகள் அனைத்தும் முசலி விடயத்தில் கூட்டாக செயற்பட்டு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பதற்கான நகர்வுகளை முன்னெ டுக்க வேண்டும்.இவ்விடயத்தில் முஸ்லிம் களின் நியாயத்தை புரிந்து கொண்டு, விட்டுக்கொடுப்புடன் செயற்பட ஜனாதி பதி முன்வரா விட்டால் அரபு, முஸ்லிம் நாடுகளை உள்ளடக்கிய இஸ்லாமிய நாடு களின் ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பின் உதவியை நாடுவோம்.

பாணந்துறை விபத்தில் இளைஞன் பலி

(எம்.கே.எம்.அஸ்வர், பாணந்துறை)

பாணந்துறை, ஆதர் வீதி யெஸ் மாவத்தை யில் (28) ஏற்பட்ட வீதி விபத்தொன்றில் படுகாய மடைந்த மொறட்டுவை, மோதரையைச் சேர்ந்தது முகம்மது அன்வர் முகம் மது அஸ்வர் 23 விபத்தில் படுகாயம டைந்து வைத்தியசாலையில் மரணமானார்.

திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை இரண்டாம் ஆண்டில் கற்றுக் கொண்டிருக்கும் இவர் வீடு செல்ல பஸ் வண்டியில் ஏற வீதியை கடக்கும் போது வேகமாக வந்த ஆட்டோ வண்டி மோதி யுள்ளது. எதிர் திசையில்வந்த மோட்டார் சைக்கிளுடனும் மோதுண்ட அஸ்வர் சுற்றுவட்ட கொங் றீட்டில் மோதுண்டதால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப விசார ணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவர் பாணந்துறை ஆதார வைத்தியசா லையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனும திக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தயசாலை தீவிர சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டு அங்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியாத நிலையில் மீண்டும் பாணந்துறைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

வகுப்புத்தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் உண்ணாவிரதப்போராட்டம்

(யாழ். பாறுக் ஷிஹான்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதவாறு வகுப்பு தடை விதிக்கப்பட்டுள்ள 13 கலைப் பீட மாணவர்களும் தம்மீதான தடை நீ க்கப்பட வேண்டும் எனக் கோரி உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பா கவுள்ள இராமநாதன் வீதியில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி, சனிக்கிழமை இடம் பெற்ற புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ் வில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்பாக விசாரணைக்குட்படுத்தப்பட்ட மாணவர் களில் 13 பேருக்கு காலவரையறையின்றி வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து கடந்த 11 ஆம் திகதி முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக மூடப் பட்டிருந்த கலைப்பீடத்தின் கல்விச் செயற் பாடுகள்(29) முதல் ஆரம்பிக்கப்படவுள்ள தாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மாண வர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. நிர்வாகத்தின் நடவடிக்கையைக் கண்டித்து கலைப்பீட மாணவர்கள் பல்வேறு கண்டன நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வகுப்பு தடை விதிக்கப்பட்ட மாணவர் களுக்குச் சாதகமான முடிவுகள் எதுவும் கிடைக்காத நிலையில் குறிப்பிட்ட 13 மாண வர்களும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு ஆதரவ ளிக்கும் வகையில் ஏனைய கலைப்பீட மாண வர்களும் அவ்விடத்தில் கூடியுள்ளனர்.

டெங்கு நோயின் மூலம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பயங்கர உயிர் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு பெறும் நோக்கில் கெகிராவ சுதந்திர முஸ்லிம் வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்த சிரமதானம் (28)கெகிராவ நகரில் இடம்பெற்றது. இதில் அனுராதபுரம் மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சந்திம கமகே மஹிந்தசோமவும் கலந்து கொண்டார்.

(படங்கள் - கலாவெவ நிருபர்)

ரமழானின் நுழைவாயில் ரஜப் மாதம்

★ மௌலவி முஹம்மத் அஸ்ஹர்

''நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் - அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை, இது தான் நேரான மார்க்கமாகும் - ஆகவே அம் மாதங்களில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள், இணைவைப்பவர்கள் உங்கள் அனைவருடனும் போர் புரிவது போல் நீங்களும் அவர்கள் அனைவருடனும் போர் புரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ்; பயபக்தியுடையோருடனேயே இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.'' (9:36)

''காலம் அதன் சுழற்சிக்கேற்ப சுழன்று கொண்டே இருக்கிறது. வானங்கள் பூமி படைக்கப்பட்ட நாள் முதலே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். அதில் நான்கு மாதங்கள் புனிதமானதாகும். மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக வருபவை: துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரமாகும். ரஜப் முழர் என்பது ஜுமாதா (ஜமாதுஸ்ஸானி), ஷஃபான் ஆகிய இரண்டுக்கும் மத்தியிலுள்ளதாகும்'' என நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

நான்கு மாதங்கள் புனிதமானது என்றும், அவைகள் துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம், ரஜப் என்று மேற்கூறப்பட்ட ஹதீஸிலிருந்து தெளிவாகிறது. எனவே இம்மாதங்கள் போர் புரிவதற்கு தடை செய்யப்பட்ட மாதங்களாகும். இம்மாதங்கள் புனிதமானவைகள் என்று கூறி அல்லாஹ்வும், ரஸூலும் காட்டித்தராத வணக்க வழிபாடுகளை அரங்கேற்றுவது கூடாது.

முஜீபதுல் பாஹிலிய்யா நபிகளார் (ஸல்) அவர்களிடம் வந்துவிட்டு சென்றார்கள். அதன் பின் ஒரு வருடம் கழித்து மறுபடியும் வந்த போது அவரது நிலை மாறியிருந்தது. நபிகளாரிடம் என்னை நீங்கள் அறியமாட்டீர்களா? அதற்கு நபியவர்கள் நீங்கள் யார்? நான் தான் அல்பாஹிலீ சென்ற வருடம் வந்து உங்களை சந்தித்து விட்டு சென்றேன். ஏன் நீர் இந்தளவு மாறிப்போயிருக்கிறீர் என்று நபியவர்கள் கேட்டார்கள்.

நான் உங்களை பிரிந்து சென்றதிலிருந்து இரவில் மாத்திரம் தான் உண்ணக்கூடியவனாக இருந்தேன். அதற்கு நபியவர்கள் எதற்காக நீர் உம்மை வருத்திக் கொள்கிறீர், பொறுமையுடைய மாதத்தில் மாத்திரம் நோன்பு வைப்பதுடன், ஒவ்வொரு மாதமும் ஒரு நோன்பை வையுங்கள். அதற்கு அவர் இன்னும் அதிகப்படுத்துங்கள் எனது உடலில் வலிமை இருக்கிறது என்று கேட்டுக்கொண்ட போது ஒவ்வொரு மாதமும் இரண்டு நோன்பு வைக்குமாறு நபியவர்கள் கூறினார்கள். இன்னும் அதிகப்படுத்துங்கள் என்று அவர் கேட்டுக்கொண்ட போது ஒவ்வொரு மாதமும் மூன்று நோன்பு வைக்குமாறு கூறினார்கள். இன்னும் அதிகப்படுத்துங்கள் என்று கேட்டுக்கொண்ட போது 'புனிதமான மாதங்களில் நோன்பு வையுங்கள் விடுங்கள், புனிதமான மாதங்களில் நோன்பு வையுங்கள் விடுங்கள், புனிதமான மாதங்களில் நோன்பு வையுங்கள் விடுங்கள் என்று நபியவர்கள் தனது மூன்று விரல்களையும் இணைத்து பிரித்துக்காட்டினார்கள்' (அபூதாவுத், அஹ்மத்).

இந்த ஹதீஸிலிருந்து புனிதமான மாதங்களில் நோன்பு வைக்க முடியுமென்பது விளங்குகிறது. ரஜப் மாதம் என்பது சந்திர மாத கணக்கின் படி ஏழாவது மாதமாகும். ரமழானுக்காக எமக்கு பயிற்சிப் பாசறையாக ரஜப் மாதம் திகழ்கிறது.

ரமழான் மாதத்தில் நற்காரியங்களைச் செய்வதற்கு நாம் முன்கூட்டியே தயாராக வேண்டும். ரமழான் மாதத்தில் நாம் நிறைவேற்றும் மற்ற அமல்களையும் இம் மாதத்திலும் நிறைவேற்றும்படி நாம் ஆர்வமூட்டப்பட்டுள்ளோம். இறைக் கடமையாக உள்ள வணக்க வழிபாடுகளை, நற்காரியங்களை முறைப்படி செய்வதற்கு மிகச் சிறந்த பயிற்சிப் பாசறையாக ரஜப் மாதம் திகழ்கிறது. இம்மாதத்தில் பயிற்சிகளை எடுத்துக் கொள்ளும்போது ரமலான் மாதத்தில் அது போன்ற நற்காரியங்களை அதிகமாகச் செய்வது மிக எளிதாகி விடுகிறது.

அபூபகர் அல்-பல்கி (ரஹ்)அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: ரஜப் மாதம் விதைகளை விதைக்கப்படும் மாதமாகும். ஷஃபான் மாதமாவது செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் மாதமாகும். ரமழான் மாதமோ பழங்களை அறுவடை செய்யும் மாதமாகும். (நூல்: லதாயிஃபுல் மஆரிஃப்)

இறை நம்பிக்கையாளர்களாகிய நாம் நமது வணக்க வழிபாட்டுச் செயல்களின் மூலம் ஆன்மீக ரீதியில் நம்மை நாம் தயார் செய்து கொள்வதோடு, அறிவுபூர்வமாக முன்னேற்றம் காண்பதற்கு அதிகமான கல்வியறிவைத் தேடுவது அவசியமாகும் என்பதையும் உணர வேண்டும். ரமழானுக்கு முந்திய மாதமே ரஜப் ஷஃபான் மாதங்களாகும். அடுத்துவரும் ரமழானை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு ரஜப் மாதம் எமக்கு துணைபுரிகிறது.

★★★

மரணத்தை நினைவு கூருதல் ஓர் இறை வழிபாடு

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூற, அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இன்பங்களை அனைத்தையும் தகர்த்துவிடக்கூடிய மரணத்தை அதிகமாக நினைவு கூருங்கள். (அத்திர்மிதி அந் நஸாஈ)

பகிரங்க உண்மை

அல்குர்அன் திக்ரு என்ற பதத்தை விரிவான கருத்தில் பிரயோகித்துள்ளது. கூறுதல், நினைத்தல், மீட்டுதல், ஜெபித்தல், முதலான பல

கருத்துக்களை இச்சொல் உணர்த்துகிறது. அன்றாடம் காலை,மாலைகளில் அல்லாஹ்வை அவன் கற்றுத்தந்த பிரகாரம் போற்றி துதித்து பரிசுத்தப் படுத்துவது திக்ரு என்ற சொல்லின் மிகப் பரவலான கருத்தாகும்.

அல்லாஹ்வின் பேச்சு என வர்ணிக்கப்படும் அல்குர்ஆன் திக்ரு எனப் புகழ்ந்துரைக்கப்படுகிறது. தினம் ஐவேளை நிலைநாட்டப்படும் கட்டாயத் தொழுகைகள் அல்லாஹ்வை அடிக்கடி நினைவுபடுத்துவதனால் அவை திக்ரு என்றுரைக்கப்படுகின்றன. தவிர அல்லாஹ்வின் மார்க்கத்தை ஆழமாகக் கற்றுணர்ந்த அறிஞர்களும் அஹ்லல் அத்திக்ரு எனப் போற்றப்படுகின்றனர்.

இவை அனைத்தையும் கடந்த மேலே குறிப்பிட்ட நபி மொழி மரணத்தை மேலெழுந்தமாக திக்ரு எனக் குறித்துக்காட்டுகின்றது. தவிர அனைத்து வகையான லோகாயுத இன்பங்களையும் பூண்டோடு அழித்துவிடக்கூடிய மரணம் மனிதன் வாழும் காலத்தில் அடிக்கடி நினைவு கூரப்பட வேண்டியது. என்பதையும் நபி (ஸல்) அவர்கள் மேற்குறித்த ஹதீஸ் மூலம் வலியுறுத்தியுள்ளார்கள் உலக வாழ்க்கை போலியானது அதில் உள்ள அனைத்தும் போலியானவை இலக்காகவோ, இலட்சியமாகவோ கொண்டு செயற்படுவதற்கு வாழ்க்கை யதார்த்தமானது அல்ல. இங்கே நபி (ஸல்) அவர்கள் நிலையற்ற வாழ்க்கையின் போலித்தன்மையை ஒரு யாதார்த்தத்தை முன்வைத்து இறை அடியார்களுக்கு நினைவூட்ட விரும்பியுள்ளார்கள். மிக வெளிப்படையான அவ் யாதார்த்தம் அனைத்துப் போலிகளையும் தகர்த்துவிடக்கூடிய மரணமின்றி வேறு எதுவாக இருக்க முடியும்!

வாழ்க்கை பற்றிய சரியான உணர்வைப் பெற்றவனுக்கு ஆயுள் மிகப் பெறுமதியானதும். வாழ்க்கை பற்றிய சரியான உணர்வு மரணம் என்ற யாதார்த்தத்தின் மூலம் பெறப்படுவதாகும் எனவே தான் அது அடிக்கடி நினைவு கூரப்படவேண்டியதாக உள்ளது.

(மரணம் குறித்து உஸ்தாத் கைருல் பஷர்)

மருதமுனை தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரியின் கட்டட திறப்பு மற்றும் பட்டமளிப்பு விழா

★ பி.எம்.எம்.ஏ.காதர், மருதமுனை

மருதமுனை தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரிக்கான கட்டடங்களை திறந்து வைத்தலும், மாணவிகளுக்கான பட்டமளிப்பும், காலையும், மாலையும் இரு அமர்வுகளாக நாளை சனிக்கிழமை(01-04-2017)கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றது. காலை அமர்வு கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி அஷ்செய்க் எம்.எல்.முபாறக் மதனி தலைமையில் நடைபெறுகின்றது.

காலை அமர்வில் கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளது. பிரதம அதிதியாக சவூதி அரேபியாவைச் சேர்ந்த மஆலிஷ் ஷேய்க் கலாநிதி அப்துல் அஸீஸ் ஹமையின் அல்ஹமைய்யின் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ அதிதியாக பறகஹதெனியா ஜம்இய்த்து அன்சாரி சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் கௌரவத் தலைவர் அஷ்ஷெய்க் அபூபக்கர் சித்தீக் மதனியும், சிறப்பு அதிதியாக கௌரவச் செயலாளர் கலீலுர் ரஹ்மான் (எம்.ஏ) கலந்துகொள்ளவுள்ளனர்.

மாலை அமர்வு கல்லூரியின் தலைவர் டாக்டர் ஏ.ஆர்.எம்.ஹாரிஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த அமர்வில் 112 மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்படவுள்ளது. இதில் பிரதம அதிதியாக இந்தியாவைச் சேர்ந்த பேரசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ் கலந்துகொள்கின்றார். கௌரவ அதிதியாக பறகஹதெனியா பேராசிரியர் டாக்டர் சித்திக், தென்கிழக்குப் பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய கற்கைகள் பீடாதிபதி அஷ்ஷெய்க் மஸாஹிர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மேலும் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி அஷ்செய்க் எம்.எல்.முபாறக் மதனி, கல்லூரி நிருவாகிகள் மற்றும் கல்விமான்கள், விரிவுரையாளர்கள் வர்த்தகர்கள், நலன்விரும்பிகள், ஊர்பிரமுகர்கள் உட்பட பெற்றோர்களும் கலந்து கொள்கின்றனர்.

மருதமுனை தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி

மருதமுனைப் பிரதேசத்திலே பெண்களுக்கான அரபு இஸ்லாமிய கற்கைகள் கல்லூரி ஒன்று இல்லாத நிலையில் பெண்பிள்ளைகள் வெளியிடங்களுக்குச் சென்று பல கஷ்டங்களுக்கு மத்தியில் அதிக பணம் செலவு செய்து கற்கவேண்டிய ஒரு நிலை இருந்தது. இந் நிலையை மாற்றியமைக்க யாரும் முன்வரவில்லை. இருந்தபோதிலும் தற்கால நவீன சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் அல்-குர்ஆர், அல்-ஹதீஸ் அடிப்படையில் பெண்களை உள்வாங்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது. அதன் அடிப்படையில்தான் மருதமுனை தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரியொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறையும், ஆர்வமும் காட்டியவர் வை.எல்.எம்.அன்ஸார் என்பது வரலாற்றில் பதியப்படவேண்டிய ஒன்றாகும். அவரின் தூண்டுதலின் அடிப்படையிலேயே இந்த விடையத்தை அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல்.முபாறக் சலபி,மதனி கவனத்தில் எடுத்தார்.அவரது இல்லத்தில் 2008.02.03 ஆம் திகதி இஷாத் தொழுகையின் பின் அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல்.முபாறக் சலபி,மதனி மற்றும் கொள்கை அடிப்படையில் நெருக்கமான சகோதரர்கள் ஒன்று கூடினர்.

இந்த ஒன்று கூடலிலே மருதமுனை பிரதேசத்தில் ஆழமான இஸ்லாமிய அறிவும், ஆன்மீகப் பண்புகளும் கொண்ட அல்குர்ஆன் சுன்னா வழி நடக்கும் சிந்தனையாளர்கள், சமூக வழிகாட்டிகள், சமூக ஆய்வாளர்களாக பெண் தாஇய்யாக்களை உருவாக்குதல் என்பதன் அவசியத்தை வலியுறுத்தி விளக்கினார். இக்கருத்தினை அங்கு வந்திருந்தவர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். இதன் அடிப்படையில் மருதமுனை ஜம்மியத்துல் உலமா சபை, பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கத்தினர், புத்திஜீவிகள் என பலதரப்பினரதும் ஒப்புதலையும் பெற்றுக்கொண்டு செயற்பட்டதன் விளைவாக உருவாக்கப்பட்டதே தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி.

பட்டம் பெறும் மாணவிகள்

2012ஆம் ஆண்டு 17 பேர்.

எம்.எஸ்.பாத்திமா இன்ஸாப்(மும்தாஸ்), ஏ.எச்.தானியா(மும்தாஸ்) , யூ.பர்ஜீஸ் (மும்தாஸ்) , எம்.கே.மஹ்ஜபீன் மும்தாஸ்), ஆர்.ஜூதாமா (மும்தாஸ்) , எம்.எம். ஆயிஷா திஹானி (மும்தாஸ்) , எம்.பீ.ஸப்ரீன் (மும்தாஸ்) , எம்.எஸ்.அப்ஸானா(ஜெய்யித் ஜித்தன்) , எம்.எல்.கே.பஸ்லியா (ஜெய்யித்) , ஜே.எம். எம்.ஜெளஸன் (ஜெய்யித்) , எம்.எஸ்.எப்.ஸதீனா (மக்பூல்) , என்.எம்.லுப்னா (மக்பூல்), எம்.ஆர்.கிப்தியா(மக்பூல்) , கே.எல். எப்.வஸ்மியா(மக்பூல்) , எஸ்.றிஸ்னா (மக்பூல்) , ஏ.எப்.எப்.றொஷான் (மக்பூல்) , ஏ.எல்.பஸ்மியா(மக்பூல்).

2013ஆம் ஆண்டு 16 பேர்

ரீ.எல்.எப்.நதீபா (மும்தாஸ்), என்.ஏ.பாத்திமா ஷிபானி (மும்தாஸ்), கே.எல். எப்.ரஜானா (மும்தாஸ்), ஐ.எப்.ஹஸ்னா (ஜெய்யித் ஜித்தன்), எம்.எம்.அதிய்யா (ஜெய்யித்), எம்.எம்.யமுனா (ஜெய்யித்), எம்.கே.மஸ்பா (ஜெய்யித்), ஏ.எச். ஸஹ்னா (ஜெய்யித்), எம்.எம்.பஸ்னா (ஜெய்யித்), எஸ்.பாத்திமா ஸஜீனா(ஜெய்யித்), ஏ.அப்ரோஸ் (ஜெய்யித்), ஏ.அப்றா (மக்பூல்), எல்.எப்.ஜெஸ்லி (மக்பூல்), எம்.ரீ.ஜெஸ்னா பானு (மக்பூல்), ஆர்.சப்னம் (மக்பூல்), எம்.எப்.பாயிஸா(மக்பூல்).

2014ஆம் ஆண்டு 15 பேர்

எம்.எப்.எப்.நிக்தி(மும்தாஸ்),ஏ.எப்.ரதீனா(மும்தாஸ்),ஏ.எச்.தஸ்னீமா(மும்தாஸ்),எம்.ஜே.எப்.ரிஸ்மினா (மும்தாஸ்) யூ.ஜம்ஸித் ஜஹான் (மும்தாஸ்)என்.எம்.ஜே. எப்.ஜூஹி (ஜெய்யித் ஜித்தன்), எஸ்.எப். அஷ்ரா (ஜெய்யித்), எஸ்.ஏ.எஸ்.எப்.ஷிபா (ஜெய்யித்), பி.எப்.நுஸ்ஹா (ஜெய்யித்), எம்.என்.எப்.நிப்னா (ஜெய்யித்), ஏ.எப்.ஜலுதா(ஜேய்யித்), எம்.பி;.ஸஹ்னாஸ் பேஹம் (மக்பூல்), எஸ்.றகஷானா பேஹம் (மக்பூல்), எஸ்.ஐ.எம்.எப்.சப்னா(மக்பூல்), எம்.ஜே. சஞ்சீதா (மக்பூல்).

2015ஆம் ஆண்டு 22 பேர்

ஏ.எஸ். அப்றோஸ் (மும்தாஸ்), ஜே.எப். சனா (மும்தாஸ்),ஏ.ஆர்.எப். சுஜா(மும்தாஸ்),எம்.ஏ.ஆர்.எப். மௌபிகா(மும்தாஸ்) எம்.ஜே.எப். சஜீனா(மும்தாஸ்) எம்.எஸ்.எப். யமானா(மும்தாஸ்) எம்.ஏ. பேபி ஷஹீலா(மும்தாஸ்) எம்.ஜே. எப். சப்னா(மும்தாஸ்) எம்.என். றிப்கானா(மும்தாஸ்) .என்.எப். ஸீனத் (ஜெய்யித் ஜித்தன்)எம்.எப்.எப். ஸஜீயா(ஜெய்யித் ஜித்தன்)எம்.ஏ.எப். றிஜா(ஜெய்யித்) ஐ.எப். சனா(ஜெய்யித்) என்.ஏ.எப். அப்றின் (ஜெய்யித்) ஐ.எப். அஹ்ரீனா(ஜெய்யித்) வை. ஹஸ்னியா(ஜெய்யித்) எம்.டபிள்யூ.எப். ஸஹைனா அன்வரி(ஜெய்யித்) எம்.என். எப். றிப்னா(ஜெய்யித்) ஏ.எச். ஹப்ரீனா(ஜெய்யித்) எம்.பீ. அனீஸா(ஜெய்யித்) எம்.என். றம்ஸாத்(மக்பூல்)ஏ.ஆர். நிப்லா(மக்பூல்).

2016ஆம் ஆண்டு 42 பேர்

எம்.எஸ். அப்றின் ஸஹ்னா (மும்தாஸ்), எம்.எஸ். பாத்திமா பர்ஹா (மும்தாஸ்), ஆர்.எப். பர்தீபா (மும்தாஸ்), எம்.ஏ. நுஹா (மும்தாஸ்), ஏ.எச். சஹ்னா ஸிரீன் (மும்தாஸ்), ஏ.எச்.எப். ஸஜீனா (மும்தாஸ்), எம்.என். சப்னா (மும்தாஸ்), எஸ். பாத்திமா ஹஸ்னா(மும்தாஸ்), சீ.என். சஸீனா பானு(மும்தாஸ்), எம்.ஜே. அனீகா (மும்தாஸ்), எம்.எம்.எப். றிஸ்தா (மும்தாஸ்), ஜே. பாத்திமா பஸ்னா

எம். ஆர். இஸ்ரத் அப்ஸானா(ஜெய்யித் ஜித்தன்),ஆர்.எப்.எம். சுஹா(ஜெய்யித் ஜித்தன்),ஏ.ஆர். ஸஹானா(ஜெய்யித் ஜித்தன்),எம்;.எப். அஹானா(ஜெய்யித் ஜித்தன்),எம்.எம். உஷாமா(ஜெய்யித் ஜித்தன்),எம். என். சறோத் ஜஹான் (ஜெய்யித் ஜித்தன்), எம்.ஆர். றஹ்னா(ஜெய்யித் ஜித்தன்), ஏ.பீ. நிஜா (ஜெய்யித் ஜித்தன்), ஐ. ஹஸீனா (ஜெய்யித் ஜித்தன்), எம்.கே. இல்முனா(ஜெய்யித் ஜித்தன்), எம்.ஆர். பாத்திமா அஹானா(ஜெய்யித் ஜித்தன்) ஏ.எஸ்.எப். சஹீனா(ஜெய்யித் ஜித்தன்) எம். சிஹ்னா (ஜெய்யித் ஜித்தன்) எம்;.ஐ. சீபா (ஜெய்யித் ஜித்தன்)

என்.எப். றிஜா(ஜெய்யித்), ரீ.எப். முனா (ஜெய்யித்), எம்.எம். பாத்திமா ஷரா (ஜெய்யித்), எஸ். பாத்திமா ஸஹ்ரா (ஜெய்யித்), ஏ.ஏ. அப்னா பானு (ஜெய்யித்), எம்.எச். அக்மா (ஜெய்யித்), எம்.எச். பாத்திமா சீபா (ஜெய்யித்), ஐ. பாத்திமா அப்னா (ஜெய்யித்),எம்.எச். பாத்திமா றிப்னா (ஜெய்யித்). ஏ.என். சஹ்னாஸ் சதா (மக்பூல்), எம்.எப். சாஹின் கௌஸர் (மக்பூல்), எம்.ஏ.எப். இனாபா (மக்பூல்), எம்.எஸ். றுஸ்தா பானு (மக்பூல்), எம்.ஏ. உம்மு ஸப்னம் (மக்பூல்), எம்.எச். பாத்திமா சஜ்னா (மக்பூல்), என்.எப்.சுஹானா(மக்பூல்).

ஏன் இந்த வெளியேற்றம்?

பெறலாம்; கல்வி கற்கலாம்; தொழில் தொடங்கலாம் என்பது ஒன்றியத்தின் ஒழுக்கக்கோட்பாடு.

ஏன் இந்த வெளியேற்றம்?

ஆரம்பத்திலிருந்தே, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து தனித்து செயற்படுவதை பிரித்தானியா வழக்கமாக வைத்திருந்தது. எனவேதான் யூரோ நாணயத்தை ஏற்காமல் தன்னுடைய பவுண்ட் நாணயத்தையே பயன்படுத்தி வந்தது.

மேலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், வறுவான நாடுகள் என்ற பார்த்தால் பிரித்தானியா, ஜெர்மன் உள்ளிட்ட சில நாடுகள் உள்ளன. இவை தவிர பிற நாடுகளில் அதிக அளவிலான வேலை வாய்ப்புகளோ, தொழில் வளமோ, வளர்ச்சியோ இல்லை. இந்த நிலையில் இந்த நாடுகள் ஒட்டுமொத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் கமையையும் கமக்க வேண்டியிருந்தது.

பிரித்தானியாவில் கணிசமான தொழில் மற்றும் வர்த்தக வாய்ப்புகள் இருப்பதால் வேலைவாய்ப்புகள் அதிகளவில் உள்ளன.

இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் பொருளாதரத்தில் பின்தங்கியுள்ள பல நாடுகளில் இருந்தும் மக்கள் பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்து வருகின்றனர். இதனால் பிரித்தானியாவின் சொந்த மக்களுக்கு அவர்களுடைய நாட்டிலேயே வேலைவாய்ப்புகள் மற்றும் வர்த்தக வாய்ப்புகள் குறைவதற்கு தொடங்கின. இதனால் பிரித்தானியா மக்கள், வெளிநாட்டினர் தங்களுடைய வாய்ப்புகளைப் பறிப்பதை விரும்பவில்லை.

இதனால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக, குறிப்பாக வேலைவாய்ப்பு பறிபோவதாக பிரித்தானிய மக்கள் கருத தொடங்கினார்கள். பிரித்தானிய அரசு வழங்கும் சமூக நலத்திட்டங்களின் பலன்களை பிறநாட்டினர் பெற்று விடுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிப்பதால் பிரித்தானியாவுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாகவும், எனவே அதிலிருந்து விலக வேண்டும் என்றும் அந்நாட்டில் கோரிக்கை எழுந்தது. இந்த கோரிக்கை நாளுக்குநாள் வலுவடைந்து வந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிப்பதா? வேண்டாமா? என்பதை அறிய மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை பிரித்தானியா முழுவதும் எழுந்தது. பிரதமர் டேவிட் கெமரூனின் கன்சர்வேட்டிவ் கட்சி தாப்பியும் பொதுவாக்கெடுப்பு நடத்த நிர்பந்தம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து, பொதுவாக் கெடுப்பு நடத்த பிரித்தானிய அரசு முடிவு செய்தது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவதை அதன் நட்பு நாடுகள் விரும்பவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகக்கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல், சீன ஜனாதிபதி ஜின்பிங் மற்றும் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் பிரித்தானியாவை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ஏற்கனவே நிட்டமிட்டபடி ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிப்பதா? அல்லது விலகுவதா? என்பது பற்றி தீர்மானிக்க பிரித்தானியாவில் கடந்த ஆண்டு ஜுன் மாதம் பொதுவாக்கெடுப்பு நடைபெற்றது. பிரித்தானிய குடியுரிமை பெற்ற 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த பொதுவாக்கெடுப்பில் கலந்து கொண்டு வாக்களித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என 48.1 சதவீதம் மக்களும், விலக வேண்டும் என 51.9 சதவீதம் மக்களும் வாக்களித்தனர். மக்களின் இந்த முடிவு தனது எண்ணத்துக்கு பாதகமாக அமைந்ததால் வாக்கெடுப்பின் முடிவுகள் வெளியானதும் அந்தான் பிரதமர் டேவிட் கெமரூன் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானிய விலகவேண்டும் என்ற குறிக்கோளுடன் அவரது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த தெரசா மே நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்றார். மக்களின் தீர்ப்பு தொடர்பாக பாராளுமன்ற இரு அவைகளில் காரசாரமான விவாதமும் நடைபெற்றது. பின்னர், மக்கள் தீர்ப்பை ஏற்று கொள்வது என பாராளுமன்றம் சமீபத்தில் தீர்மானித்தது.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் முடிவை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் கடிதத்தில் பிரித்தானிய பிரதமர் தெரசா மே செவ்வாய்கிழமை பிற்பகல் முறைப்படி கையொப்பமிட்டுள்ளதுடன், இக்கடிதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவரிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி

அதுமட்டுமன்றி ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் கூட்டாக இணைந்து செயற்படுவதற்காக ஏற்படுத்தப்பட்ட 'லிஸ்பன்' உடன்படிக்கையின் 50ஆவது பிரிவின் கீழ், மற்ற உறுப்பு நாடுகளுக்கும் பிரித்தானிய இந்த அறிவிக்கையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, அடுத்த 2 ஆண்டுகளுக்கு பேச்சுவார்த்தை நடைபெறும். அப்போது, எதிர்வரும் காலத்தில் ஒன்றியத்துடன் உறுப்பினர் அல்லாத நாடு என்ற வகையில் பிரித்தானியா எந்தகைய உறவை கடைபிடிப்பது என்பது குறித்து ஆலோசிக்கப்படும். இதன்படி எதிர்வரும் 2019ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி பிரித்தானியா முறைப்படி வெளியேறவுள்ளது.

எனினும் பிரித்தானியாவின் இந்த வெற்றியாகுக்கும் மகிழ்ச்சிகரமான செய்தியாக இல்லை. ஐரோப்பிய கூட்டணியிலிருந்து பிரித்தானியா வெளியேறுவதால்

அந்த நாடுக ளுக்கிடையில் மிகப்பெரிய வர்த்தக மற்றும் பொருளாதர இடைவேளி உருவாகும். மேலும் நாடுகளுக்கிடையே எல்லை பிரச்சினை, புலம்பெயர்ந்தவர்கள் பாதிப்பு, பாதுகாப்பு போன்ற பல பிரச்சினைகள் தோற்றுவிக்கக் கூடும்.

மேலும் நாணய பரிமாற்றத்தில் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படுவதோடு, இதனால் பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய சந்தையிலிருந்து உறுப்புநாடுகளின் சந்தையில் செய்யப்படும் முதலீட்டின் அளவுகள் கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் உலக நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகத்தில் பாரிய பாதிப்பு ஏற்படும். இன்றைய நிலையில் உலகச் சந்தைகள் ஆட்டம் கண்டுள்ளன. ஆசியச் சந்தைகள் அனைத்தும் இன்றைய வர்த்தகத்தில் கடும் சரிவை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்து வந்த பாதை

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், ஐரோப்பிய ஒன்றிணைப்புத் தொடர்பான நகர்வுகளை, அக்கண்டத்தைப் பேரழிவுக் குள்ளாக்கிய நீதிர தேசியவாதப் போக்குகளிலிருந்து தப்பும் ஒரு வழியாகப் பலர் நோக்கினர். ஐரோப்பியர்களை ஒன்றிணைக்கும் இத்தகையதொரு முயற்சியாகவே ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமூகம் தொடங்கப்பட்டது. இது முன்னர் உறுப்பு நாடுகளின் தேசிய நிலக்கரி மற்றும் உருக்குத் தொழில்துறையில் மையப்படுத்திய கட்டுப்பாட்டைக் கொண்டுவரும் மிதமான நோக்கம் கொண்ட ஒரு முயற்சியாக இருந்தது. எனினும் இது 'ஐரோப்பியக் கூட்டாட்சிக்கான முதல் அடி' என அறிவிக்கப்பட்டது. பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் இதன் தொடக்க உறுப்பினர்களாக இருந்தன.

1957 ஆம் ஆண்டில் இரண்டு புதிய அமைப்புக்கள் உருவாகின. ஒன்று ஐரோப்பியப் பொருளியல் சமூகம் மற்று அணுவாற்றல் வளர்ச்சியில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஐரோப்பிய அணுவாற்றல் சமூகம். 1967இல் செய்து கொள்ளப்பட்ட ஒன்றிணைப்பு ஒப்பந்தம் மூலம் மேற்படி மூன்று சமூகங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே தொகுதியாயின. இவை ஒருங்கே ஐரோப்பிய சமூகங்கள் என அழைக்கப்பட்டன.

1973 ஆம் ஆண்டில் இச் சமூகங்கள், டென்மார்க், அயர்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளையும் உள்ளடக்கி விரிவடைந்தன. இதே சமயத்தில் நோர்வேயும் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தது. ஆனால், இதற்காகப் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது மக்கள் ஏற்றுக்கொள்ளததால் அந்நாடு சமூகத்தில் இணையவில்லை. 1979ஆம் ஆண்டில் ஐரோப்பிய பாராளு மன்றத்துக்கான முதலாவது

நேரடியான மக்களாட்சித் தேர்தல் நடைபெற்றது.

போர்த்துக்கல், கிரேக்கம், ஸ்பெயின் ஆகிய நாடுகள் 1980இல் இதில் இணைந்தன. 1985ஆம் ஆண்டில், செஞ்சென் ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, பெரும்பாலான உறுப்பு நாடுகளிடையே கடவுச்சீட்டு இல்லாமல் பயணம் செய்யத்தக்க வகையில் அவற்றின் எல்லைகள் திறந்துவிடப்பட்டன. 1986இல் ஐரோப்பியக் கொடி பயன்படத் தொடங்கியதுடன், தலைவர்கள் ஒற்றை ஐரோப்பியச் சட்டமுலம் (Single European Act) ஒன்றிலும் கையெழுத்திட்டனர்.

1990இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் அதன் நட்பு நாடாக இருந்த கிழக்கு ஜெர்மனியும், ஒன்றிணைந்த ஜெர்மனியின் ஒரு பகுதியாக ஐரோப்பிய சமூகத்தில் இணைந்தது. ஐரோப்பிய சமூகத்தை கிழக்கு மைய ஐரோப்பா நோக்கி விரிவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, அச் சமூகத்தின் உறுப்பு நாடுகளாக இணைவதற்கான தகுதிகளை வரையறுக்கும் கோப்பன்ஹேகன் கட்டளைவிதி (Copenhagen criteria) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1993 நவம்பர் முதலாம் திகதி மாசுடிரிச் ஒப்பந்தம் செயற்படத் தொடங்கியபோது ஐரோப்பிய ஒன்றியம் முறைப்படி நிறுவப்பட்டது. 1995இல் ஆஸ்திரியா, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகள் புதிய ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்துகொண்டன. 2002 ஆம் ஆண்டில் 12 உறுப்பு நாடுகளில் அவற்றின் நாணயங்களுக்குப் பதிலாகப் புதிதாக உருவாக்கப்பட்ட யூரோ நாணயம் புழக்கத்துக்கு வந்தது. பின்னர் யூரோ வலயம் 15 நாடுகளை உள்ளடக்கியதாக விரிவடைந்தது. 2004 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப் பெரிய விரிவாக்கம் இடம்பெற்றது. அப்போது மோல்டோ, சைப்ரிஸ், கலோவேனியா, எஸ்தோனியா, லத்வியா, லித்துவேனியா, போலந்து, செக் குடியரசு, சிலோவாக்கியா, ஹங்கேரி ஆகிய 11 நாடுகள் இவ்வொன்றியத்தில் இணைந்தன.

2007 ஜனவரி முதலாம் திகதி ருமேனியாவும், பல்கேரியாவும் இதன் புதிய உறுப்பு நாடுகளாயின. அதேவேளை ஸ்லோவேனியா யூரோவைத் தனது நாணயமாக ஏற்றுக்கொண்டது. அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐரோப்பியத் தலைவர்கள் லிஸ்பன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இவ்வொப்பந்தம் பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் வாக்காளர்கள் ஏற்றுக்கொள்ளாததால் தோல்வியடைந்து செயற்படாமல்போன ஐரோப்பிய அரசியலமைப்புக்குப் பதிலாக உருவானது. ஜூன் 2008 இல் இதனையும் அயர்லாந்து வாக்காளர்கள் ஏற்றுக்கொள்ளாததால் இதன் எதிர்காலமும் கேள்விக் குறியாகி உள்ளது.



சில்லி இட்லி

தேவையான பொருட்கள்

இட்லி - 4
கடலைமா - 2 மேசைக்கரண்டி
வெங்காயம் - 3 (நறுக்கியது)
குடைமிளகாய் - 2
பச்சைமிளகாய் - 2
இஞ்சிபூண்டு விழுது - 1 மேசைக்கரண்டி
மிளகுத்தூள் - 1 மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
தக்காளி சோஸ் - 20 மி.லி.
மிளகாய்த்தூள் - 3 தேக்கரண்டி

செய்முறை

இட்லியை 4 துண்டுகளாக நறுக்கி, கடலை மா, உப்பு, தண்ணீர் சேர்த்து கலந்து வைக்கவும். பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி காய்ந்ததும் இட்லிகளை மொறுமொறுவென்று பொரித்தெடுக்கவும். மற்றொரு கடாயில் சிறிது எண்ணெயை ஊற்றி காய்ந்ததும் பச்சைமிளகாய், வெங்காயம், குடை மிளகாய் சேர்த்து சிறிது வதக்கவும். பின் இஞ்சிபூண்டு விழுது, மிளகாய்த்தூள், உப்பு, தக்காளி சாஸ், மிளகுத் தூள், சிறிது தண்ணீர் சேர்த்து கலக்கவும். பின்பு பொரித்த இட்லியைச் சேர்த்து பிரட்டி எடுத்தால் சில்லி இட்லி ரெடி... இது குழந்தைகளுக்கு பிடித்த உணவு.

முடி உதிர்வா?

வெட்டிவேர் - 10 கிராம்,
பட்டை - 100 கிராம், வெந்தயம் - 2 தேக்கரண்டி இவற்றைக் கால் லீட்டர் தேங்காய் எண்ணெயில் போட்டு, ஒரு வாரம் தொடர்ந்து வெயிலில் வைத்து வடிகட்டிக்கொள்ளுங்கள். இந்தத் தைலத்தை சிறிது தேங்காய் எண்ணெயில் கலந்து தினமும் தலைமுடி வேர்க்கால் முதல் நுனி வரை தடவுங்கள். முடி கொட்டுவது நிற்பதுடன் கருகருவென முடி வளரும்.

பா.மலரம்பிகை

மகளிர் மட்டும்

சருமத்திற்கு கற்றாழை சிறந்த அருமருந்து

சிறிது கற்றாழை ஜெல்லுடன் சிறிது எலுமிச்சைசாறு கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

கற்றாழையின் ஓரங்களில் உள்ள கூர்மையான முள்ளை வெட்டிவிட்டு, நீரில் போட்டு நன்கு வேகவைக்க வேண்டும். அதை எடுத்து சிறிது தேன் சேர்த்து அப்படியே சாப்பிடலாம். மிகச்சிறந்த மாற்றத்தைக் காண்பீர்கள்.

மென்மையான சருமமாக இருந்தால் கற்றாழையுடன் தயிர், வெள்ளரிச்சாறு ஆகியவற்றைச் சேர்த்து பயன்படுத்த வேண்டும்.

வறட்சியான சருமமாக இருந்தால் கற்றாழையுடன் வெள்ளரிக் காய், பேரிச்சம்பழம், எலுமிச்சை சேர்த்து அரைத்துப் பயன்படுத்த வேண்டும்.

பிள்ளை பரீட்சையில் தோல்வியா? பெற்றோர்கள் செய்ய வேண்டிவை

பரீட்சையில் தோல்வியடைந்து விட்டால் வாழ்க்கையே முடிந்து விட்டது என்று நினைக்கக்கூடாது. வாழ்க்கையில் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது என்ற எண்ணத்தை உண்டு பண்ண வேண்டும்.

தோல்வியடைந்த மாணவர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். எதிர்மறையாகப் பேசுவதையும், தற்கொலை பற்றி பேச்சு வந்தால் அதற்கு உண்டான தடுக்கும் முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும். ஆழுதலான வார்த்தைகளைப் பேச வேண்டும். வீட்டில் கத்தி, கயிறு மற்றும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய மாத்திரைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.

தோல்வியடைந்த மாணவர்கள் தனிமையில் விட்டைப் பூட்டிக் கொண்டு இருப்பதை தவிர்க்க சொல்ல வேண்டும். தோல்வி தான் வெற்றிக்கான அறிகுறி போன்ற உற்சாகம் தரும் வார்த்தைகளைப் பேச வேண்டும். மேலும் மனநல மருத்துவரிடம் போய் காண்பித்து இவ்வாறான பிரச்சினைகளுக்கு மனநல ஆலோசனைப் பெறலாம்.

இது போன்ற விடயங்களை பெற்றோர்களும், மாணவர்களும் கடைப்பிடித்து வாழ்க்கையில் ஏற்படுகிற சில பின்னடைவுகளை எதிர்த்து வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டும்.

ஆழ்ந்து தூங்கனுமா?

முதலில் ஒரு பாத்திரத்தில் ஒரு கப் பாலை ஊற்றி அடுப்பில் வைத்து, நன்கு கொதிக்க விட்டு இறக்க வேண்டும். பின் ஒரு டம்ளரில் அந்த பாலை ஊற்றி, அத்துடன் 1 மேசைக்கரண்டி தேன் மற்றும் சில துளிகள் வெள்ளிலா எசன்ஸ் சேர்த்து நன்கு கலந்து கொள்ள வேண்டும்.

இந்த பானத்தை இரவில் படுக்கும் முன் குடிக்க வேண்டும். இதனால் படுக்கையில் படுத்த 1 நிமிடத்திலே ஆழ்ந்த தூக்கத்தைப் பெறலாம்.

ஜனாதிபதியின் கபளீகரத்திற்கு முஸ்லிம் அமைச்சர்கள் இணங்கினார்களா?

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன



முசலிப் பிரதேச மக்களின் வாழ்விடங்களையும் அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் வழங்கும் நிலங்களையும் கபளீகரம் செய்யும் புதிய வர்த்தமானிப் பிரகடனத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமெனவும் இல்லாவிட்டால் நாடளாவிய ரீதியில் பாரியப் போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டி நேரிடுமெனவும் உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் சிவில் சமூகக் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு ரமதா ஹோட்டலில் இந்தக் கூட்டமைப்பு இன்று (30) மாலை ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் மாநாட்டில் பங்கேற்ற சிவில் சமூகக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், புதிய வர்த்தமானிப் பிரகடனத்தினால் முசலிப் பிரதேச மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களை விளக்கிக் கூறினர்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டுவருவதில் 49 சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நானும் உழைத்தவனே. ஜனாதிபதி பதவிக்கு வரும் முன்னர் எந்த ஒரு முடிவையும், தான் தன்னிச்சையாக மேற்கொள்ளப் போவதில்லை என எம்மிடம் உறுதியளித்தார். ஆனால் இப்போது அவரது செயற்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

தன்னிடம் எந்தவொரு பிரச்சினை வந்தாலும் அதனை தேடிப்பார்த்து பிரதமருடன் கலந்தாலோசித்த பின்னரே அமைச்சரவைக்குக் கொண்டு வருவேன். அங்கு அமைச்சரவையில் கலந்தாராய்ந்து முடிவுக்கு வருவேன் என்று முன்னர் கூறினார். ஜனாதிபதி தற்போது தடுமாற்றத்துடன் கூடிய ஒரு பிழையான முடிவை எடுத்துள்ளார். அவ்வாறாயின் இந்த வர்த்தமானி அறிவித்தலை கையெழுத்திட முன்னர் ஜனாதிபதி இந்த விவகாரத்தை பிரதமருடன் கலந்தாலோசிக்கவில்லையா? அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவில்லையா? எவரது ஆலோசனையயும் பெறாமலா இந்த முடிவை எடுத்தார்? அல்லது அவரை யாரும் பிழையாக வழிநடாத்துகின்றார்களா? இல்லையேல் அவர் அமைச்சரவைக்கு இதனைக் கொண்டு சென்றிருந்தால் அங்குள்ள முஸ்லிம் அமைச்சர்கள் இந்தத் தீர்மானத்திற்கு இணங்கினார்களா? இதனை நாங்கள் தேடிப்பார்க்க வேண்டும். இது ஒரு பாரதூரமான பிரச்சினையே.

இந்த விடயத்தில் சத்தியம் வெல்ல வேண்டும் எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

வசீம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவை ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் புதன்கிழமை (30) உத்தரவிட்டார்.

அனுர சேனாநாயக்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி டேல் குணரத்ன, குற்றப் புலனாய்வு திணைக்களம் தொடர்பாக உதாசீனமாக விசாரணை நடத்தி வருவதால், தனது தரப்பு வாதி சுமார் ஒரு வருட காலமாக விளக்கமறியலில் இருந்து வருவதாக கூறியுள்ளார்.

இதனையடுத்து வாதங்களை முன்வைத்த குற்றப் புலனாய்வு திணைக்களம் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க, புதைக்கப்பட்டு தேண்டி எடுக்கப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாக கொண்டு குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை நடத்துவதாகவும், விசாரணையில் காணப்படும் இரகசிய தன்மை மற்றும் சிக்கல்களை கவனத்தில் கொண்டு நியாயமான காலத்தை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து ஏப்ரல் 4 ஆம் திகதி வரை அனுர சேனாநாயக்கவை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஐ.தே.க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புரட்சிகரமான மாற்றமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அக்கட்சி தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, கட்சியின் பிரதித் தலைவர் பதவி மூன்றாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும், தற்போது பிரதித் தலைவராகவுள்ள சஜித் பிரேமதாசவுக்கு மேலதிகமாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளராக உள்ள கபீர் காசீம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா ஆகியோருக்கு பிரதித் தலைவர் பதவிவழங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.க.வின் மத்திய செயற்குழுவுக்கான புதிய உறுப்பினர்கள் நியமனம் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது இடம்பெறவுள்ளதாகவும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சியாளர்கள் படையினரை காட்டிக்கொடுக்கும் தேசத்துரோகிகள்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த

(பீ.எப்.எம் றிஷாட்)

ஜெனிவாவில் கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட யோசனையை முழுமையாக அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் மீண்டும் வாக்குறுதியளித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதியான பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமக்குள் இருக்கும் தேசத்துரோக எண்ணம் காரணமாகவே இந்த அறிக்கையை நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இதனை தவிர வேறு காரணங்கள் இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கடந்த வாரம் முடிவடைந்த ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் 2015 ஆம் ஆண்டு இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட யோசனையை முழுமையாக அமுல்படுத்த அரசாங்கம் மீண்டும் வாக்குறுதியளித்துள்ளது. - என்றார்.

தணிந்தது பதற்றம்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏ.ஆர்.எம்.பர்வீன், ஏ.ஏ.எம்.ரஸ்கான் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரிஸ்வி மஹ்ரூப், நாச்சியாதீவு கிராமத்தின் இந்த விடயத்தில் முன்னின்று செயற்படுகின்ற ஏ.சி .வாஹித், எம் .பி.எம்.நஸ்வர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இந்த விடயத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாச்சியாதீவு மக்களை நிம்மதியடையச்செய்கின்ற விடயத்தில் பலர் களத்தில் இறங்கி செயற்பட்டார்கள். அனைவரினதும் நோக்கம் நாச்சியாதீவில் நிலவிவருகின்ற பதற்ற நிலைமையை கட்டுக்குள் கொண்டுவருவதாகும்.

அந்தவகையில் அமைச்சர்களான ஹெரிசன், துமிந்த திஸாநாயக்க மற்றும் மிகிந்தலை தொகுதி ஐ.தே .கட்சி அமைப்பாளர் கருணாரத்ன ஹேரத்,அமைச்சர் ரிஷாட் பதியுதீன்,முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.சி.ராவுத்தர் நெய்னா முஹம்மத் ஆகியோருடன் அவர்கள் சார்பானவர்கள் கதைத்துள்ளனர். பிரஸ்தாப நபர்களும் குறித்த இனவாத செயற்பாட்டினை தடுக்கக்கோரி பிரதி பொலிஸ் மாஅதிபருடன் பேசியதாகவும் தகவல் கிடைத்துள்ளன.

எப்படியோ தனியான முஸ்லிம் கிராமமான நாச்சியாதீவை இனவாதிகளின் பிடியிலிருந்து காப்பாற்றுவது தொடர்பில் அனைத்து அரசியல் சக்திகளும் இணைந்து செயற்படுவது வரவேற்கத்தக்கது. இந்த ஒற்றுமைதான் முஸ்லிம் சமூகத்தின் பலமாகும்.

புதன்கிழமை (29) காலை 7.00 மணிக்கு குறிப்பிட்ட ராஜாங்கனைய சத்தானந்த எனும் இனவாத பிக்கு வாழும் தோட்டம் பகுதிக்கு சிலை வைக்க வருவதாக அறிவித்ததை அடுத்து அப்பகுதிக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சொன்னது போல குறித்த பிக்குகள் அங்கு வரவில்லை. இருந்தும் அன்றைய தினம் காலையிலேயே ஹிதோகம பொலிஸாரினால் குறித்த பிக்குகள் நாச்சியாதீவுக்குள் நுழைவதற்கான நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டது, அதனை மீறி அவர்கள் ஊருக்குள் பிரவேசித்தால் விசேட அதிரடிப்படையைக் கொண்டு அவர்களை தடுப்பதற்குரிய ஏற்பாடுகளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவி பிரிஸ் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த இனவாத செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்ற பிக்கு இலங்கை -இஸ்ரேல் அமைப்பின் தலைவர் பதவியுள்ளவர் என்பதனை அவரது முகநூலின் மூலம் அறியக்கிடைத்தது. அந்த வகையில் முஸ்லிம்களை பழிவாங்குகின்ற கயமை எண்ணம் கொண்ட இஸ்ரேலின் பணத்திற்காக இந்த பிக்கு செயற்படுகின்றாரோ என்கின்ற ஐயம் பிரதேசத்தில் நிலவுகிறது அத்தோடு இந்த பிரச்சினையை தூண்டிவிட்ட அல்லது இதற்கு அடித்தளமிட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் லசிந்து தொடர்பிலும் நாச்சியாதீவு மக்கள் தமது சந்தேகத்தை தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் வெள்ளிக்கிழமை (17) அன்று அமைச்சர் ஹக்கீம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நீர்ப்பாசன திணைக்களத்தின் உயர் அதிகாரிகளின் குழுவொன்று வெள்ள அனர்த்த காலத்தில் மேலதிக நீர் வழிந்தோடுமுகமாக நாச்சியாதீவுக்குள்ளால் வெட்டப்பட்ட கால்வாய் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள அனுப்பப்பட்டது. இதன் போது குறிப்பிட்ட வாழும் தோட்ட தக்கியா பிரதேசமும் அதிகாரிகளுக்கு காட்டப்பட்டது. இதன் போது சம்பந்தமே இல்லாமல் இந்தப்பிரதேசம் நீர்ப்பாசனத்துறையின் பிரதேச பொறியியலாளர் லசிந்து என்பவரால் நிறுத்தி வைக்கப்பட்டது. இது தொடர்பிலும் அதிகாரிகளுக்கு மக்களால் தெரிவிக்கப்பட்டது. மக்களின் கோரிக்கைகளை கேட்ட அதிகாரிகள் வாழுந்தோட்ட தக்கியா பிரதேசத்தினை விடுவித்து கொடுக்குமாறு அனுராதபுர மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் பிரசன்னவுக்கு உத்தரவிட்டார்கள்.

இதன்பின்னரே குறித்த வாழும் தோட்ட தக்கியா பகுதிக்கு ராஜாங்கனைய சத்தானந்த தேரோ என்பவர் வந்து பிரச்சினை ஏற்படுத்தினார். இதன்போது குறித்த தேரர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு கடுமையாக ஏசியதோடு, அதிகாரிகளை மாற்ற நாச்சியாதீவு மக்கள் முனைவதாகவும் அதற்க்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும், கடுமையான இனவாத தொனியில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அன்வர் சதாத் குழுவினருடன் வாக்குவாதப்பட்டார்.

இதன் பின்னர் ஹிதோகம பொலிஸார் இந்த விடயத்தில் தலையிட்டு சமரசத்திற்கு விடயத்தை கொண்டுவந்தனர். எனவே அமைச்சர் ஹக்கீமின் தலையீடு இந்த விடயத்தில் இருப்பது, நீர்ப்பாசன பொறியியலாளருக்கு மட்டுமே தெரிந்த விடயம் அந்த பிக்குவுக்கு தெரியப்படுத்தியது யார்? குறித்த பொறியியலாளர் பொதுபல சேனாவின் அங்கத்தவரா? என்கின்ற நியாயமான சந்தேகங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

இதற்கிடையில் புதன்கிழமை (29) மாலை புத்தர் சிலை வைக்கின்ற நிகழ்வினை மேற்கொள்ளவிருப்பதாக குறித்த பிக்குவினால் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் நாச்சியாதீவினை சுற்றியுள்ள ஏனைய விகாரைகளின் பிரதான பிக்குகளுக்கு இதில் உடன்பாடில்லை எனவும் அவர்கள் இந்த சிலை வைப்பு விவகாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள் என்றும்பொலிஸ் அத்தியட்சகர் ரவி பிரிஸ் நாச்சியாதீவு முஸ்லிம் பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபையின் உபதலைவர் ஏ.ஏ.எம்.ரஸ்கான் குழுவினருக்கு தெரிவித்ததோடு மணித்தியாலத்திற்கு ஒருமுறை தொடர்பு கொண்டு நிலவரத்தை உறுதியாக கூறுகின்றார்.

சிலைவைப்பு விடயத்தில் குறித்த நேரத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்த அமைச்சர்களான ஹக்கீம், ஹெரிசன், ரிஷாட் பதியுதீன், உட்பட ஏனைய அமைச்சர்களுக்கும்,சிரேஷ்ட ஊடகவியலாளர் ரிஸ்வி மஹ்ரூப் மற்றும் கூடிய கவனம் எடுத்து தேசிய ஒற்றுமையையும், இனங்களுக்கிடையிலான சகவாழ்வையும் பாதுகாத்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவி பிரிஸ், ஹிதோகம பொலிஸார், கிராமத்தின் நன்மை கருதி ஒற்றுமையாகவும் சமயோசிதமாகவும் செயற்பட்ட நாச்சியாதீவின் வெவ்வேறு அரசியல் தலைமைகள், ஏனைய விகாரைகளின் விகாராதிபதிகள் நன்றிக்குரியவர்கள்.

மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நாச்சியாதீவு கிராமம், தொடர்ந்தும் இவ்வாறான அச்சுறுத்தலில் இருந்து பாதுகாத்துக்கொள்கின்ற வழிமுறையினை இனங்கண்டு செயற்படவேண்டும்.

அடுத்த இனத்தை அவர்களுக்கு உதவுகின்ற உயர்ந்த பண்புகளை முஸ்லிம்கள் தமக்குள்ள வளர்த்துக்கொண்டால் நம்மீதான சந்தேகங்களும்,குரோதங்களும் நீங்கும் என நம்பலாம்.

குறித்த இனவாத பிக்குவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவது பற்றி இப்போது நாச்சியாதீவு புத்தி ஜீவிகள் கலந்தாலோசனை நடத்திவருகின்றனர். அவரின் இனவாத கருத்துக்கள் அடங்கி சக இனத்தை நேசிக்கின்ற ஒருவராக அவர் வரவேண்டும் என வயது முதிர்ந்த தாயின் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக்கொள்வானாக.

சிவில் அமைப்புக்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுக்க வேண்டி நேரிடுமெனவும் உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் சிவில் சமூகக் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு ரமதா ஹோட்டலில் இந்தக் கூட்டமைப்பு (30) மாலை ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் மாநாட்டில் பங்கேற்ற சிவில் சமூகக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், புதிய வர்த்தமானிப் பிரகடனத்தினால் முசலிப் பிரதேச மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களை விளக்கிக் கூறினர்.

நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, மலையக சிவில் சமூகத் தலைவர் தயானந்த, தேசிய ஷூரா கவுன்ஸிலின் தலைவர் சட்டத்தரணி யூஸுப், வை எம் எம் ஏ முக்கியஸ்தர் தௌபீக், அகில இலங்கை முஸ்லிம் லீக் முன்னணித் தலைவர் பி எம் பாருக், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி, சிவில் சமூகப் பிரதிநிதிகளான சட்டத்தரணி என் எம் ஷஹீட், ருஷ்டி ஹபீப், மற்றும் முஸ்லிம் கவுன்சில் தலைவர் என் எம் அமீன், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

புலிகளால் வஞ்சிக்கப்பட்ட வடமாகாண முஸ்லிம்களை ஜனாதிபதியின் பிரகடனம் மேலும் வஞ்சித்துள்ளது. கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருபவர்களுக்கு இவ்வாறான ஒரு அநீதியை ஜனாதிபதி இழைத்திருப்பதன் உள்நோக்கம் தான் என்ன?

பேசுவது ஒன்று, செய்வது ஒன்றுமாக அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் இருக்கின்றன. இந்த அரசாங்கத்தை கொண்டு வரப் பாடுபட்டவர்களில் முஸ்லிம் சமூகமும் பிரதானமானது எனவும் அவர்களுக்கு அரசாங்கம் இவ்வாறான ஓர் ஈனச்செயலை மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது எனவும் தெரிவித்தனர்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டுவருவதில் 49 சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நானும் உழைத்தவனே. ஜனாதிபதி பதவிக்கு வரும் முன்னர் எந்த ஒரு முடிவையும், தான் தன்னிச்சையாக மேற்கொள்ளப் போவதில்லை என எம்மிடம் உறுதியளித்தார். ஆனால் இப்போது அவரது செயற்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

தன்னிடம் எந்தவொரு பிரச்சினை வந்தாலும் அதனை தேடிப்பார்த்து பிரதமருடன் கலந்தாலோசித்த பின்னரே அமைச்சரவைக்கு க் கொண்டு வருவேன். அங்கு அமைச்சரவையில் கலந்தாராய்ந்து முடிவுக்கு வருவேன் என்று முன்னர் கூறினார். ஜனாதிபதி தற்போது தடுமாற்றத்துடன் கூடிய ஒரு பிழையான முடிவை எடுத்துள்ளார். அவ்வாறாயின் இந்த வர்த்தமானி அறிவித்தலை கையெழுத்திட முன்னர் ஜனாதிபதி இந்த விவகாரத்தை பிரதமருடன் கலந்தாலோசிக்கவில்லையா? அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவில்லையா? எவரது ஆலோசனையயும் பெறாமலா இந்த முடிவை எடுத்தார்? அல்லது அவரை யாரும் பிழையாக வழிநடாத்துகின்றார்களா? இல்லையேல் அவர் அமைச்சரவைக்கு இதனைக் கொண்டு சென்றிருந்தால் அங்குள்ள முஸ்லிம் அமைச்சர்கள் இந்தத் தீர்மானத்திற்கு இணங்கினார்களா? இதனை நாங்கள் தேடிப்பார்க்க வேண்டும். இது ஒரு பாரதூரமான பிரச்சினையே.

இந்த விடயத்தில் சத்தியம் வெல்ல வேண்டும் எனவும் அவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

வர்த்தமானி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்துள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ஆசாத் சாலி கொழும்பு ரமதா ஹோட்டலில் (30) இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

முசலி மக்களுக்கு இடம்பெற்றுள்ள அநியாயங்களை ஜனாதிபதியிடம் நான் விரிவாக எடுத்துரைத்தேன். அமைச்சர் ரிஷாட் பதியுதீனும் இந்த வர்த்தமானிப் பிரகடனம் தொடர்பில் ஜனாதிபதியுடன் மிகவும் காட்டமாக எடுத்துரைத்துள்ளார்.

வட மாகாண மக்களின் பிரதிநிதி என்ற வகையிலும் முஸ்லிம் சமூகத்தின் தலைவர் என்ற வகையிலும் அவரது பொறுப்புக்களை முஸ்லிம் சமூகம் வலுவாக உணர்ந்துள்ளதால் அவரை அரசை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்தித்து வருகின்றது. இந்த விடயங்களையும் நான் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினேன்.

நல்லாட்சியை உருவாக்குவதற்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் எத்துணை தூரம் பங்களிப்பு செய்தாரென்று ஜனாதிபதிக்கும் தெரியும். அந்த விடயத்தில் அமைச்சர் ரிஷாட்டுடன் இணைந்து நானும் உழைத்திருக்கின்றேன்.

மற்றையவர்களைப் போல தபால் வாக்குகள் முடிந்த பின்னர் மைத்திரிக்கு உதவுவதற்கு அவர் வந்தவரல்லர். தான் சார்ந்த சமூகத்திற்கு அநீதிகள் இழைக்கப்படும் போது அவர் பொறுத்திருக்கவும் மாட்டார் என்பதையும் நான் தெட்டத் தெளிவாக ஜனாதிபதியிடம் உணர்த்தியிருக்கின்றேன்.

ஜனாதிபதியும் பிரதமரும் இந்த விடயத்தில் ஒரு நாள் பொறுத்திருக்குமாறு எம்மிடம் வேண்டியுள்ளனர். நாளை நடைபெறும் உயர்மட்டக் கலந்துரையாடலில் இதற்கான தீர்வை ஜனாதிபதி தருவார் என்று நம்புகின்றோம்.

நாளைய உயர்மட்டக் கூட்டத்தில் வர்த்தமானி அறிவித்தல் இரத்துச்செய்யப்படாவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி ஊடகங்களுக்கு தெளிவு படுத்துவோம் என்றும் அஸாத் சாலி தெரிவித்தார்.

முஸ்லிம்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 ஆம் திகதி ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கையொப்பமிட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கோரி முஸ்லிம் சிவில் அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இந்த கடிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று நாளை இடம்பெறவுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தனிப்பட்ட மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை கொண்ட ஒரு சிலர் குறித்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தப்பான கருத்துக்களை பரப்பிவருவதாக ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வில்பத்து தேசிய சரணாலயத்துக்கு வடக்காக அமைந்துள்ள மாவில்லு, வெப்பல், மறிச்சிக்கட்டி, விளாத்திக்குளம், பெரியமுறிப்பு ஆகியபகுதிகள் இணைக்கப்பட்டு 'மாவில்லு பாதுகாக்கப்பட்ட வனம்' பாதுகாக்கப்பட்ட வனம் என பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கடந்த 24 ஆம் திகதி தனது ரஷ்ய பயணத்தின் போது கையொப்பமிட்டிருந்தார்.

நிறைவுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். நேற்று வியாழக்கிழமை அவரை பார்வையிடுவதற்காக வைத்தியசாலைக்கு வருகைத் தந்திருந்த மகாநாயக்க தேரர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே அவர் நேற்று காலை சுமார் 11.09 மணிக்கு உண்ணாவிரதத்தை கைவிட்டார்.

அந்தவகையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 45 ஆவது இலக்க வாட்டில் சேர்க்கப்பட்டுள்ள இவரை பார்வையிடுவதற்காக அனுநாயக்க விஜித ஸ்ரீ தேரர், தம்மரத்ன தேரர், பிபுரே உதித தேரர், சுமன ஜோதி தேரர், கொட்டபிடிய ராகுல தேரர், நாகொட சுமன தேரர். கிரமவிமல ஜோதி தேரர், மெதகொட அபேதிஸ்ஸ தேரர், பலாங்கொட சோபிர தேரர் ஆகியோர் வருகைதந்து, உண்ணாவிரதத்தை கைவிடுமாறு வலியுறுத்தினர்.

இதனை ஏற்றுக்கொண்டே விமல்வீரவன்ஸ எம்.பி., பாலை அருந்தி தனது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். எனினும், அவரின் உடல் நிலைமை சோர்வடைந்துக் காணப்படுவதால் வைத்தியசாலையில் தொடர்ந்தும் பலத்த பாதுகாப்புடன் சிகிச்சைப் பெற்று வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பேச்சாளரான மேல்மாகாணசபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஹெல உறுமய கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுக்களில் மக்கள் பிரதிநிதிகள் அல்லாத அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இருப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்தவகையில், பாக்கியசோதி சரவணமுத்து, விக்கிரமபாகு கருணாரட்ன, நிமல்கா பெர்னான்டோ, சமன்ரட்ணபிரிய போன்றோர் உள்ளனர்;. உண்மையில் இவர்கள் யார்?. இவர்களுக்கு இந்த குழுவில் இருக்க என்ன அதிகாரம் உள்ளது?

எவ்வாறாயினும் ஸ்ரீக லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவின்றி அரசமைப்பு விடயத்தில் எதனையும் செய்ய முடியாது. அந்த கட்சி நிறைவேற்று அதிகாரத்தை நீக்க இன்னும் இணங்கவில்லை. மேலும், 19 ஆவது திருத்தத்தினூடாக ஏற்கனவே நீக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. இனியும் நீக்க அங்கு அதிகாரங்கள் கிடையாது. இதற்கு மேல் அதிகாரங்களை நீக்க நாமும் இடமளிக்க மாட்டோம்.

அத்தோடு, சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்ல முடியாது என்பதும் அரசமைப்பு விடயத்தில் எமது நிலைப்பாடாக இருக்கின்றது. இதற்கு இணக்கம் தெரிவித்து எமக்கு நாட்டை நிலையற்ற நிலைமைக்கு கொண்டு செல்ல இடமளிக்க முடியாது. எனவே, ஜனாதிபதியிடம் தற்போதுள்ள அதிகாரங்கள் அவ்வாறே பேணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம் என்றார்.

Red Rose Industries
BEST QUALITY SOCKS
For trade enquires
011 2764690
/GOODFIT.LK

இலங்கை முழுதும் 17 கிளைகள்

இப்போது பேஷன்பக் வாடிக்கையாளர்களின் சுவர்க்கமான வெள்ளவத்தையிலும்

நாடு முழுவதும் 16 கிளைகளைக் கொண்டிருக்கின்ற இலங்கையின் முன்னணி ஆடை யகங்களில் ஒன் றான பெஷன் பக், அதன் 17 ஆவது கிளையை, பண்டி கைக் காலத்தில் வாடிக்கையாளர்க ளின் சுவனபுரியான வெள்ளவத்தை யில் திறந்துள்ளது!

வெள்ளவத்தையில், காலி வீதி, இலக்கம். 38 என்ற இடத்தில் அமையப்பெற்றுள்ள பெஷன் பக்கின் புதிய ஆடையகம் மூன்று மாடிகளைக் கொண்டிருப்பதோடு, பெண்கள், ஆண்கள் மற்றும் சி றுவர்களுக்கான பெருமளவு ஆடைகளைக் கொண்டிருக்கின் றது. அத்தோடு, வீட்டில் அணியும் ஆடைகள், வைபவங்களுக்குத் தேவையான ஆபரணங்கள் மற் றும் வைபவங்களுக்கு அணிகின்ற ஆடைகளும் நுட்பமாக வாடிக்கை யாளர்களுக்காக விற்பனை செய்யப் படுகின்றன. அத்தோடு, கலாசார பின்னணியுடனான சாரிகள், சல்வார்கள் மற்றும் குர்தாக்களும் விற்பனைக்கு உள்ளன. பண்டிகை காலம் நெருங்கி வருகின்றமை யால், உங்கள் தெரிவுக்காக புதிய ஆடைகளும் விற்பனைக்கு வர வுள்ளன.

புதிய ஆடையகம் திறக்கப்பட்ட நாளில் வாங்கப்பட்ட அனைத்துப் பொருட்களுக்கும் 10 சதவீத விலைக்கழிவும் ஊக்கியாக வழங் கப்பட்டது.

ரிப்பன் வெட்டி, விளக்கும் ஒளி யேற்றப்பட்டதன் பின்னர், அடுத் ததாக வாடிக்கையாளர்கள் ஆடை கள் வாங்கத் தொடங்கினர். புதிய கிளைக்கு வருகை தந்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் உணவு பரிமாறப்பட்டது.

GOODFIT
BRA · UNDERWEAR · SOCKS
Distributors
Pettah - 011 5749657
Maharagama - 011 2089609
/GOODFIT.LK

சித்திரைப்புத்தாண்டு சிறப்பு;

'ஆடை மேசை' ஊக்குவிப்பினை ஹமீடியா ஆரம்பிக்கின்றது

புதன்கிழமை 2017 மார்ச் 29, கொழும்பு: தமிழ் சிங்கள புதுவரு டத்தினை கொண் டாடும் வகையில் இலங்கையில் ஆண்கள் ஆடைய ணிகளுக்கான முன் னணி நிபுணத்துவ நிறுவனமான ஹமீ டியா அண்மையில் நாடளாவிய ரீதியி லுள்ள தமது காட்சி யறைகளில் 'ஆடை மேசை' (Andum Mesaya) என்ற புதுவருட ஊக்குவிப் பினை முன்னெடுத் துள்ளது. புதுவருட உணவு மேசை என்ற சுவையுணவுகள் பலவற்றை பரப்பியளிக்கும் வகையில் பாரம் பரியமாக கையாளப்படும் சம்பிரதாயத்தினை பின்பற்றி முன்னெடுக்கப்படும் இந்த புத்தாக்க ஊக்குவிப்பானது வாடிக்கையாளர்கள் புதுவருட வாழ்த்துக்களுக்கு ஏற்ற வகையில் தமது கொள்வன வுகளை மேற்கொள்ளுமிடத்து பரிசு வவுச்சர்கள் உள்ளிட்ட பல்வித அனுகூலங்களை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எந்தவொரு பேஷன் அல்லது சில்லறை வர்த்தக நிறுவனமும் இதுவரை காலமும் இவ்வாறானதொரு 'ஆடை மேசை' ஊக்குவிப்பினை இது வரை மேற்கொள்ளவில்லை. இந்த ஊக்குவிப்பின் ஓர் அங்கமாக வாடிக்கை யாளர்கள் ரூ. 7500 ற்கு அல்லது அதற்கு மேல் கொள்வனவுகளை மேற்கொள்ளுமிடத்து ரூ. 1000 பெறுமதியான பரிசு வவுச்சர்களை பெற் றுக்கொள்ள முடியும். அதிகமதிகமாக கொள் வனவு செய்பவர்களுக்கு அதிகமதிகம் பரிசு வவுச்சர்கள் கிடைக்கும். ஹமிடியாவில் ஷேர்ட் கள், காற்சட்டைகள், குர்த்தாக்கள், ஷோர்ட்ஸ், ஆபரணங்கள் உள்ளிட்ட புத்தாண்டை வர்ணமய மாக்கும் விடயங்கள் உள்ளன. இதற்கு மேலதிக மாக லினன் சாரன்கள், ஷேர்ட்கள், குர்த்தா உள்ளிட்ட பல பிரத்தியேக ஆடைகளும் புதுவ ருடத்தினை சிறப்பாக்கும் வகையில் கிடைக்கின் றது. இந்த விசேட சலுகையானது 2017 ஏப்ரல் 12 வரை முன்னெடுக்கப்படும்

1949ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஹமிடியா தற்போது இலங்கையில் அனைவருக்கும் தெரிந்த மற்றும் மிகச்சிறந்த வர்த்தக நாமங்களில் ஒன் றாக வளர்ச்சியடைந்துள்ளது. நாடு பூராகவும் 30 காட்சியறைகளுடன் 1000ற்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் கூடிய வலையமைப்பைக் கொண்டுள்ள ஹமிடியா இலங்கையில் மட்டுமல் லாது மாலைதீவு, அவுஸ்திரேலியா போன்ற நாடு களிலும் தமது இருப்பினை பதிவுசெய்துள்ளது.

நவநாகரிக பெண்களுக்காக கூந்தல் பராமரிப்பு தெரிவுகளை அறிமுகம் செய்துவரும் ஹேமாஸ் மலுபக்டரிங் நிறுவனத்தின் முன்னணி கூந்தல் பராமரிப்பு வர்த்தக நாமமான குமாரிக்கா, அண்மையில் இயற்கையான மூலப்பொருட்களுடன் கூடிய பளபளப்பான ஆரோக்கியமான கூந்தலை அளிக்கும் வகையில் உயர்தரமான உற்பத்தி தெரிவுகளை அறிமுகம் செய்துள்ளது. குமாரிக்காவின் புதிய ஷம்பூ மற்றும் கண்டிஷனர் தெரிவுகள் ஒவ்வொரு குளியலின் போதும் ஸ்மார்ட் கண்டிஷனிங் தொழில்நுட்பம், அதிக நுரை மற்றும் சிறந்த நறுமணத்தை வழங்குவதுடன், கூந்தலுக்கு இயற்கை நலன்களை வழங்குகிறது. ஆரோக்கியமான பிரகாசமான கூந்தல் பெண்களின் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கிறது.

ஈகில் லேக் சைட் ஹோட்டலில் நடைபெற்ற மக்கள் வங்கியின் ACHIEVERS AWARDS

மக்கள் வங்கியின் Achievers Awards அத்திடிய ஈகில் லேக் சைட் ஹோட்டலில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. கடந்த வருடத்தில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய, மக்கள் வங்கிக் கிளைகள், சேவை நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் வர்த்தகப் பிரிவுகள் இங்கு கௌர விக்கப்பட்டன.

மக்கள் வங்கியின் வளர்ச்சி க்கும், கிளை வலையமைப்பின் வியாபார விருத்திக்கும் உதவும் தகவல் தொழில்நுட்பம், மனித வளம், வங்கித் துணைச் சேவைகள், சந்தைப்படுத்தலும் பரிசோதனை களும், நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வு, தனி நபர் வங்கிச் சேவைகள், தொழில் முயற்சியாளர் வங்கிச் சேவை ஆகிய துணைக் களங்கள் மற்றும் குழும வங்கிப் பிரிவு மற்றும் நிறைசேரிப் பிரிவின் உயர் பெறுபேறுகளை வெளிப்படுத் தியவர்கள் மற்றும் குழுமங்களும் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

குறைந்த செலவுடைய சேவை நிலையங்கள், வைப்புக்கள் மற் றும் வெளிநாட்டு நாணய வைப் புக்களை பெருமளவில் பெற்றுக் கொண்ட சேவை நிலையங்கள், தனி நபர் கடன்களுக்கான அதிகபட்ச வளர்ச்சியை அடைந் துகொண்ட சேவை நிலையங்கள் என்பனவற்றுக்கு வெண்கல, வெள்ளி மற்றும் தங்க விருதுகள் வழங்கப்பட்டன.

அதிகடிய வெஸ்டன் யூனி யன் கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றிய கிளைகள், வரு டத்தின் அதிகடிய நடைமுறைக் கணக்கு மிகுதியைப் பேணிய கிளைகள், வருடத்தின் அதிகடிய செலவு குறைந்த வைப்புகளை அடைந்து கொண்ட மற்றும் வளர்ச்சி வீதங்களை அதிகரித்துக் கொண்ட கிளைகள், வருடத்தில் அதிகடிய கடன் அட்டைகளை விநியோகித்த கிளைகள், வருடத் தில் அதிகபட்ச மொத்தக் கடன் மற்றும் கடன் பிரிவின் விஸ்த ரிப்பை வளர்த்துக் கொண்ட மற் றும் வளர்ச்சி வீதத்தை அடைந்து கொண்ட கிளைகள், வர்த்தகக் கடன் துறையில் அதிகபட்ச வளர்ச்சியை அடைந்த கிளைகள், அபிவிருத்திக் கடன் துறையில் அதிகடிய வளர்ச்சியை அடைந்த கிளைகள் மற்றும் நடுத்தர கடன்க ளில் அதிகடிய வளர்ச்சியடைந்த கிளைகள், ஆகக் குறைந்த முறை யற்ற கடன் வீதத்தை அடைந்த கிளைகள், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளைப் பெற்றுக்கொண்டன.

செரண்டிப் ஃப்ளா மில்ஸ் WIM உடன் இணைந்து நடத்தும் சிறு தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கான பயிற்சி அமர்வு

'7 நட்சத்திர பெண்களான உங்களை நாளைய நாளுக்காக வலுவூட்டுகிறோம்'

வெள்ளிக்கிழமை 21, மார்ச் 2017: செரண்டிப் ஃப்ளா மில்ஸ் இனர் அண்மை யில் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள பெண்களுடன் இணைந்து சிறிய அளவிலான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பெண் தொழில் முனைவோருக்கு பயிற்சி அமர்வு ஒன்றை நடாத்தியது. இப்பயிற்சியானது சர்வதேச மகளிர் தினத்தன்று ரேணுகா ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் சொந்த வியாபாரமாக குடிசைக் கைத்தொழிலிலைச் செய்யும் 40 பெண்கள் பங்குபற்றினர்.

இப்பயிற்சி அமர்வானது '7 நட்சத்திர பெண் களான உங்களை நாளைய நாளுக்காக வலு வூட்டுகிறோம்' என்று பெயரிடப்பட்டிருந்து. இதில் இப்பெண்கள் அவர்களது வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்லத் தேவையான பல அடிப்படைக் குறிப்புக்களும் அறிவும் வழங்கப்பட்டது. இதன் மூலம் ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் வலுப்படுத்த முடியும் என்பதால் இத்திகழ்ச்சியில் வியாபாரத்தில் ஈடு பட்டுள்ள பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களையும் சவால்களையும் எவ்வாறு முகம்கொடுப்பது என்பது தொடர்பாக நடைமுறை விளக்கம் வழங்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் பங்குபற் றியோருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியைப் பற்றி இந்நிகழ்வில் பங்குபற்றிய வறகாபொலையைச் சேர்ந்த திருமதி. நிமந்தி முதுகல குறிப்பிடுகையில், இந்நிகழ்ச்சி எமக்கு வழங்கிய மதிப்பை பாராட்டுகின்றோம். நாம் எமது வியாபா ரத்தை விருத்தி செய்வது தொடர்பாகவும் பொது முகாமைத்துவ திறன்கள் பற்றிய அறி வினையும் இதன் மூலம் பெற்றுக்கொண் டோம்.

நான் Serendib Flour Mills ,diuAk; Women in Management இனருக்கும் இவ்வாறானதோர் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துமைக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் பின் தங்கிய கிராமங்களில் உள்ள அடிமட்ட பெண் களுக்கும் இந்நிகழ்ச்சியை நடாத்துமாறு ஏற்பாட்டுக் குழுவிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

வணிகச் செய்திகள்

முதன்மை ஸ்மார்ட் பேரூந்து தரிப்பு நிலையத்தினை மொபிடல் அங்குரார்ப்பணம் செய்கின்றது

தேசிய கையடக்கத்தொலைபேசி வழங் குனரான மொபிடல், கொழும்பு நகரினை ஸ்மார்ட் நகரக (Smart City) மாற்றும் நோக்குடன் அதன் நவீன ஸ்மார்ட் பேரூந்து தரிப்பு நிலையத்தினை (Smart Bus Halt) கொழும்பு நகர மண்டபத்தில் நிறுவுகின் றது. மொபிடல் நவீன நிலையத்தின் மற்று மொரு முன்னோக்கிய பார்வைக்கு எடுத் துக்காட்டாக விளங்கும் இந்த ஸ்மார்ட் பேரூந்துத்தரிப்பிடம், தொழில்நுட்பத்தின் தாக்கமானது, நாளாந்தம் பேரூந்தில் பயணிப்பவர்களின் அனுபவத்தை புதிய உச்சத்திற்கு எவ்வாறு எடுத்துச்செல்லும் என்பதற்கான எடுத்துக்காட்டாகவும் விளங்கும்

இந்த ஸ்மார்ட் பேரூந்து தரிப்பிடமானது, 4G LTE மற்றும் Wi-Fi போன்ற வசதி களை கொண்டிருப்பதனால், அதி உன்னத சேவைத்தரத்தினையும், பாவனையாளர் அனுபவத்தினையும் வாடிக்கையாளருக்கு அளித்து, மொபிடலின் வர்த்தக நாம உறு திப்பாடான 'எப்போதும் அக்கறை கொண் டுள்ளோம்' (we care always) என்பதனை மீண்டும் வலுவுடன் உறுதிப்படுத்துகின் றது. இத்தரிப்பிடத்தில் உள்ள ஸ்மார்ட் தானியங்கி பொருட்கள் வழங்கும் இயந்தி ரத்தில் (Smart Vending machine) இருந்து குளிர்பானங்கள் உங்கள் மொபைல் ஊடாக காக அற்ற கொடுப்பனவுகளாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த ஸ்மார்ட் பேரூந்துத்தரிப்பிடத்தில் உள்ள ஊடாடும் 'டச்' தொடுதிரையானது (interactive touch screen) ஒருங்கிணைக்கப் பட்ட முக பகுப்பாய்வு கட்டமைப்பினைக் (facial analytics) கொண்டுள்ளது. இதன் ஊடாக குறித்த பயனாளர்களின் வயது, பாலினம் உள்ளிட்ட பண்புக பண்புகளை அடிப்படையாக கொண்டு தனிப்பயனாக்க அடிப்படையில் ஒன் ஸ்க்ரீன் உள்ளடக்கங் களை அளிக்க முடியும். இந்த கட்டமைப் பானது, தானியங்கி கியசேவை தகவல் வாயிலாகவும் (self-service information portal) செயலாற்றும்.

- மொபிடலின் முதன்மை 'ஸ்மார்ட் பேரூந்து நிலையம்' இன் அங்குரார்ப்பணம் தொலைத்தொடர்பாடல் மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு அமைச்சர் கௌரவ. ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் மற்றும் மொபிடல் தலைவர் க. பு. குமாரசிங்க சிரிசேன ஆகியோரால் உத்தியோகபூர்வமாக முன்னெடுக்கப்பட் கின்றது. அவர்களுடன் மொபிடல் பிர தம செயற்பாடுகள் அதிகாரி திரு. தலின் பெரேராவும் காணப்படுகின்றார்.

இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தியில் பிரதான பங்களிப்பை தரமான கல்வி வழங்குகிறது என்பதை பறைசாற்றும் முகமாக நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, 2000ம் ஆண் டின் பிற்பகுதிகளில், தனது சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகாக பாடசாலைகளுக்கு வலுவூட்டும் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. இந்த நிகழ்ச்சியினூடாக, பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளில் நீண்ட கால அடிப்படையில் பயனளிக்கும் உதவி களை வழங்க வங்கி முன்வந்திருந்தது. இந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது முதல், மூன்று பாடசாலைகளுக்கு தனது உதவிகளை வழங்கி தன்னை அர்ப்பணித்துள்ளது. இவற்றில் கல்முவ நிதாவ கனிஷ்ட வித்தியாலயம், இரத்தினபுரி அமுனுதென்ன கனிஷ்ட வித் தியாலயம் மற்றும் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு அரச தமிழ் கலவன் பாட சாலை போன்றவை அடங்குகின்றன.

2016ல் செலிங்கோ லைஃப்பை உச்சத்துக்கு கொண்டு சென்ற 247 பேர் கோலாகலமான நிகழ்வில் கௌரவிப்பு

2016ம் ஆண்டில் செலிங்கோ லைஃப் பின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தவர்கள் ஆயுள் காப்புறுதி நிறுவ னத்தால் அண்மையில் கௌரவிக்கப்பட்ட னர். தனது விற்பனை மற்றும் விற்பனை சாரா பிரிவுகளைச் சேர்ந்த 247 உறுப்பி னர்களை ஆயுள் காப்புறுதியில் தலைமை தாங்கும் நிறுவனம் கௌரவித்துள்ளது. கம்பனியின் வருடாந்த விருது வழங்கும் விழாவில் 20 பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

சான்றிதழ்கள், பதக்கங்கள், கேடயங்கள் மற்றும் சிங்கப்பூர், மலேஷியா, தாய்லாந்து, துபாய், ஐக்கிய ராஜ்ஜியம் ஆகிய நாடு களுக்கு குடும்பத்தோடு சென்று வரும் வாய்ப்பு என வெகுமதிகள் வழங்கப்பட் டன. இந்த கோலாகல நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் (BMICH) இடம்பெற் றது. செலிங்கோ லைஃப் ஆயுள் காப்புறுதி பிரிவில் தொடர்ந்து 13வது வரு மாக தலைமை தாங்குவதை குறிக்கும் வகையிலும் இந்நி கழ்வு அமைந்திருந்தது.

செலிங்கோ லைஃப் தலைமையகத்தின் ஊழியர்கள், விற்பனை ஆலோசகர்கள், பிரிவு தலைவர்கள், கிளை தலைவர்கள் மற்றும் மாவட்ட ரீதியாகவுள்ள 250 கிளை கள் என்பனவற்றின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். கம்பனியின் கடந்தாண்டு உயர் பெறுபேறுக்கு காரணமாக இருந்தவர் கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர் அத்தோடு சிறந்த திறமையை வெளிப்ப டுத்தியவர்கள் பல்வேறு விருதுகளையும் வென்றனர்.

படவிளக்கம்:

சிறந்த கிளை தலைவர் (முக்கிய பிரிவு) கொழும்பு வடக்கு ஐ கிளையின் எஸ்.தர் ஷன் (இடது) ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழ கத்தின் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவிடம் இருந்து தனது விருதை பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 02nd APRIL 2017